
KALKI 30.4.95 ரூ. 3.00


கல்கி



சாதனையாளர் ஸ்பெஷல்!

போன் : 405788/404351 "E" MAIL : 405503 ஃபேக்ஸ் : 091-44-402981

சத்யபாலா நிதி லிமிடெட்



(மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற பரஸ்பர சகாய "நிதி" நிறுவனம்)
H.O. சரவணா காம்ப்ளக்ஸ், No.36, பிள்ளையார் கோயில் தெரு,
பல்லாவரம், சென்னை-600 043.

பாதுகாப்பு பெட்டக வசதி உள்ளது

★ **பிக்சட்டெபாசிட்** : (வட்டிக்கு பின் தேதியிட்ட காசோலைகள்)

காலம்	46 நாட்கள்	90 நாட்கள்	6 மாதங்கள்	1 ஆண்டு	2 ஆண்டுகள்	3 ஆண்டுகள்	4 ஆண்டுகள்	5 ஆண்டுகள்
வட்டி	13%	14%	15%	17%	18%	19%	19½%	20%

வட்டி - **21%** குறைந்தபட்ச டெபாசிட் ரூ. **50,000/-** காலம் **5** ஆண்டுகள்

சேமிப்புக் கணக்கு
வட்டி 10% P.A.
குறைந்தபட்ச இருப்பு ரூ. 100/-

★ கனகதாரா டெபாசிட் திட்டம்

டெபாசிட்	ஆண்டுகள்	திரும்ப கிடைக்கும் தொகை
750	21	45,000
2500	25	2,50,000
5,000	15	75,000
7,500	12½	75,000
10,000	10	60,000
15,000	17½	3,75,000

★ சத்யபாலா மறு முதலீட்டுத் திட்டம்

டெபாசிட்	மாதங்கள்	திரும்ப கிடைக்கும் தொகை
5,000	45	10,000
5,000	68	15,000
5,000	90	20,000

★ **R.D.** திட்டத்தில்: ரூ. 100/- வீதம் 60 மாதங்களுக்கு செலுத்தி ரூ. 10,000/- பெறலாம்.

குழந்தைகளுக்கான சிறப்பு R.D. திட்டத்தில் 2-வது தவணை எமது அன்பளிப்பு.

★ ஸ்ரீ ராமகிருஷ்ணா மில்லியனர் டெபாசிட் திட்டம்:

டெபாசிட் ரூ. 50,000/- செலுத்தி 5வது ஆண்டு முடிவில் ரூ. 50,000/- திரும்பப் பெறுவீர். அதன்பின் 15-வது ஆண்டு முடிவில் ரூ. 10 லட்சம் பெற்று மில்லியனர் ஆகிடுவீர்.

திருமகள் உடனடி வட்டித் திட்டம் :

டெபாசிட் ரூ. 5000/- ஒரு வருட வட்டி ரூ. 725/- ஐ உடனடியாகப் பெற்றிடுவீர்.

★ பால சுவாமி பென்ஷனர் நலத் திட்டம்:

ரூ. 10,000/- க்கு மேல் ரூ. 25,000/- க்கு குறைவாக-18 மாதங்களுக்கு-வட்டி 19%
ரூ. 25,000/- மும் அதற்கு மேலும் -30 மாதங்களுக்கு - வட்டி 20%

★ ஸ்ரீ பாலாஜி மணிபேக் டெபாசிட் திட்டம்:

ரூ. 7500/-ஐ 15 ஆண்டுகளுக்கு டெபாசிட் செய்தால் 5 ஆம் ஆண்டு முடிவில் ரூ. 7500/- ம், 10 ஆம் ஆண்டு முடிவில் ரூ. 7500/- ம் பெறலாம். மேலும் 15 வது ஆண்டு முடிவில் ரூ. 50,000/- மும் திரும்பப் பெறலாம்.

★ **கடன் :** குறைந்த வட்டிக்கு சுலப தவணையில் நகைக்கடன் (கி-350/-வரை) மற்றும் நிலம், வீடு அடமானக் கடன். (தமிழ்நாட்டில் உள்ள சொத்து மேல் மட்டும்) (உச்சவரம்பு இல்லை)

தலைவர்: நீதிபதி G. இராமானுஜம்(Retd.)
செயலாளர்: K. இந்திராணி, M.A.,B.Ed.
நிர்வாக ஆலோசகர்: ஆடிட்டர் G. கனகராஜ் B.Com.,F.C.A.

இயக்குனர்கள் : R. அன்பரசு, M.P., R. சேதுராஜன், G. சுப்பாராஜ், M.Tech, K.S. வெங்கடசாமி, Engr. (Civil)
R. கிருஷ்ணம்மாள், R. ரமேஷ், B.E., T.R.S. சித்ரா, D. பாலகிருஷ்ணன், P.P. அர்ஜுனராஜா,
Dr. V. ஜெயக்குமாரன் M.B.B.S., D.C.H.

இதர குருப் நிறுவனங்கள்:

சத்யபாலா பைனான்ஸ் லிமிடெட் : (Deposits, Hire Purchase, Leasing, Loan on Shares, Bill Discounting)
சத்யபாலா பைனான்சியல் சர்வீசஸ் : (OTCEI Dealer, Stock & Share Brokers, Port Folio Managers,Loan Syndication)

கிளைகள் :

இராஜபாளையம்
எண். 402, தென்காசி ரோடு,
2-வது மாடி
(சிங்கையா தேவர் ஆஸ்பிடல் எதிரில்),
போன் :

சென்னை - மேற்கு மாம்பலம்
ஸ்ரீ சுஜாதா காம்ப்ளக்ஸ்
எண்.18, 3வது மெயின் ரோடு,
போஸ்டல் காலனி, சென்னை-600 033.
போன் : 4825508

சென்னை - பட்டாபிராம்
எண். 488, M.T.H. ரோடு,
(நாகவல்லியம்மன் கோயில் எதிரில்)
சென்னை - 600 072
போன் :

மேலும் ஓய்வூதியம், கல்வி, திருமணம், தினசரி சேமிப்பு, ஆகிய சிறப்புத் திட்டங்களுக்கு எங்களை அணுகுவீர்.

எங்கள் சேவை எங்கள் உறுப்பினர்களுக்கு மட்டுமே. (உறுப்பினராகக் கட்டணம். ரூ. 5/-)

நிறைவான சந்தோஷத்திற்கு ! நிம்மதியான வாழ்க்கைக்கு !! நாடுங்கள் உங்கள் சத்யபாலாவை !!!




பெரியார் இட்டுக் கொண்ட திருநீறு!

குன்றக்குடி அடிகளார் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அடிகளாரின் இயற்பெயர் அரங்கநாதன். தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் என்பது ஆதீனப் பெயர்.

- அடிகளார் பண்டார சந்நிதியாகப் பொறுப்பு வகித்த மடத்தின் பெயர் திருவண்ணாமலை மடம். இந்த மடத்துக்கு ஐந்து கோயில்கள் உண்டு. அவற்றில் குன்றக்குடி முருகன் கோயில் தான் பெரிய கோயில். மடத்தின் ஆதீனகர்த்தர் குன்றக்குடியில் தங்கியிருந்தபடியால் குன்றக்குடி மடம் என்று பிரபலமாயிற்று.

- அடிகளார் ஆதீனகர்த்தர் ஆன சமயத்தில் தமிழகமெங்கும் பெரியாரும் அண்ணாவும் தங்களது நாத்திக வாதத்தால், மக்களைக் கலக்கி வந்தார்கள். அடிகளார் தனியொருவராய், சுற்றுப் பயணம் செய்து நாத்திகவாதம் தவிடு பொடியாகும்படி பிரசாரம் செய்தார். அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பை ஏற்படுத்தி தெய்வப் பணி புரிந்தார். தமிழக மேடைகளில் தமிழ் மொழி மேலும் சிறக்க பட்டி மன்றம், வழக்காடு மன்றம் போன்றவற்றை நடத்திக் காட்டினார். பெரியார் மலேசியா சென்றபோது, அவர் பிரசாரத்தை முறியடிக்க மலேசியாவுக்கு அடிகளாரை அனுப்பி வைத்தனர் தமிழக ஆதீனகர்த்தர்கள்!

- இப்படி எதிரும் புதிருமாக இருந்த பெரியாரும் அடிகளாரும் ஒரு கால கட்டத்தில், மனத்தளவில் நெருங்கினார்கள். ஆனால் கொள்கைகள் அப்படியே இருந்தன. ஒருமுறை குன்றக்குடிக்கு வந்த பெரியாருக்கு வரவேற்பின் போது திருநீறும் குங்குமமும் வைத்து விட்டார்கள். நாத்திகவாதியான பெரியார் வரவேற்பு முடியும் மட்டும் பக்தராகவே காட்சியளித்துக் கொண்டிருந்தார். "நான் திருநீறு வைத்துக் கொண்டிருப்பது அடிக



"எட்டு வயசுப் பையனை எல்.கே.ஜி.யில் சேர்த்துக்கணுமா? முடியவே முடியாது!"

"க்யூவில் வந்து நிக்கும் போது சத்தியமா இவனுக்கு நாலு வயசு தாங்க!"

— வேதா ரி எஸ். ரமேஷ்



"டேய் லீவு விட்டாச்சுல்ல, என்ன பண்ணப் போறே?"

"எங்கப்பாவுக்கு உதவியா இருப்பேன்."

"உங்கப்பா என்ன பண்றார்?"

"சும்மா இருக்கார்."

— வி. கௌரி



"இன்னும் இரண்டு மாசத்துக்கு இங்கே பிச்சை எடுக்க வர மாட்டியா, ஏன்?"

"வெயில் காலம் ஆரம்பிச்சிடுச்சு இல்லையா தாயி. ஊட்டி, கொடைக் கானல்னு போய் பிச்சை எடுக்கலாம்னு இருக்கேன்."

— வெ. ராஜாராமன்

ளாருக்குச் சந்தோஷத்தை கொடுத்தால் எனக்கும் சந்தோஷமே" என்றார் பெரியார்!

● வடலூர் தைப்பூச விழாவின் போது, "கடவுள் இல்லை என்று பேசிக் கொண்டிருக்கும் பெரியாரிடம் நீங்கள் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பது சரிதானா?" என்று மக்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள்.

"அவருடன் தொடர்பு இருப்பதாலேயே அவர் கொள்கையை ஏற்றுக் கொண்டது போல் ஆகி விடாது. இந்தச் சமயத்தில் நீங்கள் ஜாதி வேற்றுமைகளை மறந்து செயல்பட்டுக் காண்பியுங்கள்; பெரியாரையே கோயிலுக்கு அழைத்து வருகிறேன்" என்றார் அடிகளார்.

● 1965-ம் ஆண்டு இந்தி மொழியை எதிர்த்து தமிழ்நாடே பற்றி எரிந்து கொண்டிருந்த நேரம். அப்போது குன்றக்குடியில் தமிழ்க் கொடி ஏந்தி தடையை மீறி ஊர்வலம் போனார் அடிகளார். கைதானார்.

"ஒரு ஆதீனகர்த்தர் இப்படிச் செய்யலாமோ" என்று பக்தவத்சலம் சட்டமன்றத்தில் கேட்டார். கோர்ட்டில் அடிகளாருக்கு 350 ரூபாய் அபராதம் போட்டார்கள். பின்னர் அண்ணா ஆட்சிக்கு வந்த போது அடிகளார் கட்டிய அபராதம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. "அடிகளார் தண்டிக்கப் பட்டால் அது தமிழ்மொழி தண்டிக்கப்பட்டாற்போல" என்றார் அண்ணா.

● கலைஞர் ஆட்சியில் அடிகளார் மேலவை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

● மக்களிடம் வறுமையை ஒழிக்க வேண்டுமென்றால் வீட்டுக்கொருவருக்கு கண்டிப்பாக வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று அடிகளார் நினைத்தார். அந்த அடிப்படையில், காரைக்குடியில் இருந்த மின்-ரசாயன ஆராய்ச்சிக் கழகத்தோடு இணைந்து செயல்பட்டு, குன்றக்குடியில் தொழிலகங்களைத் துவங்கினார். மறைந்த பிரதமர் இந்திரா காந்தி திட்டக் கமிஷனுக்கு ஒருமுறை குறிப்புகள் எழுதிய போது 'இந்தியாவின் ஒவ்வொரு கிராமமும் குன்றக்குடியாக மாற வேண்டும்' என்று எழுதினார்!

தொகுப்பு : ஸ்ரீநிவாசன்

ஆயிரம் ஆண்டு
அருந்தவ மாற்றி - தமிழ்த்
தாயவள் ஈன்ற
தேவனே!
கலைத் திறமெல்லாம்
கண்களில் காட்டி - புவி
மலைத்திட வைத்த
மன்னனே!

உலகம் முழுதும்
உச்சியில் வைத்து - நடிகர்
திலகமென்றேத்தும்
கலைஞனே!

சிம்மக் குரலால்
செந்தமிழ்த் தேனை - எங்கள்
சிந்தையில் வார்க்கும்
தமிழனே!

புத்தகம் போலே



பல்லாண்டு வாழ வைப்பாள் பராசக்தி தாயே!

கவிஞர் வாலி

புதியவர்க்கெல்லாம் - கலை
வித்தகம் காட்டும்
சித்தனே!

மேடையில் தொடங்கி
வெண்திரை வரையில் - விழி
ஜாடையில் பேசும்
மேதையே!

வராமலே வந்துதித்த
மாமணியே! வருக! இந்தத்
தராதலம் வணங்குகின்ற
தூமணியே! வருக!

செவாலியர் விருது பெற்ற
சிவாஜியே! வருக! - தமிழ்ச்
சொல்லாளும் கவிதையைப் போல்
பல்லாண்டு வாழ்க!

என்றும்
பார்த்தால் பசி தீரும் நல்ல
பாலும் பழமும் நீ - இந்த
தேசமெல்லாம் வாசம் வீசும்
பாசமலர் நீ!

கால காலம் ஒலித்திருக்கும்
ஆலயமணியே - பிறர்க்கு
கர்ணன் போல கைகொடுத்த
தெய்வம் நீயே!

உன் வரலாறு நிலைத்து நிற்கும்
வசந்த மாளிகை! உனக்கு
வழங்குகின்றோம் அதனால்தான்
முதல் மரியாதை!

இமயம் போல எழுந்து நிற்கும்
உயர்ந்த மனிதனே - எங்கள்
இதய வானில் சிறகடிக்கும்
புதிய பறவையே!

விஸ்வ ரூபம்
நீயே! நல்ல
அமரதீபம் நீயே!

அன்பு; ஆசை;
நிறைந்திருக்கும்
அன்னை இல்லம்
நீயே!

நீ பாரதியார் போற்றுகின்ற
பலே பாண்டியா! இங்கு
காலமெல்லாம் மானம் காக்கும்
கவரிமானய்யா!

படிக்காத
மேதையே! நல்ல
பசும் பொன்னும்
நீயே! உன்னைப்
பல்லாண்டு
வாழ வைப்பாள்
பராசக்தி
தாயே!

நடிகர் திலகத்துக்கு 'செவாலியர்' விருது வழங்கிய விழாவில்
கவிஞர் வாலி எழுதி, விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைத்து,
பாடப் பெற்ற பாடல் இது!

● எமர்ஜென்ஸியின்போது தலைமறைவு வாழ்க்கை நடத்தியபடி ஜனநாயக முறையில் இந்திரா காந்தியை எதிர்த்துப் போராடியது;

● சீனாவுடனும் இஸ்ரேலுடனும் இந்தியா நல்லுறவு கொள்ள வற்புறுத்திச் செயல்படுத்தியது;

● சீனாவிலுள்ள கைலாஷ்-மானசரோவருக்கு இந்தியர்கள் பாதுகாப்பாக யாத்திரை போய்வர வழிவகை செய்தது;

● மத்திய வர்த்தக அமைச்சராக இருந்தபோது சுதந்திரப் பொருளாதாரக் கொள்கைகளுக்கான யோசனைகள் வகுத்து வலுவான அடித்தளம் அமைத்தது...

-இப்படி நீளும் சு.சுவாமியின் சாதனைப் பட்டியலில்

● 'தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டது...'

என்ற வாக்கியமும் சேருமா...?

அனல் பறக்கும் அவர் பேட்டியைப் படித்துவிட்டு நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!

கல்கி:- தேசிய அளவிலும் பல மாநிலங்களிலும் ஊழல்கள் நடக்கும் போது, தமிழ் நாட்டின் மீது மட்டும் உங்களுக்கு ஏன் தனி அக்கறை?

சுவாமி:- எல்லா மாநிலங்களிலும் ஊழலை எதிர்த்துப் போராட எனக்கும் ஆசைதான். ஆனால் அதற்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். ஏதேனும் ஒரு இடத்தில் ஊழலை எதிர்த்து நான் வெற்றி கண்டால்தான் மக்களுக்கு நம்பிக்கை வரும். அந்த வெற்றியைக் கைவசம் வைத்துக் கொண்டு வேறு மாநிலங்களுக்குச் சென்று போராடலாம்.



கல்கி:- ஜெயலலிதா மீதுள்ள வெறுப்பு காரணமாகத்தான் நீங்கள் தமிழ்நாட்டில் இந்தப் பணியில் இறங்கியிருப்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக, 1991ம் ஆண்டு அ.தி.மு.க. ஆதரவுடன் நீங்கள் பாராளுமன்றத்துக்கு நிற்க விரும்பியதாகவும் ஆனால் ஜெயலலிதா, உங்களுக்கு ஆதரவு தர முன்வரவில்லை என்றும், அதனால்தான் உங்களுக்கு அவர் மீது கோபம் என்றும் சொல்கிறார்கள். தவிர, முதல்வரான பின் அவரைப் பார்க்க நீங்கள் நேரம் கேட்டபோது, கொடுக்க மறுத்து விட்டதாலும் உங்களுக்கு கோபம் என்றும் கூறப்படுகிறதே!

சுவாமி:- இது ஜெயலலிதாவின் பிரசாரம். அதே பிரசாரத்தைத் தான் நீங்கள் கேள்வியாகக் கேட்கிறீர்கள். எனக்கு ஸீட் கொடுக்க அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? நான் பம்பாயிலிருந்தும் உத்தரப் பிரதேசத்திலிருந்தும் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். 1991ல் தேர்தல் நடக்க இருந்தபோது நான் அமைச்சராக இருந்தேன். அப்போது காலைத் தொட்டு, கெஞ்சி உதவி வாங்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்த அவரிடமா நான் பாராளுமன்ற ஸீட் கேட்பேன்? மேலும் அந்த சமயத்தில் எனக்கு ராஜ்ய சபா பதவிக்காலம் மூன்று வருடங்கள் பாக்கி இருந்தது... ஜெயலலிதாவின் பொய்ப் பிரசாரத்தை நம்பி நீங்கள்கூட இப்படிப்பட்ட கேள்வி கேட்பது தான் ஆச்சர்யமாக இருக்கிறது.

கல்கி:- எங்களுடைய கவலை அல்லது சந்தேகம் என்னவென்றால் உங்களு



சந்திரலேகா போன்ற அனுபவம் பெற்ற நல்லவர்களைக் கட்சியில் சேர்த்துக் கொண்டிருக்கிறேன். மக்கள் கஷ்டங்களை உணர்ந்து அறிந்தவர் சந்திரலேகா. அரசுப் பணியில் இருந்தபோது நல்ல பெயர் வாங்கியவர். துணைத் தலைவராக வழக்கறிஞர் ஸ்ரீதரன் இருக்கிறார். இப்போது பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஸ்ரீதரனைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படி டாக்டர்கள், வழக்கறிஞர்கள் என்று படித்த நல்லவர்களை இணைத்துப் புதிய தலைமையை உருவாக்க முயற்சி செய்கிறேன்.

சாதனை சுவாமிக்கு ஏன் சோதனை சுவாமி!

டைய ஊழல் ஒழிப்பு இயக்கம், ஜெயலலிதாவைப் பொறுத்த வரை ரொம்ப பர்ஸனலாக ஆகிவிட்டதோ என்பதுதான்!

சுவாமி:- எனக்கு தனிப்பட்ட முறையில் என்ன விரோதம் இருக்கிறது? ஜெயலலிதா தமிழ்நாட்டைப் பீடித்துள்ள ஜுரம். அவரால் அரசியல் கலாசாரமே தரம் தாழ்ந்து போயிருக்கிறது. அந்த ஜுரத்தை ஒழிப்பது தான் என் வேலை!

கல்கி:- ஒரு நல்ல மாற்றுத் தலைமை இங்கு உருவாக நீங்கள் ஆக்கபூர்வமாக எடுத்த முயற்சிகள் என்ன?

சுவாமி:- பாஸிடிவ்வாக நான் என்ன செய்ய முடியும்?

கல்கி:- டாக்டர் ஸ்ரீதரன் மீது குற்றச் சாட்டுக்கள் இருக்கும்போது அவரை நீங்கள் சேர்த்துக் கொள்ளலாமா?

சுவாமி:- என்ன சார்ஜ் இருக்கு அவர் மேல்? கட்சித் தலைமை சொன்னதைக் கேட்டு விமான நிலையத்துக்குப் போனார். ஒரு ஐ.பி.எஸ். அதிகாரி, (கடத்தல் பொருட்கள்) டிராலியைத் தள்ளிக் கொண்டு வந்தார். அவரை விட்டு விட்டு, எந்தவிதமான பின்பலமும் இல்லாத அப்பாவியான டாக்டர் ஸ்ரீதரன் மீது அனைத்துப் பழிகளையும் போட்டு கைது செய்தார்கள். இதற்குப் பயங்கரமான உள் நோக்கம் இருந்தது. விவகாரத்தின் தீவிரத்தைத் தெரிந்து கொண்டு இடையில் புகுந்து அவருக்குப் பாதுகாப்பு கொடுத்தேன். எமர்ஜென்ஸி சமயத்தில், இந்திராகாந்தி என் மீது பல்வேறு பொய் வழக்குகள் போட்டார். அதனால் நான் குற்றவாளி ஆகிவிட்டேனா? அதுபோல்தான் ஸ்ரீதரன் விஷயமும்.

கல்கி:- நீங்கள் காபினெட் அந்தஸ்துடன் இடம்பெற்றிருக்கும் Commission on Labour standards and International tradeன் பணி என்ன? அந்தப் பதவியை வைத்து நீங்கள் துஷ்பிரயோகம் செய்வதாக முதல்வர் சொல்லியிருக்கிறாரே!

சுவாமி:- உபயோகம், துஷ்பிரயோகம் இவற்றைப் பற்றி ஜெயலலிதாவுக்கு என்ன தெரியும்? என்னோட வேலை என்ன? எல்லா ஊர்களுக்கும் போய், குழந்தைத் தொழி



எழுத்தாளர்கள் கவனிக்க.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு கதைகள் அனுப்ப கடைசி தேதி ஜூன் 15.

முழு விவரங்களுக்குப் போன வார கல்கி பார்க்கவும். அல்லது, அடுத்த வாரம் வரை காத்திருக்கவும்.

- ஆசிரியர்.

லாளர்கள் மற்றும் அடிமைத் தொழிலாளர்களின் நிலையை ஆராய்ந்து அவர்களை விடுவிக்க சட்ட பூர்வமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்பதுதான். எல்லா மாநிலங்களிலும் இதைச் செய்கிறேன். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் ஜெயலலிதா என்ன செய்திருக்கிறார்? எந்த கலெக்டரும் என்னை சந்திக்கக் கூடாது என்று தடை விதித்து இருக்கிறார். லட்சுமி பிராணேஷ் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி, இது விஷயமாக என்னைச் சந்தித்தார். இரண்டாம் நாள் அவரை மாற்றி விட்டார் ஜெயலலிதா. நான் misuse செய்கிறேன் என்று சொல்ல இவருக்கு என்ன தகுதி இருக்கிறது? 'நான் என்ன வேலை செய்கிறேன்' என்று இவருக்குத் தெரியுமா? GATT என்றால் புரியுமா? பிரதமருக்குக் கடிதம் எழுதி விட்டால் பயந்து விடுவேனா? பிரதமர் பதில் கொடுத்து விட்டுப் போகிறார். என் பணி சம்பந்தமாகப் பல வெளிநாடுகளுக்குப் போய் சர்வதேச பொறுப்பாளர்களைச் சந் தித்து விட்டு வந்தேன். நமது நாட்டில் தொழிலாளர்கள் நிலை பற்றி ஒரு இடைக்கால அறிக்கை தயாராக இருக்கிறது. பிரதமருடன் விவாதம் நடக்க இருக்கிறது. இவைகளெல்லாம் பற்றி ஜெயலலிதாவுக்கு என்ன தெரியும்?... எனக்கு 'ப்ரோடோகால்'படி ஜெயை விட அதிக மரியாதை தரவேண்டுமென்பதால் அவருக்கு வயிற்றெரிச்சல். தமிழ் நாட்டை விட்டு 'இந்த சுவாமி தொலைய மாட்டானா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தியாவில் எல்லாம் கெட்டுப் போயிருப்பதால் ஜெயைப் பார்த்து பயந்து ஒதுங்கி, பலர் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால் சுவாமி பயந்து ஓடுபவனல்ல!

கல்கி:- நீங்கள் ஜெயலலிதா பேரில் சொல்லுகிற ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு, மக்கள் மத்தியில் இருந்து எந்த விதமான ரீ - ஆக்ஷன் வருகிறது?

சுவாமி:- எங்கள் பொதுக் கூட்டங்களைப் பார்த்தால் உங்களுக்குப் புரியும். ஆயிரக் கணக்கில் திரண்டு விடுகிறார்கள். 'நீங்கள் தான் சொல்ல முடியும்; ஜெயை எதிர்க்க உங்களுக்குத் தான் தைரியம் இருக்கு' என்று கடிதங்கள், போன்கால்கள் வருகின்றன!

கல்கி:- உங்கள் இயக்கத்துக்குப் பண பலம் தேவையாயிற்றே! உங்களுடைய source என்ன?

சுவாமி:- மகாத்மா காந்திக்கு எப்படி ஸார் பணம் கிடைத்தது? மக்கள்கிட்ட கேட்டு கேட்டுத்தான் சேர்த்தார்.


கல்கி:- அலுவலகம் இருக்கும் இந்த பங்களாவை ஒரு கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறீர்கள்...!

சுவாமி:- நான் வாங்கவில்லை! என் பம்பாய் நண்பர் வாங்கிக் கொடுத்திருக்கிறார். இதில் எதுவும் 'கறுப்பு' விவகாரம் கிடையாது. .எல்லாம் செக் பேமெண்ட் தான். ஏதாவது 'கசமுசா' இருந்தால் இத்தனை நேரம் ஜெயலலிதா சும்மாயிருப்பாரா? என்னுடைய நடவடிக்கைகள், செயல்கள் எல்லாம் திறந்த புத்தகம். இல்லையேல் ஊழல் அரசியல்வாதிகளை எதிர்த்து இயக்கம் நடத்த முடியுமா? பெரிய தொழிலதிபர்களிடம் பணம் வாங்கி இயக்கம் நடத்துகிறேன். ஆனால் ஒரு சகாயமும் அவர்களுக்கு செய்வதில்லை. எனக்குக் காசு சேர்க்கும் ஆசை இருந்திருந்தால் அமெரிக்காவில் பேராசிரியராக எக்கச்சக்கம் சம்பாதித்துக் கொண்டிருந்ததை விட்டு விட்டு இங்கு வந்திருக்க மாட்டேன்.

கல்கி:- நீங்கள் அமெரிக்கா என்று சொன்னதும் ஒரு கேள்வி. உங்களை 'சி.ஐ.ஏ ஏஜெண்ட்' என்று பலர் கிசுகிசுக்கிறார்களே!

சுவாமி:- யார் சொன்னது? பரவலாகச் சொல்கிறார்கள்; பொதுமக்கள் பேசுகிறார்கள் என்றெல்லாம் பேசக்கூடாது. நீங்கள் ஒரு சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என்று நான்கூடச் சொல்லலாம்! இப்படித்தான் ஜெ.பி.யைச் சொன்னார்கள். மொரார்ஜியைச் சொன்னார்கள். சமீபத்தில் சேஷன், அண்ணாவை சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என்றார். சும்மா, யாரோ ஏதோ சொன்னார் என்று வம்பைப் படித்துக் கொண்டு வர்றீங்க...

கல்கி:- ஊழலை ஒழிக்க இயக்கம் நடத்துவது என்பது ஒரு நல்ல வழிகாட்டு





· சிவசங்கரன்

தமிழிசைத் தம்பி!

மற்ற பையன்கள் 'முகாபுலா' பாடும்போது இவன்
'மாதர்பிறை கண்ணியானை' என்று பாடுகிறான்;
மற்ற சிறுவர்கள் டி.வி.யில் கிரிக்கெட் மாட்சைக்
கண்கொட்டாமல் பார்க்கையில் இந்த பத்தாம் கிளாஸ்
பையன் கோயில்களில் சைவத் திருமுறைகள் பாடி
கச்சேரி செய்கிறான்.

பெயர் சிவசங்கரன்! மஹரிஷி வித்யா மந்திரில்
படிக்கிறான். அங்கே எல்.கே.ஜி பருவத்தில் சொல்லித்
தந்த பஜன்களை வீட்டில் பாடக் கேட்ட பெற்றோர், சிவ
சங்கரனின் குரல் இனிமையை அடையாளம் கண்டார்
கள். அப்பா தாமோதரன் அவனை சபா ரத்தின தேசி
கரிடம் அழைத்துப் போனார். அவரோ இளைய தலை
முறையில் ஒரு மாணவன் கிடைத்த மகிழ்ச்சியில் மனம்
நிறைந்து போய் டியூஷன் ஃபீஸ் கூட வாங்க மறுத்தார். அவருக்குப் பிறகு சாமி தண்டபாணியும்
கர்நாடக இசைக்கு நெய்வேலி சந்தானகோபாலனும் குருமார்களாக அமைந்தார்கள்.
தமிழிசை கற்பதற்காக CCRT ஸ்காலர்ஷிப் [தேசிய அளவில்] பெற்றுள்ள சிவசங்கரன்,
நூறுக்கும் மேற்பட்ட திருமுறை நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டின் பல்வேறு கோயில்களிலும்
நிகழ்த்தியிருக்கிறான். சமயத்தில் தியாகராக பாகவதர், சி.எஸ். ஜெயராமன் குரல்களிலும்
பாடுகிறான். 'சொப்பன வாழ்வி'லும் 'வான் நிலவே'வும் நேயர் விருப்பமாகச் சில
கச்சேரிகளில் பாட வேண்டியிருக்கிறதாம்!
படிப்பிலும் கட்டிதான். "ஐ.ஏ.எஸ். படித்து காலக்டராகி விடுவேன்!" என்கிறான்!

– சிஷ்யா

தல் நெறி. ஆனால் காங்கிரஸில்லாத மாநில முதல்வர்கள் ஏன் ஜெ.வுக்குப் பரிந்து வருகிறார்கள்?

ஸ்வாமி:– அவர்களுடைய ஊழல் பற்றி நிறைய விஷயம் எனக்குத் தெரியும் என்பது அவர்களுக்குத் தெரியும்! ராமராவ், சமீபத்தில் மின் திட்டங்களுக்காகக் கையெழுத்திட்ட 46 M.O.U. க்களில் 21 கோடி கமிஷன் வாங்கியிருக்கிறார். அதே போல் தேவேகௌடா குடியிருப்பு வீடுகள் கட்டுவதில் ஊழல் செய்திருக்கிறார். ஜெயலலிதா இவர்களுக்கு போன் செய்து ஆதரவு கேட்டிருக்கிறார். தவிர தேவேகௌடாவிடம் 'அடுத்த தேர்தல் வரை காவிரிப் பிரச்னையைக் கிளப்ப மாட்டேன்' என்று வாக்குறுதி வேறு கொடுத்திருக்கிறார்.

கல்கி:– நீங்கள் கூறும் ஊழல் குற்றச்சாட்டுகளை மத்திய அரசு கண்டு கொள்ளாததற்குக் காரணம், பிரதமரின் கரங்கள், அவரது குடும்பத்தினரால் கட்டப் பட்டிருப்பதுதான் என்று சொல்லப்படுகிறதே!

ஸ்வாமி:– பிரதமர் மெதுவாகத்தான் நடவடிக்கைகள் எடுப்பார். slow action type. அதனால் இது போன்ற பொய்ப் பிரசாரங்கள் பரவி வருகின்றன.

கல்கி:– பிரச்னை இப்போது முழுப் பரிமாணம் பெற்று வருகிறது. இந்த மாதிரி நேரத்தில் கவர்னரை மாற்றி விடுவார்கள் என்று சொல்லப்படுகிறதே!

ஸ்வாமி:– மாற்றிப் பார்க்கட்டுமே!

கல்கி:– அடுத்து வரும் கவர்னர், சென்னா ரெட்டி கொடுத்த அனுமதியை ரத்து செய்தால்?

ஸ்வாமி:– சென்னா ரெட்டி செய்த தவறென்ன? யாருக்குத் தைரியம் இருக்கு அவரை மாற்ற? இந்த கவர்னரை மாற்றி விட்டால் பிரதமர் நரசிம்மராவ் பதவியில் நீடிக்க முடியுமா?

கல்கி:– கோர்ட் என்று போனால், முடிவு வரத் தாமதமாகும். அதற்குப் பதிலாக ombudsman போன்ற அமைப்பை-நடுவரை நியமிக்கலாமே!

ஸ்வாமி:– ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வது தான் சரி. ஏனென்றால் ombudsman அமைப்பில் தினசரி விசாரணை சாத்தியமில்லை. ஒரு பொது சட்டத்தைப் பயன்படுத்தி ஊழல் அரசியல்வாதியைத் தண்டிப்பது தான் சரி!

கல்கி:– எந்த கோர்ட்டோ அல்லது விசாரணைக் கமிஷனோ ஊழல் செய்த அரசியல்வாதிகளுக்குத் தண்டனை கொடுத்ததாக வரலாறு இல்லையே.

ஸ்வாமி:– கையாலாகாதவர்கள் போல் நாம் அழுது கொண்டிருக்கக் கூடாது. ஜன


சரவணா பில்டர்ஸ் (பி) லிட்.,
சரவணா பெனிபிட் பண்ட் லிட்.,
சரவணா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.,
விழாக்கால வெகுமதி
தமிழ்ப் புத்தாண்டை
முன்னிட்டு உங்கள் முதலீட்டிற்கு
26% வட்டி + 3% ரொக்க ஊக்கத் தொகை
30.4.1995 வரைமட்டுமே.
மாதம், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு
வட்டி பின் தேதியிட்ட காசோலைகளாக
முன்னதாகவே வழங்கப்படுகின்றது.
வாடிக்கையாளர்களின்
வசதியை முன்னிட்டு
ஆதித்யா ஆர்கேட்,
55, முதல் மெயின் ரோடு,
காமராஜர் அவென்யூ,
கஸ்தூரிபாய் நகர்,
அடையாறு, சென்னை - 20 ல்
எங்கள் புதிய கிளை
செயல்பட்டு
வருகிறது என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்து கொள்கிறோம்.
சரவணா
கிரெடிட் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
சிட்டி செண்டர் பிளாசா (முதல் மாடி) (எல்லீஸ் ரோடு முனை)
3, மவுண்ட் ரோடு, சென்னை - 2. போன்: 848486, 845462, 833828
சரவணனை நம்பினோர் வளம் பெறுவர்
சரவணாவில் முதலீடு செய்வோர் மேம் பெறுவர்.



நாயகத்தில் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்க வேண்டும். செய்து காட்ட வேண்டும். சோர்ந்து போய்விடக் கூடாது. ஜனநாயகம் அப்போது தான் தழைக்கும். வன்முறை இல்லாமல் சட்டத்தைப் பயன்படுத்தி, ஜெயலலிதா போன்ற ஊழல் குற்றவாளியைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டாக வேண்டுமென்றுதான் நான் தொடர்ந்து போராடுகிறேன்.

கல்கி:- வன்முறை என்று சொன்னதும், ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு ஞாபகத்துக்கு வருகிறது. 'ராக்கெட் ஏவி அவரைக் கொன்றுவிட முடியும்' என்று சொன்னீர்களா?

சுவாமி:- நான் என்ன சொன்னேன்? அந்தம்மா வன்முறையை ஏவி விடுகிறார்கள். இதற்குப் பதிலடியாக வன்முறையைப் பயன்படுத்தத் துவங்கினால் நாட்டில் ஜனநாயகமே இருக்காது. அகிம்சா வழியில் பெறும் வெற்றிதான் நிலைத்து நிற்கும். நான் ஒன்றும் கோழை அல்ல, டெல்லியில் தமிழ்நாடு இல்லத்தின் அருகில் தான் என் வீடு இருக்கிறது. நான் நினைத்தால் ராக்கெட் மூலம் அவரைத் தாக்க முடியும். ஆனால் நான் அப்படிச் செய்ய மாட்டேன். வன்முறைக்கு வன்முறை பதிலல்ல என்பது என் அழுத்தமான கருத்து' என்றுதான் நான் பேசினேன். வீடியோவில் கூட இருக்கிறது. ஆனால் சட்டத்திலிருந்து தப்பிக்கத்தான் நான் இப்படிப் பேசியிருக்கிறேன் என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்.

கல்கி:- ஜெயலலிதாவை எதிர்த்துத் தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகள் ஒருமுகமாகப் போராடும் முயற்சி எந்த அளவுக்கு இருக்கிறது?

சுவாமி:- இன்னும் பேச்சளவில் தான் இருக்கிறது. யாரைச் சேர்க்கலாம்; கூடாது என்பது பெரிய பிரச்னை. ஹிட்லரைத் தோற்கடிக்க, மாற்றுக் கொள்கைகளைக் கொண்ட ஸ்டாலினும் சர்ச்சிலும் ஒன்று சேரவில்லையா? பலபேர் அவர்களை 'இது எப்படிச் சாத்தியமாயிற்று?' என்று கேட்டார்கள். ஹிட்லர் இருக்கிறவரையில் கம்யூனிஸம், கேபிடலிஸம் எதுவுமே தலை தூக்க முடியாது. அவரை ஒழிப்பதுதான் முக்கியம். பின்னர் எந்த 'இஸம்' வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் என்று பதில் சொல்லப்பட்டது. அது போல இன்று தமிழ் நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டும் என்றால் ஜெயலலிதா பதவி விலக வேண்டும். அவரைப் பதவியிறக்கி விட்டுப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்... அதற்கென்று எல்லோருடனும் கூட்டுச் சேர்ந்து விட முடியாது- உதாரணமாக விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்ட வை.கோபால்சாமியோடோ அல்லது மதவெறியைத் தூண்டி நாட்டில் அமைதியைக் குலைக்கும் பா.ஜ.க. வோடோ எப்படிச் சேர முடியும்? வை.கோவும், எல். கணேசனும்தான் புலிகளுடன் நெருங்கித் தொடர்பு கொண்டு தி.மு.க.வின் பெயரைச் சேதப்படுத்தியவர்கள். அவர்கள் இப்போது அங்கு இல்லை. அதனால் என்னைப் பொறுத்தவரை தி.மு.க.வுக்கு மற்றொரு வாய்ப்பு கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

கல்கி:- அ.தி.மு.க.விலிருந்து 88 எம்.எல்.ஏக்கள் விலகிவரத் தயாராக இருக்கிறார்கள் என்று பேசி வருகிறீர்கள். அந்த எண்ணிக்கை ஏறியிருக்கிறதா? இறங்கியிருக்கிறதா?

சுவாமி:- ஏறிக் கொண்டு இருக்கிறது. இன்று கூட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.ஒருவர் போன் செய்து 'என் மனது உங்கள் பக்கம் தான் இருக்கிறது, உயிருக்கு அஞ்சித்தான் ஜெயலலிதாவின் தலைமையில் இருக்கிறேன்' என்று சொன்னார்.

கல்கி:- அ.தி.மு.க. உறவுக்காக ஜெயலலிதாவைப் பிரதமர் கண்டு கொள்ளாமல் போனால் உங்கள் நிலை?


சுவாமி:- நான் என் கருத்துக்களைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டுதானிருப்பேன். காங்கிரஸ் என்ன பண்ணினால் எனக்கென்ன கவலை? நான் என்ன காங்கிரஸ்காரனா?

கல்கி:- உங்கள் செயல்களின் பின்னணியில் ஒரு வலுவான இன்ஸ்பிரேஷன் இருக்க வேண்டுமே?

சுவாமி:- நமது நாடு உலகத்திலேயே சிறந்த நாடாக இருக்க வேண்டுமென்ற தேசிய உணர்வுதான் காரணம். தேசப்பற்றும் தேசிய உணர்வுமே அநீதிகளுக்கு எதிரான என் போராட்டத்தில் துணைநிற்கின்றன.

தொகுப்பு : **ப்ரியன்**

அட்டை வண்ணப்படம், படங்கள்: **காமெரா திருஞானம்.**





1995 ஏப்ரல் 30
யுவ சித்திரை 17
மலர் : 53
இதழ் : 39

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.




ஜெயாநாயகம் : ஜனநாயகத்துக்கு ஆபத்து!

'**வி**நாச காலம் - விபரீத புத்தி' என்பதற்கு ஏற்ப நடந்து கொள்ளும் தமிழக முதல்வர், ஜனநாயகத்துக்குப் பதில் ஜெயாநாயகத்தை இங்கு நிலை நாட்டுகிறார்!

ஜெயாநாயகம் நீதிமன்றத்திலேயே தன் கை வரிசையைக் காட்டுகிறது. சு. சுவாமியைத் தாக்கவும் கோஷங்கள் எழுப்பவும் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்பாடு செய்யப்படுகிறார்கள். அவர்கள் நீதி மன்றத்தின் செயல்பாட்டையே கல்லெறிந்து ஸ்தம்பிக்கச் செய்கிறார்கள்.

என்றோ பல மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பாக சு.சுவாமி பயன்படுத்திய, சட்ட ரீதியாக சர்வதேசத்திலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற ஓர் ஆங்கிலச் சொல், தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களைக் குறித்து அவமரியாதையாகப் பிரயோகிக்கப்பட்டதாக வழக்கு ஜோடித்து, அவரைக் கைது செய்ய முற்படுகிறது, முதல்வரின் ஆணவம்! (இந்த லட்சணத்தில் நமது முதல்வர் கான்வென்ட் பள்ளியில் ஆங்கிலத்திலேயே சகல பாடங்களையும் கற்றவர்!)


சாதனையாளர் சு.சுவாமி, சாமர்த்தியமாக உயர் 'நீதி' மன்றத்தில் தாற்காலிக



தடை பெற்று, இரவோடு இரவாகத் தப்பி டில்லிக்குப் பறந்து, உச்சநீதி மன்றத்தில் பாதுகாப்புப் பெறுகிறார். இதனால் கோபம் தலைக்கேற, கமிஷ்னர் ராஜகோபாலனைப் பலிகடா ஆக்குகிறார் ஜெ!

ஏதோ சினிமாவில் வில்லி ரோல் ஏற்கப் போவது போலவும் அதற்காகத் திரைக்கதை எழுதிக் கொண்டிருப்பது போலவும் ஜெயாநாயகம் நடத்தும் ஜெ., கேபிள் டீ.வி. உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் "ஜனநாயகத்துக்கு ஆபத்து" என்று ஒரு குரல் அழுதததுதான் வேடிக்கை. அவர் சினிமா வசனம் எழுதுவது போல் அ.தி.மு.க. ஆட்சியின் ராஜினாமாவை இங்கு யாரும் கோரவில்லை. முதல்வர் ராஜினாமா செய்து வழக்கை சந்திக்க வேண்டும் என்று மட்டுமே கோரப்படுகிறது.

பார்க்கப் போனால் ஜெயாநாயகத்தால்தான் ஜனநாயகத்துக்குப் பல ஆபத்துகள் நேர்கின்றன. ஜெ. மீது வழக்குத் தொடர அனுமதித்த காரணத்தால் பாண்டிச்சேரி செல்லும் வழியில் ஆளுனர் தாக்கப்படுகிறார்; போலீஸ் வேடிக்கை பார்க்கிறது, ஆளுனரே தட்டிக் கேட்கும் வரை. இதை அப்படியே மூடி மறைக்கும் முயற்சியில் "ஆளுனர் மீது தாக்குதலே நடக்கவில்லை" என்று ஒரு கோயபல் பிரசாரத்தை சட்டமன்றத்திலேயே நடத்துகிறார் முதல்வர்! எதிர்க்கட்சித் தலைவர் தட்டிக் கேட்க முற்பட்டால், "ஆளுனரை சர்ச்சைக்குரியவராக்கக் கூடாது" என்று சட்டமன்றத் தலைவர் சொல்கிறார். இங்கே ஆளுனர் பிரச்னையாக்கப்படவேயில்லை; அவர் மீது தாக்குதல் நடத்துவது முறையா என்ற



பிரச்னைதான் எழுப்பப்படுகிறது என்பது மறக்க (மறைக்க?)ப்படுகிறது. கடைசியில் எஸ்.ஆர்.பி. மீதே பழியைப் போட்டுவிட்டு, சட்டத்தையும் மரபுகளையும் புறக்கணித்து, ஆளுனரை சட்டமன்றத்திலேயே சர்ச்சைக்குரியவராக்கி, ஜெயும் ஜெ தாசர்களும் அலசோ அலசோ என்று அலசித் தீர்க்கின்றனர். போதாக் குறைக்கு ஆளுனர் விமான நிலையத்திலிருந்து திரும்பும்போது அவர் மீது கல்லெறியவும் முட்டைகள் எறியவும் சுண்ணாம்புக் கரைசல் நீர் கொட்டவும் அ.தி.மு.க. தொ(கு)ண்டர்கள் தயாராயிருந்தனர். அசம்பாவிதம் தவிர்க்க, ஆளுனர் வேறு வழியில் சென்றிருக்கிறார்.

இதே தினத்தில் சட்டமன்றத்திலேயே அமைச்சர் தென்னவன், எந்தப் பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள் தரப்படும், எப்படிப்பட்ட பத்திரிகைகளுக்குத் தரப்பட மாட்டாது என்று விளக்கி, ஜெயாநாயகக் கொள்கையை நிலை நாட்டியிருக்கிறார்; ஜனநாயகத்துக்கு குட்பை கூறியிருக்கிறார்.

இன்னும் எதிர்க்கட்சிகளை சட்ட மன்றத்தில் பேச அனுமதிக்காதது; ஹிந்து, ஜூனியர் விகடன் பத்திரிகைகளை மிரட்டுவது போல முதல்வரே விமர்சித்தது என்றெல்லாம் ஜெயாநாயகம் இங்கே கொடிகட்டிப் பறக்கிறது. நீண்ட பட்டியலே தரலாமென்றாலும் சட்ட ஒழுங்குச் சீர்குலைவும் லஞ்ச லாவண்யங்கள் விசுவரூபம் எடுத்திருப்பதும் ஜெயாநாயகத்தின் ஸ்பெஷாலிட்டி.

இவ்வாறெல்லாம் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகள் நீங்க, ஜெயாநாயகத்துக்கே ஆபத்து நேர்ந்தால்தான் உண்டு!

வற்றாத ஜீவநதியாய் வாரி வழங்கும்

கல்பதரு பெனிபிட் பண்ட்

விரல்விட்டு எண்ணக் கூடிய வகையிலே இருந்த பெனிபிட் பண்ட் நிறுவனங்கள் இன்று வெகுஜன ஆதரவோடு பல விமர்சனங்களையும் தாண்டிச் சிறப்பான முறையிலே சேவை செய்து வருகின்றன.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்ற அளவில் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கல்பதரு பெனிபிட் பண்ட் நிறுவனம் இன்று முதலீட்டாளர்களிடையே பரவலாகப் புகழ்ந்து பேசப்படும் நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

சென்னை கந்தகோட்டம் சீனியர் அறங்காவலரும், பார்க் டவுன் பெனிபிட் பண்ட் நிறுவனத்தின் கௌரவ ஆலோசகருமான திரு. P. பாலசுப்பிரமணியம் அவர்களின் திருக்கரத்தாலே தொடங்கப்பட்ட கல்பதரு பெனிபிட் பண்ட் நிறுவனம், பொது மக்களின் பொருளாதார மேம்பாடும் சேமிப்பும் உயர்வுற்ற வகையில் நேசக்கரம் நீட்டி சேவை உணர்வோடு செயல்பட்டு வருகிறது.

கல்பதரு என்றாலே இல்லையென்னாது வாரி வழங்கும் அற்புத விருட்சம் என்று இதிகாசங்கள் குறிப்பிடுகின்றன. கந்தகோட்ட முருகப் பெருமானை பிரம்மோத்சவத்தின் முதல் நாள் அன்று கல்பதரு வாகனத்தில் அலங்காரத் திருமேனியாய் ஆரோகணம் செய்வதே சிறப்புக்கு மேலும் சிறப்பு.

ஆர்வமும், அனுபவமும் இருந்தால்தான் எந்த ஒரு நிறுவனமும் சீராகச் செயல்பட முடியும். திட்டமிட்ட வெற்றியை எட்டிப் பிடிக்க முடியும். வங்கிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அனுபவம் முதிர்ந்தவர்கள் கல்பதரு பெனிபிட் பண்ட் நிறுவன இயக்குநர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

மக்களிடையே பணத்தேவையும் சேமிப்பும் அத்தியாவசியமாகிவிட்ட காரணத்தாலேதான் பெனிபிட் பண்ட் நிறுவனங்கள் பெருகி வருகின்றன. அந்த அடிப்படையில்தான் கல்பதரு பெனிபிட் பண்ட் நிறுவனமும் ஆரம்பிக்கப்பட்டது என்கிறார் இதன் சேர்மன் அரிமா எஸ். கிருஷ்ணன் அவர்கள்.

அரிமா எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஜார்ஜ் டவுன் கூட்டுறவு ஸ்டோர்களின் மானேஜராகவும், சென்னை ஏகாம்பரேஸ்வரர் ஆலய அறங்காவலராகவும் பணியாற்றுகிறார்.

இவரது தலைமையில் இயங்கும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ள திருவாளர்கள் பி. என். முத்து செட்டியார், வி. விஜயகோபால், பி. காம்., ஜி. ராமஷெனாய், பி.ஆர். பாலாஜி, வி. கோதண்டராமன், P.P. செந்தில்குமார் ஆகியோர் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதே லட்சியம் என்று ஒத்துழைத்துப் பணியாற்றுகின்றனர்.

மேலும் வி.எம். மோகனவல்லி, கே. ரேணுகா சந்தோஷ், பி.ஏ., ரஞ்சனி பாண்டியன், எம். பிரேமலதா, C. தனலக்ஷ்மி ஆகிய மகளிரும், இயக்குநர் குழுவில் இடம் பெற்றிருக்கின்றனர்.

வியாபார நோக்கமொன்றையே குறிக்கோளாகக் கொள்ளாமல் ஆன்மீகத் துறையில் பெரிதும் ஈடுபட்டு இறை பணியாற்றுவதும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றோர் அனைவர்க்கும் உள்ள தனிச் சிறப்பு.

கல்பதரு பெனிபிட் பண்ட், சுமார் பத்து திட்டங்களில் செயல்பட்டாலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் வாடிக்கையாளர்களை வசீகரப்படுத்தி இருப்பது ஜீவநதி டிபாசிட் திட்டமும், பிறந்தநாள் பரிசுத் திட்டமும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜீவநதி டிபாசிட் திட்டம்: இத்திட்டத்தில் எல்லோரும் பயன்பெறலாம். குறிப்பாகத் தொழிலாளர்கள் கூடப் பயன்பெற வாய்ப்புள்ளது. பிரதி மாதம் ரூ. 500 அல்லது அதன் பெருக்கத்திலோ 44 மாதங்களுக்குச் செலுத்த வேண்டும். 45வது மாதத்திலிருந்து நீங்கள் மாதந்தோறும் செலுத்திய தொகையைப் பிரதி மாதம் திருப்பிக் கொடுக்கப்படும். இத்தொகை நியமனதாரருக்கும் கிடைக்கும். ஓய்வு ஊதியம் போல உற்சாகத்தைக் கொடுக்கும்.

பிறந்த நாள் பரிசுத் திட்டம்: குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் குதூகலமாக. சிலர் சில ஆண்டுகள் மட்டும் கொண்டாடி விட்டு நிறுத்திவிடுவதும் உண்டு. உங்கள் வீட்டுக் குழந்தைகளின் நான்கு பிறந்த நாட்களில் தொடர்ந்து முதலீடு செய்தால் 5 வது பிறந்த நாளிலிருந்து ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் ரூ. 1000/- வாழ்நாள் முழுவதும் பெறலாம்.

பொது மக்களுக்குப் பயன்பெறத்தக்க இது மாதிரியான திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயல்படுவதால்தான் கல்பதரு பெனிபிட் பண்ட் ஆரம்பித்த இரண்டே மாதங்களில் ஆயிரம் பேர் உறுப்பினர்கள் சேர்ந்தார்கள். தற்போது சுமார் இரண்டாயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர் கட்டணம் ரூ. 5/- மட்டுமே.

இல்லையென்று சொல்லாமல் எதையும் தருவது கல்பதரு என்றால், அள்ள அள்ளக் குறையாதது அமுதசுரபி. அதனால்தான் செல்வ சுபிட்சத்துக்கு உறுதுணையாக அமுதசுரபி டிபாசிட் திட்டத்தையும் வைத்திருக்கிறார்கள்.

இத்திட்டத்தில் ரூ. 5,600/- டிபாசிட் தொகை செலுத்தினால் 15 வருடத்திற்குப் பின் ஒரு லட்சம்



ரூபாயாகத் திரும்பப் பெறலாம். ரூ. 7,000/- டிபாசிட் தொகையாகச் செலுத்தினால் 15 வருடங்களுக்குப் பின் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் திரும்பப் பெறலாம்.

கல்பதரு மணிபேக் திட்டம் : வாடிக்கையாளர்களில் எழுபது சதவிகிதத்தினர் கல்பதரு மணிபேக் திட்டத்தில் சேர்ந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரதி மாதம் ரூ. 100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்தினால் முதல் 5 ஆம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6,000/- த்தைப் பெறலாம். இரண்டாவது 5 ஆம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ. 6,000/- பெறலாம். 3வது 5 ஆம் ஆண்டின் முடிவில் ரூ. 51 ஆயிரம் பெறலாம்.

இத்திட்டங்கள் மட்டும் இல்லாமல் மேலும் மறு முதலீட்டுத் திட்டம், ரெக்கரிங் டிபாசிட் திட்டம், சேமிப்பு டிபாசிட் திட்டங்களும் இருக்கின்றன.

கடன் வசதித் திட்டம் : நகைகள் பேரில் தரப்படும் கடன்களுக்கு வட்டி ரூ. 1.95 மட்டுமே. நகைகளின் பேரில் கிராம் 1க்கு ரூ. 300/- வழங்கப்படுகிறது.

அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளை மீட்க, பணம் கட்டிய பத்து நிமிடத்திற்குள் உடனடியாக நகையைத் திருப்பிக் கொடுத்து விடுகின்ற அளவுக்குச் சுறுசுறுப்பாகவும் கவனமாகவும் இருக்கிறார்கள். நகைகளைப் பாதுகாக்கவும், உடனடியாக எடுத்துக் கொடுக்கவும் அலுவல் நேரங்களில் கீ கார்டியன்கள் இருவர் எப்போதும் இருக்கிறார்கள்.

மத்திய சென்னையில் நகைக் கடன் பேரில் வசூலிக்கப்படும் அப்ரெய்சர் பீஸ், இன்சூரன்ஸ் கட்டணம் போன்றவற்றை நீக்கிக் கடன் வழங்கும் முன்னோடி நிறுவனம் என்ற பெருமையும் இந் நிறுவனத்திற்கு உண்டு.

சென்னை மாநகரில் உள்ள வீடுகள் மீதும் கடன் தருகின்றார்கள். குறைந்த வட்டியான ரூ. 1.95 இல் வீடுகள் பேரில் சுமார் ரூ. இருபது லட்சம் வரை கடன் அளிக்கப்படும். இதில் இடம் பெற்றுள்ள இயக்குநர்கள் பெரும்பாலோர் கந்த கோட்டம் பகுதிகளிலேயே இருப்பதால் உடனுக்குடன் பரிசீலித்து நாலைந்து நாட்களிலேயே கடன் வழங்க முடிகிறது.

டிபாசிட் செய்பவர்களுக்கு உடனுக்குடன் ஊக்கப் பரிசுகளையும் வழங்குகின்றனர். சிறு சிறு ஆன்மீகப் புத்தகங்களையும் தெய்வப் படங்களையும் அனைவருக்கும் வழங்குகின்றனர்.

பாதுகாப்பினையும் வாடிக்கையாளர் சேவையையும் முன்னிட்டு ஒரு டைரக்டர் இந்த நிறுவனத்தின் கட்டிடத்திலேயே குடியிருக்கிறார்.

பொது மக்கள் புதுமையான திட்டத்தை முன் வைத்தால் அதைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளச் சித்தமாகவும் இருக்கிறார்கள். மத்திய சென்னையில் இயங்கி வரும் இந்நிறுவனத்தின் எதிர்காலத் திட்டம் வடசென்னையிலும், தென்சென்னையிலும் கல்பதருவின் கிளைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பது.

பாதுகாப்பு, சேவை, சுபிட்சம் என்ற இலட்சியத்தோடு பணியாற்றும் கல்பதரு பெனிபிட் பண்ட் எல்லாம் வல்ல இறைவன் கிருபையால் வற்றாத ஜீவநதியாய் வாரி வழங்கி சேவை செய்யும் என்பதில் துளியும் சந்தேகம் இல்லை. வளமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாக உறுப்பினராகிப் பயன்படுத்துவோமாக!

— Advt



* குண்டு வெடித்த இந்து முன்னணிக் கட்டடம்...

களுக்குக் காரணம் என்று சொல்லப்படு கிறது...?''

''நாங்கள் தரம் தாழ்ந்து பேசவில்லை. 'ஜமாத்–இல்-இஸ்லாமிக்' என்ற அமைப்புக்காரர்களும், 'ஜிஹாத் கமிட்டி' பழனிபாபா போன்றவர்களும் இந்து சமுதாயத்தைப் பற்றியும் நமது நாட்டைப் பற்றியும் தரக் குறைவாக, இந்துக்கள் மனம் புண்படும்படி பேசுவதை நீங்கள் அறிய மாட்டீர்கள் போலிருக்கிறது! இவர்களுக்கு பா.ம.க., தி.க. அமைப்புகள் மேடை போட்டுக் கொடுக்கின்றன.''

''முஸ்லிம் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு சிலர் நாச வேலைகளில் ஈடுபடுவதற்கு மொத்தமாக ஒரு சமுதாயத்தைக் குற்றம் சாட்டுவது சரிதானா?''

''அது சரி, அந்த சமுதாயத்தில் உள்ள மிதவாதிகள் வாயைத் திறக்க மாட்டேன் என்கிறார்களே!''

''ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து வன்முறைச் சம்ப வங்கள் நடக்காதிருக்க நீங்கள் துணையிருக்கலாமே!''

''நான் தயார்! முஸ்லிம்கள் கேட்கத் தயாராக இருக்கிறார்களா? இந்தியாவில் இதுவரை நடந்த கலவரங்களின் அறிக்கை களைப் பார்த்தால்

''சதிகாரர்கள் முகத்திரையைக் கிழிக்க வேண்டும்''

''ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டு வெடிப்பு வழக்கு சி.பி.ஐ. விசாரணையில் இருக்கிறது. சிலர் தடாவில் கைதாகி இருக்கிறார்கள்....'' என்கிறார் இந்து முன்னணித் தலைவர் இராம கோபாலன்.

''நாங்கள் கேள்விப் பட்ட வரையில் குற்றவாளிகள் பாகிஸ்தானுக்கு தப்பி ஓடியதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள்தான் இந்து முன்னணி சம்பவத்திலும் தொடர்பு கொண்டவர்கள் என்று கடைசிச் செய்திகள் சொல்லுகின்றன. மதுரை ராஜகோபாலன் கொலை விசாரணை, மாநில குற்றப் பிரிவு போலீஸால் சரியான முறையில் விசாரிக்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது தொடர்பு கொண்டு கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். எங்களுக்குத் திருப்தி. சிலர் வழக்கை திசை திருப்ப முயற்சி செய்தார்கள். அது நடக்கவில்லை. அது போலவே இந்து முன்னணி வழக்கும் சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது சரியே. ஏனென்றால் சதி வலை இஸ்லா மாபாத்தில் பின்னப்பட்டு இங்கேயுள்ள அவர்களது ஏஜெண்டுகளால் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் விசாரணை செய்து சதிகாரர்களின் முகத்திரை கிழிக்கப்பட வேண்டும்.''

''இந்து முன்னணியினர் மேடைகளில் தரக் குறைவாகப் பேசுவதே இது போன்ற சம்பவங் தூண்டியவர்கள் அவர்கள்தான் என்பது புரியும்'' என்று சொல்லும் இராமகோபாலன் சில விஷயங்களைப் பற்றி விவாதிக்க முதல்வரிடம் அப்பாயின்ட்மெண்ட் கேட்டுப் பல மாதங்களாக காத்திருக்கிறாராம். இந்து முன்னணி அலுவலகத்துக்குப் பாதுகாப்பு கேட்டும் போலீஸ் கொடுக்கத் தயங்கியதாம். அவர்கள் சொன்ன காரணம், ''மற்ற அமைப்புகளும் பாதுகாப்பு கேட்பார்கள்; எங்களிடம் ஆட்கள் போதாது'' என்பதுதானாம்.

குண்டு வெடிப்பு சம்பவத்தைப் பற்றிப் பேசவே தயங்குகிறார்கள், புதுப்பேட்டை மற்றும் திருவல்லிக்கேணி முஸ்லிம்கள். ''இந்து முன்னணியினர் எங்கள் மீது அபாண்டமாகப் பழி போடுகிறார்கள். எங்களில் சில இளைஞர்கள் வழிமாறிப் போயிருக்கிறார்கள். இது போன்ற பயங்கரவாத நட வடிக்கைகள் இன்னமும் பிளவை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணராதிருப்பது துரதிருஷ்டமே! எங்கள் இந்தியப் பற்றை வெளிப்படுத்தும் காலத்திற்காக எதிர்நோக்கியுள்ளோம். பாகிஸ்தான் ஆதரவு என்பதெல்லாம் வடநாட்டு முஸ்லிம்கள் சிலருக்குப் பொருந்தி வரலாம். தெற்கே நிலை வேறு'' என்கிறார்கள் இவர்கள்.

— ப்ரியன்

படம் நன்றி : தினமலர்

துவளும் கொடியில் தங்கப் பூக்கள்!

லதா என்றால் கொடி. ஒரு கொத்து தங்க மெடல்களைக் கழுத்தில் போட்டதும் இந்தக் கொடி துவண்டு விட்டது! மெடல்களின் கனம் தாளாமல் குனிந்த லதாவை ஆளுனர் சென்னா ரெட்டி பாராட்டி வேடிக்கையாக உற்சாகமூட்டினார்:

"நீ கஷ்டப்பட்டு வாங்கின மெடல்கள் இவை. நல்லா நிமிர்ந்து, பெருமையோடு நில்லு பார்க்கலாம்..."

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி கான்வகேஷனில் பதினைந்து மெடல்கள் வாங்கியிருப்பவர் லதா.

சொந்த ஊர், விழுப்புரத்திலிருந்து திருக்கோவிலூர் போகும் பாதையில் உள்ள காணை என்ற கிராமம். பிறந்து, வளர்ந்து பள்ளிப் படிப்பை முடித்தது இந்த விவசாய கிராமத்தில்தான். விழுப்புரத்தில் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் டு.

எம்.பி.பி.எஸ். என்ட்ரன்ஸ் எழுதி சீட் கிடைக்காமல், 'இஞ்சினியரிங்கா? கால்நடை மருத்துவமா?' என்று கேள்வி வந்த போது பின்னதைத் தேர்ந்தெடுத்தார். ("பயாலஜியில் உள்ள ஆர்வம்தான் காரணம்.") இந்த வருட பட்டமளிப்பு விழாவில் சரித்திரம் படைத்திருக்கிறார், சரித்திர ஆசிரியரின் மகளான லதா. இவரது அம்மா வசுந்தரா, "ஆனந்தக் கண்ணீர்னா என்னன்னு எனக்கு அன்னைக்கித்தான் புரிந்தது" என்று நெகிழ்கிறார்.

இன்னொரு அதிசயத் தகவல் - லதாவுக்குக் கல்யாணமாகி இரண்டு வருடங்களாகி விட்டன. தந்தை ரிடையராகும் சமயத்தில் குடும்பச் சூழல் காரணமாக லதா இதற்கு ஒப்புக் கொண்டார். கணவர் இளங்கோ லதாவின் படிப்பு



கல கலா ஜோடி!

"சுமார் இருபது வருடங்களுக்கு முன் (நான் படித்த காலத்தில்) கால்நடை மருத்துவக் கல்லூரியில் 400 மாணவர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒரே ஒரு பெண்தான் இருந்தார். இன்றோ, எண்ணூறு மாணவர்களுள் 260 பெண்கள். இத்தனைக்கும் கடந்த இரண்டு வருடங்களாக எம்.பி.பி.எஸ்.ஸை விட இந்தப் படிப்புக்குக் கட் ஆஃப் மார்க் அதிகம்...." என்கிறார் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் டீன், டாக்டர் சண்முகசுந்தரம்.

படிப்பு தவிர இதர துறைகளிலும் பெண்கள் முத்திரை பதித்து வருகிறார்கள். இக்கல்லூரியின் தேசிய மாணவர் படை (என்.சி.சி.) உறுப்பினர்கள் பதினோரு பதக்கங்கள், இரண்டு சுழற்கோப்பைகள் வென்று வந்துள்ளனர். இவர்களுள் மேகலா, கலா என்ற இரண்டு பெண்கள்

(சகோதரிகள் இல்லீங்க!) குதிரை ஏற்றத்தில் முதல், இரண்டாம் இடம் பெற்றிருக்கிறார்கள்!

ஆமாம், குதிரைக்கு வைத்தியம் பார்க்க அதிகத் துணிவு வேண்டுமா? இல்லை அதன் மேல் ஏறி, தடைகள் தாண்ட அதிகத் துணிவு வேண்டுமா?



• மேகலா



• கலா

ஆர்வத்தைப் புரிந்து கொண்டார். இப்போது அவர் சவுதியில் கம்ப்யூட்டர் புரோகிராமராக இருக்கிறார்.

"இன்னும் ஆறு மாதத்தில் இந்தியாவுக்கே திரும்பி விடுவதாகச் சொல்லியிருக்கிறார்" என்கிறார் லதா.

சாதாரணமாகவே கனவுகளில் மிதக்கும் பருவம்; கல்யாணமாகி கணவனையும் பிரிந்து வாழ வேண்டிய சூழலில் கவனம் சிதறாமல் லதா சாதித்தது எப்படி....?

"விழுந்து விழுந்து படிக்கறதைவிட, வகுப்புல எதைச் சொல்லிக் கொடுத்தாலும் கவனமாகக் கேட்டுக்கறதுதான் முக்கியம். Observation இருந்தாலே போதும்."

லதாவின் பலத்தை அவரினும் துல்லியமாக எடை போட்டு வைத்துள்ளார்கள் அவர் ஆசிரியர்கள். "கடனுக்குப் படிக்கறதுக்கும் ஆசையோடு, தாகத்தோடு படிக்கறதுக்கும் வித்தியாசமில்லையா?" என்று கேட்கிறார் டாக்டர் அப்பாஜி ராவ்.

"மனுஷன்னா வாயைத் திறந்து இன்ன வலி, தொந்தரவுன்னு சொல்லிட முடியும். மிருகங்களால முடியாதே! இப்போ அதுங்களைப் பார்த்தவுடனே என்ன பிரச்னைன்னு என்னால சொல்லிட முடியுது...."

"நான் ஆராய்ச்சிப் பிரிவுலதான் அதிக கவனம் செலுத்தப் போறேன். (இப்போது மாதவரம் விலங்குகள் நல ஆராய்ச்சி மையத்தில் ரிசர்ச் அஸிஸ்டன்ட் வேலை கிடைத்துள்ளது.) நானே ஒரு ஆராய்ச்சி மையத்தை ஆரம்பிச்சு நடத்துவேன். இப்போ ஆராய்ச்சிக்கும் நடைமுறைக்கும் நடுவுல பெரிய இடைவெளி இருக்கு - அதை எப்படியாவது ஒழிச்சுடணும். ஆராய்ச்சி முடிவுகளை மக்களுக்கு பயன்படுற விதமா எடுத்துப் போகணும்... இதுக்கு ரொம்ப நாளாகலாம். எனக்கு ஐம்பது வயசுக்கு மேல ஆனாலும் ஆயிடலாம். ஆனால் என்ன..? எப்படியும் அதை நடத்தியே காட்டுவேன்" என்கிறார்.

கிராமத்தில் பிறந்து வளர்ந்த அவரது அனுபவம் பேசுகிறது! கனவு மெய்ப்படட்டும்!

— கல்பனா

அட்டை வண்ணப்படம்,
படம் : யோகா

என்றென்றும் நீங்களே

பாலகுமாரன்

ஆச்சி ஆடிப் போயிருப்பாள் என்றுதான் ஆறுமுகம் நினைத்தான். ஆண் புறாவை இழந்த பெண் புறா கற்கள் தின்று, வயிறு நிரப்பி, தரையில் பாய்ந்து சாவதைப் போல நாச்சியப்பனை இழந்த ஆச்சி அவரோடு வாழ்ந்த சந்தோஷ நினைவுகளை மென்று நெஞ்சு வெடித்து செத்துப் போயிருப்பாள் என்று நினைத்தான். வேதனையுடன் வீட்டுக்குள் நுழைந்தான்.

வீட்டு வாசல், அது சாவு வீடு என்று காட்டிக் கொடுத்தது. படியேற, தாழ்ந்த குரலில் பேச்சுக்கள் கேட்டன. எவரும் வரவேற்காத வெறுமை இருந்தது. ரேழி தாண்டி ஹாலுக்குப் போனான். உட்கார்ந்திருந்த ஆச்சி எழுந்து நின்று வரவேற்றாள்.

''வா... ஆறுமுகம்.. செட்டியாரப் பாக்க வந்தியா... படுத்திருக்காக... வா...'' களைத்த குரலில் அமைதியாய் வரவேற்றாள்.

தன்னைப் பொறுத்த வரையில் நாச்சியப்பன் சாகவில்லை என்று சொல்லாமல் சொன்னாள். அவள் வரவேற்பே துக்கத்தைக் கொடுத்தது.

இத்தனை அமைதியான உனக்கு. இத்தனை அன்பான உனக்கு இந்த துக்கம் அவசியமா என்ற எண்ணம் வந்தது. நெஞ்சு விக்கி கண்ணில் நீர் திரண்டது.

''அவனெங்கடா காணம்...? மணியாச்சு. எடுக்கணுமில்ல...''

''யார் ஆச்சி?''

''மலைல குடித்தனம் பண்ணவ எங்கே?''

"பகவதியா? கிளம்பிட்டாங்களே.... அவங்க கிளம்பிட்டது தெரிஞ்சுதான் நான் என் பொண்டாட்டியோட வந்தேன்."

ஆறுமுகம் திரும்பி தன் மனைவி ஜெயந்தியைக் காண்பித்தான்.

"இவதான் உம் பொண்டாட்டியா? செட்டியார் சொல்லுவாக. ரொம்ப அழகு.. ரொம்ப அழகுன்னு. அழகாத்தான் இருக்கீக" அவள் கைகளை ஆச்சி பிடித்துக் கொண்டாள்.

அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

"மலையில இருக்கற போது தரையைப் பத்தி பேசுவாகளா தெரியலை. தரைல இருக்கற போது மலையைப் பத்தி ரொம்பப் பேசுவாக. சாக்லேட் காகிதம் மாதிரி இந்தப் பேச்சுலயே ஒரு சந்தோஷம் சுத்தி இருக்கும். சாக்லேட் பிரிச்சா காகிதம் பரபரன்னு பிரியும் இல்லை.. அப்படி படபடப்பு இருக்கும். அப்பா மண்வெட்டி... அம்மா மண்வெட்டி... ஊர் உறவு எல்லாம் மண்வெட்டி. ஆள் துணையே இல்லாத ஒத்தைல இந்த ஆறுமுகம் எம்.ஏ. பாஸ் பண்ணி வாத்தியார் படிப்பு பாஸ் பண்ணி தன்னை விட உசந்த ஜாதிப் பொண்ணை தைரியமா கல்யாணம் பண்ணிக்கிட்டான். தரைல குடித்தனம் பண்ண முடியாதுன்னு மலைக்கு ஓடி வந்துட்டான். நல்லதோ கெட்டதோ ஆறுமுகத்தை நீ லவ் பண்ணியே ஆகணும். நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்டே ஆவணும். தரைல பொண்டாட்டியோட சண்டை போட்டா கோயிலுக்கு போலாம். மலைல எங்கே போறது? எதிரும் புதிருமா இருந்தேயாகணும். மலைல இருக்கறவனுக்கு நல்ல பொண்டாட்டி கிடைச்சா அதிர்ஷ்டம்.


இல்லைன்னா.... ரொம்ப துரதிருஷ்டம். ஆறு முகம் நல்லபடியா செட்டிலாயிட்டான்னு பார்த்தாலே தெரியுது. ராத்திரி சாப்பிட்ட பிறகு மல்லாந்து படுத்துக்கிட்டு உங்களைப் பத்தி பல தடவை பேசியிருக்காக. மதுரைக்கு வர போது நம்ம வீட்டுக்கு ரெண்டு பேரை யும் வரச் சொல்லுங்கன்னு பல தடவை சொல்லியிருக்கேன். செட்டியார் இருக்கும் போது வராதவுக...'' ஆச்சி பேச்சை நிறுத் தினாள்.

தாவித் தன்னைப் பிடித்துக் கொண்ட ஜெயந்தியின் தலையைப் பிரியத்துடன் கோதினாள்.

ஆச்சி பெரிய மனுஷி. தன் துக்கத்தை அலறலாய் அவள் பகிர்ந்து கொள்வதே யில்லை. மரணத்தை - தனக்கு நெருங்கிய வரின் மரணத்தை சாதாரணமாக எடுத்துக் கொண்டு பிறரையும் அவ்விதமே உணரச் செய் யும் அருங்குணம் அவளிடம் மிகுந்திருந்தது.

பகவதி வாசலுக்கு வந்து விட்டாள். [illegible] தெரிந்ததும் ஆச்சி கொல்லைப்புறம்





"கைத்தட்டல் வாங்கறதுக்காக மேடையில் எதை வேணுமானாலும் பேசிடறதா?"

"எதைச் சொல்றீங்க?"

"கூட்டத்துக்கு வந்திருக்கிறவங்களுக்கு பேசியதை விட ஐந்து ரூபாய் போட்டுத் தர்றதா ஏன் பேசினீங்க?"

— சிந்துகவி பாரதி

போய் விட்டாள்.

"நாம இருந்தா அந்தப் பொண்ணுக்கு அழ பயமாக இருக்கும். அதுவும் செட்டியாரோட நல்லா வாழ்ந்தது—அழுவட்டும். மனசு கரைய அழுவட்டும்."

ஆச்சி கொல்லைப்புறம் போக, பகவதி வெடித்துச் சிதறி அழுதாள். ஆறுமுகமும் அவன் மனைவியும் தவிர மற்றவர்கள் எல்லாம் பின்வாங்கினார்கள்.

அந்த ஹாலை விட்டு மெல்ல வேறு இடம் நகர்ந்து கொண்டார்கள். ஐந்து நிமிடத்தில் துக்கத்தின் முழுமை கரைந்து போக, பகவதி சுதாரித்துக் கொண்டாள். ஆச்சியைத் தேடினாள். ஆச்சியைப் பார்க்க அனுமதி கேட்டாள். ஆறுமுகம்தான் ஆச்சியிடம் போனான்.

"அவங்க பார்க்கணும்கறாங்க."

"பார்த்து என்னா..." ஆச்சி நெட்டுயிர்த்தாள்.

"அவ பாக்க வருவா.... அவ பாக்க வருவான்னு இங்க பத்துப் பேர் பேசியாச்சு. வரச் சொல்லு."

கொல்லைத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஆச்சி நகர்ந்து கிணற்றடிக்குப் போய் கிணற்றின் மறுபக்கச் சுவருக்குக் கீழே உட்கார்ந்து கொண்டாள்.

"ஆறுமுகம், நீ இங்கனயே இரு. வேறு யாரையும் வர வேண்டாம்னு சொல்லு."

ஆறுமுகத்தைத் தாண்டி பகவதி கிணற்றடிக்கு பின்புறம் போக, பெரிய குரலில் அழுகைச் சப்தம் கேட்டது. அந்தக் குரல் ஆச்சியினுடைய குரல் என்று நம்ப சிரமமாய் இருந்தது.

பிள்ளையோ, பெண்ணோ, வேறு உறவுகளோ பாய்ந்து இறுக்கிக் கொண்ட போது, அழாத ஆச்சி பகவதி தொட்ட போது பிளிறலாய் அழுதாள்.

"போயிடுச்சேடி... என்னையும் உன்னையும் உதறிட்டு போயிடுச்சேடி... நீ செத்துப் போனா பகவதி கவனிச்சுக்குவா... நான் செத்துப் போனா உன்னை யார் கவனிச்சுக்குவான்னு ஒருநாள் கேட்டது. உன்னைக் கவனிச்சுக்கச் சொல்லி பகவதிக்கிட்ட கேட்கட்டுமா... அப்படீன்னு உலுக்கிச்சு.

"உங்க பகவதிய யார் கவனிச்சுக்குவா... அப்படீன்னு நான் கேட்டேன். ரெண்டு நிமிஷம் பேசாத இருந்தது."

"எனக்கு அதுதான் கவலை. உன்னை நீ கவனிச்சுக்குவேன்னு எனக்குத் தெரியும். பகவதிய யார் கவனிச்சுக்குவான்னுதான் தெரியலை. அதனாலதான் சுத்தி வளைச்சு உன்னைக் கேட்டேன். நீ பகவதிய கவனிச்சுக்கிறியான்னு கேக்கறதுக்கு பதிலா பகவதிய உன்னைக் கவனிக்கச் சொல்லட்டுமான்னு கேட்டேன். உன்னைப் பத்தி அத்தினி அக்கறை... உன்னைப் பத்தி அத்தினி கவலை.

"விளையாட்டா கோச்சுக்கிட்டேன். என்னை யார் காப்பாத்துவாங்கன்னு யோசிக்கலையேன்னு கத்தினேன். எல்லைக் காளின்னு ஒரு கல்லு நட்டுப்பிட்டு அதுக்கு இன்னொரு காளிய காவலா போடுவமா? நான் போன பிறகு பகவதிய கவனிச்சுக்க. விட்டுப் போச்சுன்னு வுட்டுடாத.. சொல்லி பதினாறாவது நாள் இதோ... செத்துப் போயாச்சு. அதுக்கு தெரிஞ்சிருக்கும் போல."

"உறவுக்காரங்க ஆறேழு பேர் எஸ்டேட்டு, எஸ்டேட்டுன்னு அலையறாங்க. நம்ம சொத்த நாமதான் பாத்துக்கணும்னு நியாயம் பேசறானுக. ஆச்சிக்கு ஒண்ணும் தெரியாது. நாம பேசுவோம்னு படையா வருவானுங்க. நான் கொல்லைப்பக்கம் தனியா வந்ததே இது சொல்லத்தான். உம் பேர்ல எதாவது பதிஞ்சு வச்சிருக்கா? காகிதம் வச்சிருக்கியா?"

"ஒண்ணும் தெரியலையே" பகவதி அழுகையினூடே பேசினாள்.

"தெரிஞ்சுக்கோணும். நாப்பது ஏக்கர் எம் பேர்ல இருக்குன்னு செமத்தியா போட்டுரு. நானும் அப்படித்தான்னு சொல்லிடறேன். மறு பஸ்ஸ புடிச்சுப் போய் ரிஜிஸ்டிரார் ஆபீஸ்ல ரூபா குடுத்து நோண்டி அது யார் சொத்துன்னு பார்ப்பாங்க. உன்னுதா இல்லைன்னா இங்க வந்து கத்துவாங்க. இதுக்குன்னே அலையற பங்காளிக இங்கு உண்டு. யாராவது சத்தம் போட்டா வுட்டுக் குடுத்துராதே. ராத்திரி அடையறதுக்கு கோழிக்குக் கூடை இல்லைன்னா நாய்க்கும் நரிக்கும் பல்லனும்.

"இரையச் சுத்திக் காவல் காக்கற மாதிரி கோழியத் தேடி அலையும். செட்டியார

உளுந்து கும்பிட்டுட்டு சட்டுன்னு பஸ் பிடிச்சு மலைக்கு போயிரு. அப்புறமா இருபது நாள் கழிச்சு மூத்த பிள்ளை கதிரேசனை அனுப்பறேன்... உனக்கும் பந்தமிருக்கு. பதிமூணு நாள் வரைக்கும் சாமி கும்பிடாத. வகையா சோறும் கறியும் சமைச்சு பசுவுக்கு போடு. பசுவுக்கு போடப் போட நல்லது. கைல காசு இருக்கா... ஒரு ரெண்டாயிரம் ரூபா தரச் சொல்லட்டுமா? நான் உன்னை இந்த வீட்ல சேத்துக்க முடியாது. சம்பந்தி ஆளுங்களுக்கு ஏகடியம்மா ஆயிடும். எதாவது தொந்தரவு இருந்தா தபால் எழுது. அவசரமா இருந்தா தந்தியடி. நாம ஒத்துமையா இருந்தா ஊருக்குப் புடிக்காது. இந்த உறவு விசேஷத்தை யாராலும் புரிஞ்சுக்க முடியாது. ஒரு வருஷம் முடியறதுக்குள்ளே நான் எஸ்டேட்டுக்கு வர்றேன். எங்க காணம்னு அக்கறையா தேடுவாங்க..."

பகவதி, ஆச்சியைக் கட்டித் தழுவி அவள் கையை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு காலைத் தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டு விருக்கென்று எழுந்தாள்.

ஹாலுக்குப் போய் நாச்சியப்பச் செட்டியாரை வலம் வந்து நமஸ்கரித்தாள்.

"ஆறுமுகம் அண்ணே, நீங்க இருந்து பார்த்துட்டு வாங்க. தயவுசெய்து இருந்து பார்த்து விட்டு வந்து எனக்கு எல்லாம் சொல்லுங்க."

ஆறுமுகம் நோக்கி கைகூப்பினாள்.

கீழே இறங்கி எஸ்டேட் பெண்கள் மூன்று பேரும் ஆண்கள் இரண்டு பேருமாய் உடன் நடக்க, தெரு திரும்பி மறைந்து போனாள்.

பகவதி தலை மறைந்த ஐந்து நிமிடத்தில் எஸ்டேட் பத்தி பேச்சு கிளம்பியது. "ஏலக்காய்த் தோட்டத்த யாருக்காவது தாரை வார்த்தா எனக்கு கெட்ட கோவம் வந்துடும் சொல்லிட்டேன். அது எங்க ஐயா வாங்கினது. நாச்சியப்பனுது இல்லை. கண்ட கழுதைங்களுக்குத் தாரை வார்த்து குடுத்துடலாம்னு யாரும் நினைக்க வேண்டாம்."

– யாரோ ஒரு பங்காளி உறக்கக் கத்தினார்.

"எந்தெந்த கழுதைக்கு எதெது எழுதி வச்சருக்கோ அதது கிடைக்கும். காட்டுக் கத்தலா கத்தினா கிடைச்சிராது."

ஆச்சி பதிலுக்கு சீறினாள்.

"ஏலக்காய் எஸ்டேட் யார் பேர்ல இருக்கு?"

"எதுக்கு கேட்கறீர்?"

"இன்னி தேதிக்கு ஏக்கர் அறுவத்தைஞ்சு ரூபாய் நாப்பது ஏக்கர் என்ன விலையாச்சுன்னு தெரியுமில்ல?"

"மேல நிலத்தந்தி பேப்பர் கிடைக்கறதில்லை. அதான் போறதில்லைன்னு சொன்னீரு. இப்ப எஸ்டேட் பத்தி விசாரிக்கிறீர்."

"அது செட்டியார் சொத்து... கதிரேசன் அவங்கப்பா சொத்து. வாங்கினது கதிரேசன் தாத்தாவா இருந்தாலும் எஸ்டேட்டை வளர்த்தது கதிரேசன் அவங்கப்பா. அவங்க கைப்பட எழுதி வச்சிருக்காக. தனக்குப் பிறவு யாருக்கு சேரணும்னு– இருபத்தோரு வருஷமா ஒரு நாத்து நட்டதில்லை. ஒரு களை பறிச்சதில்லை. இன்னிக்கு வந்து பாத்தியதை கொண்டாடினா எப்படி? அடுத்தவன் சொத்துக்கு அலைஞ்சு அலைஞ்சுதான அழிஞ்சு போனீக. இன்னும் ஆட்டம் குறையலையோ."

ஆச்சி அமிலமாய் வார்த்தை இறைத்தாள்.

"நான் சொல்றது புரியலையாக்கும்."

"செட்டியார் சொத்து செட்டியாரண்டதான் இருக்கணும். கண்டவனுக்குப் போகப்படாது."

"ஏய்..." ஆச்சியின் கூக்குரல் அவர் பேச்சை வெட்டி நிறுத்தியது. "செருப்பு பிஞ்சி போயிரும். நீங்க தூக்கலைன்னா பரவாயில்லை. நானும் எம் புள்ளையும் இழுத்துக் கொண்டு போய் கொள்ளி வைப்போம். செட்டியாரச் சேர்ந்தவங்கள செட்டியார நடத்தறது போல நடத்தணும். யாராயிருந்தாலும் சரி. இன்னிக்கு அவளைச் சொல்லுவீக. நாளைக்கு என்னையும் சொல்லுவீக. கேட்டுக்கிட்டு வெறுமனே நிக்கணுமா? வார்த்தைய தப்பா வுட்டுட்டு பின்னால யாரும் அவஸ்தைப்பட வேணாம்."

சட்டென்று அங்கே ஒரு கோப இறுக்கம் சூழ்ந்தது.

நாச்சியப்பனை எரியூட்டும் வரை வாய் பேசாதிருப்பது நல்லது என்று அங்குள்ளவர்கள் வேகமாய் இயங்கினார்கள். எரித்துத் திரும்பிய போது இரண்டு பங்காளிகள் நாச்சியப்பன் மகனின் தோளில் கை வைத்தார்கள்.

"கதிரேசா... வீட்டுக்கு பெரியவனாயிட்டியா" – தழுவி கண்ணீர் வடித்து விசாரித்தார்கள்.

அறுபது வயது தகப்பன் இறந்து இருபத்தோரு வயது மகன் ஒரு குடும்பத்துக்கு தலைவனாவது மிகவும் வேதனையானது. விளையாட்டெல்லாம் பொசுங்கிப் போன நேரம் அது.

கதிரேசன் தன் தகப்பனை நினைத்தும் தன்னை நினைத்தும் அழுதான்.

(தொடரும்)

குடிசை நீதி



வீட்டின் எதிர்ப்புறக் குடிசையில் ஓலம் ஆரம்பமாகி விட்டது. வசவுகள். காதைப் பொத்திக் கொண்டு காட்சியை மட்டும் பார்த்தாள் பானு.

நாராசமான வார்த்தைகளைக் கேட்கக் கூசியதால் உள்ளுக்குள்ளே அருவருப்பும் ஆவேசமும் தலைதூக்கின.

அடப்பாவி! காலால் எட்டி உதைத்தான் மனைவியை அவன். மூடிய காதுக்குள் மெல்லிய ஒலியில் அந்தப் பெண்ணின் அலறல்.

இந்த வீட்டுக்குக் குடி வந்த ஒரு வாரமாய் பானு இந்தக் கொடுமையைப் பார்க்கிறாள். குடி! மனிதனை மிருகமாக்கும் வஸ்து!

'நமக்கெதற்கு வம்பு' என்று அக்கம்பக்கத்தவரைப் போல இருக்க முயன்றாள். முடியவில்லை. அதுவும் இன்று அடக்கப்பட்ட கோபம் சிலிர்த்தெழுந் துடிக்கிறது.

சட்டென கதவைத் திறந்து, சாலையைக் கடந்து அந்தக் குடிசை முன் போய் நின்றாள்.

இவளின் திடீர் வரவினால் அந்த ஆணின் 'ஆக்ஷன்' தடைப்பட்டது.

"போலீசைக் கூப்பிடவா?"

மந்திர வார்த்தை முன் மாயமானான் அவன்.

அடிகளின் ரணமும், வலியுமாய்த் தரையில் விழுந்து கிடந்த பெண்ணை நோக்கினாள்.

தன்னை அவள் வியப்புடனும் நன்றியுடனும் நோக்குவதைக் கண்டு புன்னகை செய்தாள்.

"உன் பேரு என்ன?"

"ராக்காயி."

"தினசரி இப்படி அடி வாங்கிச் சாகறியே!"

"வேற வழி? என்னை மாதிரி போக்கத்த சிறுக்கி என்ன செய்ய முடியும்?"

சுயபச்சாதாபத்துடன் பேசியவளை அனுதாபமாய்ப் பார்த்தாள்.

"சரி எழுந்திரு" என்று கை நீட்டினாள்.

"அம்மா...."

"ம்" என்று அதட்டினாள்.

தன்னுடன் வீட்டுக்குக் கூட்டி வந்தாள் அவளை.

கையின் மேல்புறம் அடிபட்டு லேசாய் ரத்தம் வழிவதைக் கண்டாள்.

"நல்லா கழுவிட்டு வா" என்று பாத்ரூமைக் காட்டினாள். பஞ்சினால் துடைத்து மருந்து போட்டாள்.

"ராக்காயி, ஏன் இப்படி அடி வாங்கணும்?"

"குடிச்சுட்டு வந்துடுச்சுன்னா, என் புருஷனுக்குப் புத்தி கெட்டுடும்மா. கஷ்டமாய்த்தானிருக்கு. ஆனால், புருஷன்னு ஒருத்தன் இருந்தால்தான் மதிப்பு. இல்லாட்டி, கண்ட நாயும் உள்ளே நுழையப் பார்க்கும்" என்றாள் தலையைக் குனிந்தபடி.

"இங்கே தங்கிக்கறியா?" என்று கேட்ட பானுவை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"அம்மா...."

"உன் புருஷன் அடி, உதையிலிருந்து நீ தப்பிக்க நான் புகலிடம் தரேன். நானும் என் மகனும்தான் இங்கே இருக்கோம். என்ன சொல்றே?"

"அது... என் புருஷன் வீட்டு முன்னாடி நின்னு கத்துமே" என்றவளைக் கூர்ந்து கவனித்தாள் பானு.

பயம்! தன் மேலேயே நம்பிக்கை இல்லாததால் வந்த பயம்!

"கத்தட்டுமே! எத்தனை நாள் கத்துவான்? மீறிப் போனால் நாலு நாள் கத்துவானா?" என்றாள் பானு அலட்சியமாய்.

"அது... இல்லைம்மா..." என்றவளின் தயக்கத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

ஜீரணிக்க முடியாத விஷயம் இது பெண்களுக்கு. கல்லால் அடித்தாலும் கணவன். ஃபுல்லாய் போட்டு வந்து உதைத்தாலும் புருஷன். வெளியே உதறி விட்டு வர முடியாத கோழைத்தனம்.

"அவன் கையாலே அடிபட்டு சாகணும்னு தலையெழுத்தா என்ன? தங்க இடம் கொடுக்கறேன். ஒரு வேலை வாங்கிக் கொடுக்கவும் நானாச்சு?" என்ற பானுவை யோசனையுடன் பார்த்தாள் ராக்காயி.

அவள் கண்களில் தெரிந்த குழப்பத்தையும் சந்தேகத்தையும் புரிந்து கொண்டாள் பானு.

"ஏன் திடீர்னு உன் மேலே அக்கறை எனக்குன்னு கேட்கறியா? என் புருஷனும் குடிகாரன்தான்... நானும் கஷ்டப்பட்டவள்தான். வெறுத்துப்போய் விட்டுட்டு தனியா

வந்துட்டேன்...

ஒரு வருஷம் திண்டாடினேன். படிச்ச படிப்பும், பார்க்கற வேலையும் துணிச்சலைக் கொடுத்தது. முதலில் - கொஞ்சம் பயமாய்த் தான் இருக்கும். ஆண் ஆதிக்க உலகமாச்சே இது. இப்ப பழகிப் போச்சு. நிம்மதியாய் இருக்கேன். துணைக்கு என் பையன் இருக்கான். ஆறாவது படிக்கிறான். லீவுக்கு எங்கம்மா வீட்டுக்குப் போயிருக்கான்'' என்றவளைத் திறந்த வாய் மூடாமல் பார்த்தாள் ராக்காயி.

"ராக்காயி, வேலை எப்படியிருக்கு?'' என்று கேட்டாள் பானு தலையைப் படிய வாரியபடி.

"நான் சீவி விடட்டுமாம்மா?''

"பரவாயில்லை. என் வேலைக்கு நான் யாரோட உதவியையும் எதிர்பார்க்கிறதில்லை. சொல்லு. வேலை எப்படி?''

"பிடிச்சிருக்கும்மா'' என்றாள் ராக்காயி.

போன வாரமே அவள், பானுவுடன் தங்க ஆரம்பித்து விட்டாள். புருஷன் கழுத்தை நெறிக்கும் அளவு போகவே மொத்தமாய் வந்துவிட்டாள்.

பானு, தனக்குத் தெரிந்த ரெடிமேட் ட்ரெஸ் தயாரிக்கும் நிறுவனத்தில் 'அட்டெண்டர்' உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விட்டாள். காலை ஏழு முதல் மாலை நாலு வரை வேலை அவளுக்கு. பிறகு, இங்கு வீட்டுக்கு வந்து பானுவோடு வீட்டு வேலைகளில் உதவினாள்.

பானு சொன்னது போலவே, அவள் புருஷன் முதல் இரண்டு நாளில் கத்தினான். பானுவின் அதிகார மிரட்டலில் பயந்து போய் இப்போது இந்தப் பக்கமே வருவதில்லை.

"ஏன் ராக்காயி ஒரு மாதிரியிருக்கே?''

"ஒண்ணுமில்லேம்மா. வேலை முடிஞ்சு வரும்போது அதைப் பார்த்தேன்.''

"எதை?''

"அதான் என் புருஷனை. வழியிலே தடுத்து நிறுத்தி பணம் கேட்டு மிரட்டுச்சு.''

"ஓகோ, நீ என்ன செஞ்சே?''

"பத்து ரூபாய் முந்தானையில் முடிஞ்சு வைச்சிருந்தேன். பிடுங்கிட்டுப் போயிடுச்சு.''

"ஏன் நீ தடுக்கலியா அதை?''

"ஏதோ ஒரு பயம்.. முடியலேம்மா. வார்த்தையே வரலே அது போட்ட அதட்டலில்'' என்றவளை வெறித்துப் பார்த்தாள் பானு.

என்ன உரிமை இருக்கிறது இவன் புருஷனுக்கு, இப்படி நடுவழியில் மிரட்டி பணம் பிடுங்க? ஏன் இத்தனை மிரட்சி இவளுக்குள்?


கூந்தலைப் பின்னி முடித்து சீப்பிலிருந்து முடிகளை அகற்றி சுருட்டினாள். குப்பைக் கூடையில் அதைப் போட்டு விட்டு எழுந்தாள்.

"ராக்காயி, நீ எதுவரைக்கும் படிச்சிருக்கே?''


"ஏதோ ரெண்டாவது வரைக்கும் போனேன். அப்புறம் விடலே வீட்டுலே.''

"ம்... நாளை முதல் நீ எழுதப் படிக்கக் கத்துக்கறே.''





ஆந்திராவில் லக்ஷ்மிபார்வதி கொஞ்சம் கொஞ்சமாக அரசியலில் பிரவேசம் செய்து முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை விளக்கும் கேலிச் சித்திரம்.
கார்ட்டூன் உபயம் : "சண்டே கிரானிகிள்"
நகவல்: என். பங்கஜம்



"நானா? ஐயே..." என்றவளை உறுதியாய் ஏறிட்டாள் பானு.

"நம்மை மாதிரி பொம்பளைங்க இப்படி எதுக்கெடுத்தாலும் நடுங்கிச் சாகறதே படிக்காததினாலேதான். படிப்பு, புத்தி பலம் தரும். பலம் நல்ல சிந்தனையை ஏற்படுத்தும். நல்ல சிந்தனை பயத்தைப் போக்கும். பிரச்னையைத் துணிவுடன் எதிர்நோக்க வைக்கும். நாளை முதல் நீ படிக்கிறாய். நான் தான் வாத்தியாரம்மா உனக்கு" என்றவளிடம் மறுக்க முடியாமல் தலையசைத்தாள் ராக்காயி.

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள். பானு சமைத்துக் கொண்டிருந்தாள். ராக்காயி கத்தரிக்காயை அரிந்து கொண்டிருந்தாள் உதவியாய்.

"பரணி எங்கேம்மா?"

"கிரிக்கெட் விளையாடப் போயிருக்கான். கத்தரிக்காயை வெட்டினப்புறம், வெங்காயத்தை உரிச்சுக் கொடு" என்றாள் பானு. குக்கர் விசிலடிக்கவே 'வெயிட்'டை போட்டாள் தலையில்.

"அம்மா...."

"என்ன, சொல்லு"

"அது..." என்றவளை புரியாமல் பார்த்தாள்.

ராக்காயி இங்கு வந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஓடி விட்டது. இப்போது நன்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டு விட்டாள். ஆபீசிலும் நல்ல பெயர். சம்பள உயர்வு கூட கொடுத்திருக்கிறார்கள்.

"ஏம்மா, தாய்மைங்கறது எவ்வளவு பெரிய பரவசம்" என்றவளை வியப்புடன் பார்த்தாள் பானு.

பரணியை, தான் கொஞ்சி மகிழும் போது ஏக்கமாய் ராக்காயி நோக்குவதை கவனித்திருந்தாள் பானு கொஞ்ச நாளாய்.

"ஓ! உனக்கு புருஷன் ஞாபகம் வந்திருச்சா?"

ராக்காயி மௌனமாய் வெங்காயத்தை உரித்தாள்.

"இந்த பெண் ஜன்மமே இப்படித்தான்" என்று ஏகத்தாளமாய் சொன்னாள் பானு.

ராக்காயி தலைநிமிர்த்திப் பார்த்தாள்.

"ஏம்மா, நான் சாக்கடையிலே இருக்கிற புழு மாதிரி வாழ்ந்துக்கிட்டு இருந்தேன். உலகம் அதுமட்டுமில்லேன்னு நல்ல பக்கத்தை காண்பிச்சது நீங்கதான்."

"எங்கே வர்றே, சொல்லு."

"முன்னே, பின்னே தெரியாத என் மேலேயே நீங்க இவ்வளவு அக்கறை எடுத்து, என் அறியாமையைப் போக்கினீங்களே, அதேமாதிரி..."

"ம், சொல்லி முடி"

"என் கழுத்துல தாலி கட்டின புருஷன். என்னை விட மோசமான இருளில் இருக்காரு. அவரை மாற்றி, இப்படியும் உலகம் இருக்கு, சந்தோஷம் இருக்குன்னு அவர் புத்தியை தெளிய வைக்கறது என் கடமை இல்லையாம்மா?"

பளிச்சென மின்னல் தாக்கியதைப் போல அதிர்ந்து போய் நின்றாள் பானு.

"உங்களவுக்குப் பரந்த மனசோட, யாரோ ஒருத்திக்கு நான் உதவலேன்னாலும், என் புருஷனைத் திருத்தறது என் முதல் கடமைன்னு மனசுக்குப் பட்டுடுச்சம்மா. அதுக்குண்டான துணிச்சலைக் கொடுத்தது நீங்கதான்" என்று கைகூப்பியவளை ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள் பானு.

படிப்பும், வேலையும் தன்னை மட்டுமே காத்துக் கொண்டு, நிம்மதியான வாழ்வை தேடிக் கொள்ள வைத்தது என்னை. ஆனால் ராக்காயி...? தன்னை விட விசாலமான மனத்துடன் சிந்திக்கிறாள்!

ராக்காயி, தன் முன் விசுவரூபம் எடுத்து நிற்பதாய் பட்டது பானுவுக்கு.

"நீ புறப்படு ராக்காயி. இன்னிக்கே உன் கடமையை ஆரம்பிச்சுடு. உன் பேச்சு மூலமாய் எனக்கும் புது வழியை காட்டிவிருக்கே" என்று சொல்லி அவள் கைகளை அழுந்தப் பிடித்துக் கொண்டாள் பானு.

ஈஸ்வரி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்

ஈஸ்வரி குரூப் நிறுவனங்கள்

4 எல்டாம்ஸ் ரோடு, முதல் மாடி,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி: 455349, 459557, 457583.

சம்பூர்ண போகம்
100 நாள்
டெபாசிட் சேமிப்பு
April 5th - July 13th

டெபாசிட் திட்டங்கள்

ஃபிக்சட் டெபாசிட்

காலம்	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	குறைந்த பட்ச டெபாசிட் தொகை
1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு	**24%**	ரூ. 10,000/-

ஊக்கத்தொகை 1%

க்யூமுலேடிவ் டெபாசிட்

காலம்	டெபாசிட் தொகை	முதிர்வுத்தொகை	வருடாந்தரவட்டி	ஊக்கத்தொகை
13 மாதம்	ரூ.10,000/-	ரூ.13,000/-	27.70%	1.5%
25 மாதம்	ரூ.10,000/-	ரூ.16,000/-	28.80%	3.0%
37 மாதம்	ரூ.15,000/-	ரூ.30,000/-	32.4%	4.5%

ஈஸ்வரி பாண்ட்

குறைந்த பட்சத்தொகை
ரூ.25,000 இரு மடங்காகிறது 37 மாதங்களில் ரூ.50,000/- ஊக்கப்பரிசு
4 கிராம் தங்கக்காசு

திருமலா பாண்ட்

குறைந்த பட்சத்தொகை
ரூ.50,000 மும் மடங்காகிறது 60 மாதங்களில் ரூ.1,50,000/- ஊக்கப்பரிசு
8 கிராம் தங்கக்காசு

கிளைகள்: பாரிமுனை ஃபோன்: 560767, தி.நகர் ஃபோன்: 825968, புரசைவாக்கம் ஃபோன்: 5324937, 5324940, குரோம்பேட்டை ஃபோன்: 405845 திருவல்லிக்கேணி ஃபோன்: 84187, நங்கநல்லூர் ஃபோன்: 2345891, சாலிகிராமம் ஃபோன்: 428650 பாண்டிச்சேரி ஃபோன்: 31830

எல்லா ஞாயிறு அன்றும் அலுவலகம் இயங்கும்.

உங்கள் வளர்ச்சி ஈஸ்வரியுடன் வளரட்டும்!

16. ஆற்றங்கரையில்

குந்தவியின் முகத்தில் தோன்றிய மாறுதலை மகேந்திரன் கவனித்தான்.

"என்ன, தங்காய்! என்ன!" என்றான்.

தனித்து வந்த குதிரையை வெறித்து நோக்கியவண்ணம் இருந்தாள் குந்தவி. அவள் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வரவில்லை. இதைக் கவனித்த மகேந்திரன், "தங்காய்! அதோ வருகிறது குதிரைதானே! புலி, சிங்கம் அல்லவே? எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்?" என்று கேட்டான்.

குந்தவிக்கு ரோசம் பிறந்தது; பேச்சும் வந்தது. "புலி, சிங்கமாயிருந்தாலென்ன, அண்ணா! - நீ பக்கத்திலே இருக்கும் போது?" என்றாள்.

"பின் ஏன் இப்படி வெறித்துப் பார்க்கிறாய்! - பேய் பிசாசுகளைக் கண்டதைப் போல!"

"அண்ணா! அந்தக் குதிரை யாருடைய குதிரை தெரியுமா?"

"தெரியாது; யாருடையது?"

"அப்பாவினுடையது!"

"என்ன?"

"ஆமாம்; இதே மாதிரி உயர் ஜாதிக் குதிரைகள் இரண்டு அப்பாவிடம் இருக்கின்றன. இது புஷ்பகம்; இன்னொன்று பாரிஜாதம்."

"அப்படியா? இது எப்படி இங்கே தறிகெட்டு வருகிறது? அப்பாவிடந்தான் நாம் காஞ்சியில் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினோமே? அவர் இந்தக் குதிரையில் வந்திருக்க முடியாது."

"செண்பகத் தீவின் இரத்தின வியாபாரிக்கு அப்பா தம் குதிரையைக் கொடுத்ததாகச் சொன்னார்."

"ஓஹோ!"

இதற்குள் குதிரை மிகவும் நெருங்கி வந்து விட்டது. மகேந்திரன் கட்டளைப்படி உடன் வந்த வீரர்களில் ஒருவன் குதிரையைப் பிடித்துக் கொண்டான். அதைத் தன்னருகில் வரும்படி குந்தவி கூறி, அதன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு கனைத்தது. பிறகு, அக்குதிரையையும் பிரயாண கோஷ்டியோடு கொண்டு போனார்கள்.

"அண்ணா! அந்த இரத்தின வியாபாரிக்கு என்ன நேர்ந்திருக்கும்?" என்று குந்தவி மிக்க கவலையுடன் கேட்டாள்.

இரத்தின வியாபாரியை விக்கிரமன் என்பதாகக் குந்தவி சந்தேகிக்கிறாள் என்னும் விஷயம் மகேந்திரனுக்குத் தெரியாது. ஆகையால் அவன் அலட்சியமாக, "பல்லவ சக்கரவர்த்தியைச் சுமந்த குதிரை கேவலம் ஒரு வியாபாரியைச் சுமக்குமா? எங்கேயாவது கீழே தள்ளிக் குழியும் பறித்து விட்டு வந்திருக்கும்!" என்று கூறிச் சிரித்தான்.

குந்தவியின் உள்ளம் துடித்தது. ஆனால் ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஓர் ஆறுதலான எண்ணமும் உண்டாயிற்று. உண்மையிலே இந்தக் குதிரை அவனைத் தள்ளி விட்டு வந்திருக்குமானால் அவன் சோழ ராஜகுமாரனாக இருக்க மாட்டான். சாதாரண வர்த்தகனாய்த் தானிருப்பான் - ஆனால் அந்த இரத்தின வியாபாரியின் தீரத்தைப் பற்றியும் போர்த் திறமையைப் பற்றியும் அப்பா ரொம்பச் சொன்னாரே? ஐயோ! அவனுக்கு என்ன நேர்ந்திருக்கும்? - இவ்வளவு அறிவுள்ள பிராணியான குதிரைக்குப் பகவான் பேசும் சக்தி மட்டும் கொடுக்காமல் போய் விட்டாரே? அந்தச் சக்தி இருந்தால் இரத்தின வியாபாரிக்கு என்ன நேர்ந்தது என்ற இரகசியத்தை அது வெளியிடுமல்லவா? - புஷ்பகத்துக்குப் பேசும் சக்தி திடீரென்று ஓர் அற்புதத்தினால் வந்து விடக் கூடாதா என்று ஆசைப்பட்டவளைப் போல் குந்தவி அதன் முதுகை அடிக்கடி தடவிக் கொண்டு வந்தாள்.

இப்படி பிரயாணம் நடந்து கொண்டிருக்கையில், கொஞ்ச நேரத்துக்குப் பிறகு

சுற்றுப்புறக் காட்சியின் தோற்றத்தில் ஒரு மாறுதல் காணப்பட்டது. தரை ஈரமாயிருந்தது. அங்கங்கே பள்ளமான இடங்களில் நீர் தேங்கியிருந்தது. மரங்கள் பளிச்சென்று இருந்தன. காற்றும் குளிர்ந்து வந்தது.

"தங்காய்! நேற்று இங்கெல்லாம் பெருமழை பெய்திருக்கிறது. காஞ்சியில் ஒரு துளி கூட விழவில்லையே?" என்றான் மகேந்திரன்.

அதைப் பற்றியேதான் குந்தவியும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஒருவாறு அவளுக்கு உண்மை புலப்பட ஆரம்பித்தது. நேற்று மாலை திடீரென்று இந்தப் பக்கத்தில் பெரும் புயலும் மழையும் அடித்திருக்கிறது. அதில் புஷ்பகமும் இரத்தின வியாபாரியும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குதிரை எப்படியோ தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது. இரத்தின வியாபாரி - ஐயோ, பாவம்! அவனுக்கு என்ன நேர்ந்ததென்பது வழியில் எங்கேயாவது தெரியவருமா? விபத்து நடந்த இடத்தைப் புஷ்பகம் காட்டுமா? ஒருவேளை உயிர் போன அவனுடைய உடலைக் காணும்படியாக நேருமோ?..... சிவசிவ!... அந்தச் சகிக்க முடியாத நினைப்பினால் குந்தவி கண்களை மூடிக் கொண்டாள்.

கனவு

இவ்விதம் ஈரமான பிரதேசங்கள் வழியாக அரை காத தூரம் போன பிறகு சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகைப் பொழுது இருக்கும் சமயத்தில் காட்டாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். நேற்று மாலை அந்தக் காட்டாறு அளித்த காட்சிக்கு இப்போதைய காட்சி நேர்மாறாயிருந்தது. நேற்று அங்கே ஊழிக்காலத்து மகாப் பிரளயத்தைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே ஜலப் பிரவாகமாய், பிரம்மாண்டமான சுழல்களுடனும் ஹோ என்ற பேரிரைச்சலுடன் அலைமோதிக் கொண்டு போன வெள்ளம் பார்க்கப் பீதிகரமான காட்சியை அளித்தது.

இன்று அதே பிரதேசம் பிரளயத்துக்குப் பிறகு ஏற்படும் புது உலக சிருஷ்டியின் நவ மோகனத்தைப் பெற்றிருந்தது. காட்டாற்றின் மத்தியில் முழங்காலளவு ஜலம் சலசலவென்ற சப்தத்துடன் போய்க் கொண்டிருந்தது. அஸ்தமன சூரியனின் பொற்கிரணங்கள் பசுமரக் கிளைகளின் வழியாக வந்து ஓடும் ஜலத்தில் தவழ்ந்து விளையாடி வர்ண ஜாலங்களைக் காட்டின. நதிக்கரைப் பறவைகள் மதுரகானம் செய்து கொண்டு மரங்களில் உள்ள கூடுகளை நோக்கி வந்தன. அழகும் அமைதியும் ஆனந்தமும் அங்கே குடிகொண்டிருந்தன.

ஆனால் குந்தவியின் உள்ளத்திலோ நேற்று அங்கே அடித்த புயலும் மழையும் இப்போது குமுறிக் கொண்டிருந்தன. நேற்று அந்தக் காட்டாற்றில் பெருவெள்ளம் பெருகியிருக்க வேண்டுமென்று அவள் தெரிந்து கொண்டாள். நதிக்கரை மரங்களின் அடிமரத்தில் தண்ணீர்ப் பிரவாகத்தின் புது அடையாளம் நன்றாகப் பதிந்திருந்தது. தாழ்ந்த கிளைகளில் வெள்ளத்தில் வந்த வைக்கோல் முதலியவை சிக்கிக் கொண்டிருந்தன. காட்டாற்று வெள்ளமாதலால் மளமளவென்று பெருகியிருக்க வேண்டும். இரத்தின வியாபாரியின் கதியை ஒருவாறு குந்தவி இப்போது ஊகித்தாள். காட்டாற்று வெள்ளத்தின் சக்தியை அறியாமல் அவன் நதியில் இறங்கியிருப்பான். அல்லது அவன் இறங்கிய பிறகு பிரவாகம் திடீரென்று பெருகியிருக்கும். குதிரை எப்படியோ தப்பி கரையேறியிருக்கிறது. பாவம்! அது வெகுநேரம் கரையிலேயே இரத்தின வியாபாரியை எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கும். அவன் கரைக்கு வராமல் போகவே காஞ்சியை நோக்கிக் கிளம்பியிருக்கிறது. இரத்தின வியாபாரி - ஐயோ! பிரவாகத்துக்கு இரையாகியிருக்க வேண்டும். அடடா! தாயாரைப் பார்ப்பதற்காக அவசரமாக உறையூருக்குப் போவதாகச் சக்கரவர்த்தியிடம் சொன்னானாமே? அவனுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்...?


இப்படி குந்தவி எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் பல்லக்கு

நீரோட்டத்தின் அருகில் வந்தது. எல்லாரும் ஜலத்தில் இறங்கினார்கள். ஆனால் புஷ்பகம் மட்டும் நீரில் இறங்கத் தயங்கிற்று. நதிக் கரைக்கு வந்ததிலிருந்தே அதனுடைய தயக் கம் அதிகமாயிருந்ததை எல்லாரும் கவனித் தார்கள். அதைப் பிடித்து வந்த போர் வீரன் நீரோட்டத்தில் இறங்குப்படியாக அதைப் பலவந்தப்படுத்தினான். குதிரையும் இறங் கிற்று. அவ்வளவுதான்; உடனே, அது ஒரு திமிறு திமிறிக் கொண்டு போர் வீரனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டது. வந்த கரையை நோக்கித் திரும்பி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடியது. கரையை யடைந்ததும் அது நிற்கவில்லை. வேகம் இன்னும் அதிக மாயிற்று. வில்லிலிருந்து கிளம்பிய இராம பாணம் என்பார்களே, அது மாதிரி நாலு கால் பாய்ச்சலில் பறந்து ஓடி எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே காஞ்சி செல்லும் சாலையில் கண்ணுக்கெட்டாத தூரம் வரையில் சென்று மறைந்தது.

"புஷ்பகம் என்று அப்பா பெயர் வைத் தது சரிதான். தரையில் அதன் கால்கள் தொட்டதாகவே தெரியவில்லையே!" என்றான் மகேந்திரன்.

17. தீனக் குரல்

ராஜ பிரயாணிகளும் பரிவாரங்களும் அந்தக் காட்டாற்றங்கரையில் உணவு அருந்தினார்கள். விதவிதமான பட்சணங் களும் பான வகைகளும் குந்தவி, மகேந்திரன் இவர்கள் முன் வைக்கப்பட்டன. மகேந்தி ரன் உற்சாகமாகச் சாப்பிட் டான். குந்தவிக்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. உணவுப் பொருள்களை ஆற்றங்கரைக் காக்கை களுக்கு வீசி எறிந்து அவை பறந்து வந்து கவ்விக் கொள் வதைப் பார்த்து மகிழ்ந்தாள். இந்த மகிழ்ச்சியும் வெளிப் படையானதுதான். மனத் திலே அந்தக் காட்டாற்று வெள்ளத்தில் மூழ்கி மாண்டு போன இரத்தின வியாபாரி யின் நினைவு பெரிய பார மாயிருந்தது. ஆம்; இறந்து போனவன் இரத்தின



வியாபாரிதான், - சோழ நாட்டு இராஜகுமாரன் அல்ல என்று குந்தவி ஒருவாறு முடிவு செய்து கொண்டிருந்தாள். தன் உள்ளத்தைக் கவர்ந்த சுகுமாரனுக்கு அத்தகைய கதி நேர்ந்தது என்ற எண்ணத்தை அவளால் சகிக்க முடியாவில்லை; ஆகையால் அதில் நம்பிக்கையும் பிறக்கவில்லை.

உணவருந்திச் சற்று இளைப்பாறி விட்டு எல்லாரும் கிளம்பிக் கரையேறியபோது குந்தவிக்கு ஒரு நினைவு தோன்றியது. அகால மரணமடைந்தவர்களின் ஆவி அவர்கள் இறந்த இடத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கும் என்று சொல்வார்களே. அது உண்மையா? ஒருவேளை அந்த இளம் ரத்தின வியாபாரியின் ஆவியும் இந்த ஆற்றங்கரையிலேயே வட்டமிட்டுக் கொண்டிருக்குமா? நள்ளிரவில் இங்கே பயங்கரமாக அலறுமோ? - இப்படி அவள் எண்ணியபோது, எங்கேயோ வெகு தொலை தூரத்திலிருந்து மிகவும் தீனமான ஒரு குரல் கேட்பது போலிருந்தது. அந்த மெலிந்த குரல், 'அம்மா! அம்மா!' என்பது போல் அவளுக்குத் தோன்றியது. குந்தவியின் தேகம் சிலிர்த்தது. அது தன்னுடைய சித்தப் பிரமையா? அல்லது உண்மையில் இரத்தின வியாபாரியின் ஆவி அலறும் குரல்தானா? அண்ணாவிடம் கேட்கலாமென்று வாயெடுத்தாள். ஆனால் பேசுவதற்கு நா எழவில்லை.

இது என்ன அதிசயம்? பல்லக்கு மேலே போகப் போக, அந்தக் குரல் கெட்டியாகி வருகிறதே? இரத்தின வியாபாரியின் ஆவி தங்களைத் தொடர்ந்து வருகிறதா, என்ன?


இன்னும் சற்று தூரம் போனதும், "அம்மா! அம்மா!" என்னும் அந்த அபயக் குரல் தெளிவாகக் கேட்கத் தொடங்கியது. அது நிஜமான மனிதக் குரலாகவே தொனித்தது.

ஒருவாறு குந்தவி சமாளித்துக் கொண்டு, "அண்ணா! ஏதோ தீனக்குரல் கேட்பது போலிருக்கிறதே? உனக்குத் தெரிகிறதா?" என்று கேட்டாள்.

"ஆமாம், தங்காய்! யாரோ 'அம்மா! அம்மா!' என்று அலறும் குரல் கேட்கிறது" என்று மகேந்திரன் சொல்லிக் குதிரை மேலிருந்தபடியே சுற்று முற்றும் பார்த்தான்.

"அதோ அந்த மண்டபத்திலிருந்து குரல் வருவது போலிருக்கிறது!"

ஆற்றங்கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலேதான் விக்கிரமன் தங்கிய மகேந்திர மண்டபம் இருந்தது. சாலையில் அந்த மண்டபம் இருக்குமிடம் நெருங்கியதும், குரல் அங்கிருந்துதான் வருகிறது என்று ஐயமறத் தெரிந்தது. குந்தவி பல்லக்கை அந்த





அருள்வாக்கு

ஒவ்வொரு குடும்பத்திலும் சமைப்பதற்காகப் பானையில் அரிசி போடும்போது ஒரு பிடி பகவானை நினைத்துக் கொண்டு, ஏழைகளுக்கு என்று ஒரு கலயத்தில் போட்டுவிட வேண்டும்; இப்படிப் பல குடும்பங்களில் தினமும் போட்டு வைப்பதைப் பேட்டைக்குப் பேட்டை சேகரித்து, சமைத்து ஆங்காங்குள்ள ஆலயத்தில் நிவேதனம் செய்து, ஏழைகளுக்கு அளிக்க வேண்டும். ஒரு பிடி அரிசியோடு ஒரு பைசாவும் தினந்தோறும் போட வேண்டும். சேகரித்த அரிசியைச் சமைப்பதற்கான விறகுக்கு, சாதத்தில் சேர்த்துக் கொள்ள மிளகுப் பொடியோ அல்லது வேறு ஏதாகிலும் வியஞ்சனமோ தயாரிப்பதற்கு, சமையல் பாத்திர வாடகைக்கு – இப்படிப்பட்ட மேல் செலவுகளுக்காகத்தான் அந்த ஒரு பைசா. இந்தத் திட்டத்தை நடத்திக் காட்டுவது பெரிய பரோபகாரம். பசித்து வந்த ஏழைகளுக்கு ஈசுவரன் கோயிலில் இப்படிப் பிரசாதம் கிடைக்கிறது என்றால் வயிறும் மனசும் குளிரும். இதனாலாவது கோயிலுக்கு வருகிற வழக்கம் ஏற்பட்டு பக்தியும் வளரும். வெறுமே 'சாப்பாடு' என்றில்லாமல், ஈசுவரனுக்கு நிவேதனமான பிரசாதமாக இருப்பதால் அந்த அன்னம் சித்தசுத்தியும் அளிக்கும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்காராச்சார்ய சுவாமிகள்.

மண்டபத்தருகே கொண்டு போகச் சொன்னான். ஏதோ ஒரு அதிசயத்தைக் காணப் போகிறோம் - பெரியதோர் இரகசியத்தைக் கண்டுபிடிக்கப் போகிறோம் - என்ற எண்ணத்தினால் அவனுடைய நெஞ்சம் திக்திக் என்று அடித்துக் கொண்டது.

மண்டபத்திலிருந்து வந்த குரல் விக்கிரமனுடையதுதான் என்று வாசகர்கள் ஊகித்திருப்பார்கள். அன்று காலையில் பொன்னன் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து கண் விழித்து எழுந்த போது, தனக்கு முன்னமே விக்கிரமன் எழுந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

"பொன்னா! கிளம்பலாமா?" என்று கேட்டான் விக்கிரமன்.

இருவரும் கலந்து யோசித்து, வெய்யிலுக்கு முன்னால் புறப்பட்டுச் சாலையோடு நடந்து போவது என்றும், வழியில் வண்டி கிடைத்தால் வைத்துக் கொள்வது என்றும் தீர்மானித்துக் கொண்டு கிளம்பினார்கள். ஆனால், கிளம்பி விக்கிரமன் சில அடி தூரம் நடப்பதற்கு முன்னமே அவன் தள்ளாடுவதைப் பொன்னன் கவனித்தான். 'மகாராஜா...' என்று அவன் ஏதோ கேட்க ஆரம்பிப்பதற்குள்ளே விக்கிரமன் தரையில் அப்படியே உட்கார்ந்து விட்டான். பொன்னன் பரபரப்புடன் விரைந்து விக்கிரமனை அணுகி, "ஐயோ! என்ன மகாராஜா? உடம்புக்கு என்ன?" என்று கேட்டான்.

"தலையை அசாத்தியமாய் வலிக்கிறது. பொன்னா! ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் பட் பட் என்று போடுகிறது. காலும் தடுமாறுகிறது. எனக்கு என்னமோ தெரியவில்லை!" என்றான் விக்கிரமன்.

பொன்னன் அவனுடைய உடம்பைத் தொட்டுப் பார்த்து விட்டு, "ஐயோ! மகாராஜா! உடம்பு கொதிக்கிறதே! இராத்திரி நன்றாய்த் தூங்கினீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை; என்னவெல்லாமோ ஞாபகங்கள். சரியாகத் தூக்கம் வரவில்லை."

"ஜுரந்தான் காரணம், மகாராஜா! பாவி நான் கும்பகர்ணனைப் போல் தூங்கினேன். என்னை எழுப்பியிருக்கக் கூடாதா? - இந்த உடம்போடு உங்களால் ஒரு அடி கூட நடக்க முடியாது. வாருங்கள்!" என்று சொல்லி விக்கிரமன் கையைப் பிடித்துத் தூக்கி விட்டு அணைத்துக் கொண்டபடியே மீண்டும் மண்டபத்திற்குள் கொண்டு சேர்த்தான்.

பிறகு, பொன்னன் நதிக்கரைப் பக்கம் ஓடிச் சென்று அங்கே சிந்திக் கிடந்த வைக்கோலையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்தான். வைக்கோலைப் பரப்பி அதன் மேல் விக்கிரமனைப் படுத்துக் கொள்ளச் செய்தான்.

மேலே என்ன செய்வது என்று இருவரும் யோசனை செய்தார்கள். சாலையோடு போகும் மாட்டு வண்டிக்காகக் காத்திருந்து, ஏதாவது ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு அடுத்த ஊருக்குப் போவதென்றும், அங்கே வைத்தியம் பார்த்துக் கொண்டு கொஞ்சம் உடம்பு தேறியதும் கிளம்புவதென்றும் தீர்மானித்தார்கள். வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

"ஐயோ! இச்சமயம் வள்ளி இங்கே இல்லாமல் போனாளே? ஏதாவது மந்திர சக்தி

14.5.95 இதழில்

வாசன்

எழுதும்



மர்மம் மிகுந்த விஞ்ஞானத் தொடர்கதை ஆரம்பம்!

யினால் அவன் திடீரென்று இங்கே வந்து விடக் கூடாதா?" என்று பொன்னன் அடிக்கடி எண்ணமிட்டான். ஜுரமாகக் கிடக்கும் விக்கிரமனுக்கு வேண்டிய சிகுருஷை செய்ய அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விக்கிரமன் 'தாகம்' 'தாகம்' என்று பறந்தான். அந்த மண்டபத்தின் பின்புறத்தில் பிரயாணிகள் சமையல் செய்து விட்டு எறிந்திருந்த மண் சட்டிகள் சில கிடந்தன. அவற்றில் ஒரு சட்டியைப் பொன்னன் எடுத்துக் கொண்டு போய் நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தான். பொற்கிண்ணத்தில் தண்ணீர் அருந்த வேண்டிய மகாராஜா இந்தப் பழைய மண் சட்டியில் குடிக்க வேண்டியதாயிற்றே என்று பொருமினான்.

நேரமாகிக் கொண்டேயிருந்தது. ஜுரமும் அதிகமாகிக் கொண்டிருந்தது. பொன்னனுக்கு ஒரு பக்கம் பசி எடுத்தது. இன்னது செய்வதென்று தெரியாமல் மனம் குழம்பிற்று. மகாராஜாவுக்கு வைத்தியம் செய்யாமல், தானும் சாப்பிடாமல் இருந்தால் இரண்டு பேரும் அங்கேயே மடிய வேண்டியதுதான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான். பக்கத்திலுள்ள ஏதாவது ஒரு ஊருக்குப் போய் வைத்தியனையும் அழைத்துக் கொண்டு ஒரு வண்டியையும் அமர்த்திக் கொண்டு வர வேண்டியது. அது வரையில் விக்கிரமனைச் சோழரின் குலதெய்வமான முருகக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

விக்கிரமனும் வேறு வழியில்லையென்று இதற்குச் சம்மதிக்கவே, பொன்னன் மீண்டும் மீண்டும் மண்டபத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு விரைவாக நடந்தான்.

பொன்னன் போன பிறகு விக்கிரமனுக்கு இன்னும் ஜுரம் அதிகமாயிற்று. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நல்ல நினைவு தப்பி விட்டது. மனதில் என்னவெல்லாமோ குழப்பமான எண்ணங்கள் குமுறின. வாய் என்னவெல்லாமோ சம்பந்தமில்லாத சொற்களைப் பிதற்றியது. அளவில்லாத வலியினால் உடம்பை முறித்துப் போட்டது. வர வரப் பலவீனம் அதிகமாயிற்று. கடைசியில் வாயிலிருந்து குமுறிய சொற்கள் வருவது நின்று, "அம்மா! அம்மா!" என்று கதறல் மட்டும் தீனமான குரலில் வரத் தொடங்கியது.

இப்படிப்பட்ட நிலைமையில்தான் குந்தவியின் பல்லக்கு அந்த மண்டபத்தின் வாசலில் வந்து நின்றது. குந்தவி அவசரமாகப்

பல்லக்கிலிருந்து இறங்கி மண்டபத்தின் வாசற்படியில் வந்து நின்று உள்ளே பார்த்தான். ஆமாம்; இரத்தின வியாபாரிதான். அவனுடைய பால் வடியும் முகம் தாப ஜ்வரத்தினால் கோவைப் பழம்போல் சிவந்திருந்தது. விசாலமான கண்கள் ஒருகணம் மேல் நோக்கித் திருதிருவென்று விழிப்பதும் மறுபடி மூடுவதுமாயிருந்தன. "அம்மா! அம்மா!" என்று வாய் அரற்றியது.

இந்தக் காட்சியைக் கண்டதும் குந்தவியின் உள்ளத்தில் உண்டான உணர்ச்சிப் புரட்சியை உள்ளபடி விவரிப்பது இயலாத காரியம். வியப்பு, மகிழ்ச்சி, துக்கம், இரக்கம் ஆகிய பல்வேறு மாறுபட்ட உணர்ச்சிகள் ஒன்றோடொன்று கலந்து போராடின. எல்லாவற்றிற்கும் மேலாகப் பரபரப்பு விஞ்சி நின்றது.

"அண்ணா! அண்ணா! இவன் இரத்தின வியாபாரிதான், அண்ணா! இவனுக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது. வைத்தியரைக் கூப்பிடு" என்று கூச்சலிட்டாள்.


ராஜ பிரயாணிகளுடன் கூடப் பிரயாணம் செய்த ராஜ வைத்தியர் வந்து பார்த்தார். "கடுமையான விஷ ஜுரம்; உடனே சிகிச்சை செய்யவேணும். குணமாவதற்குப் பத்து நாள் பிடிக்கும்" என்றார்.

"பாவம்! இவனை நம்முடன் அழைத்துப் போகலாம் அண்ணா! செண்பகத் தீவைப் பற்றி இவனிடம் கேட்க வேண்டிய காரியமும் இருக்கிறதல்லவா?" என்றாள் குந்தவி.

பிறகு காரியங்கள் வெகு துரிதமாக நடந்தன. இராஜ வைத்தியர் ஏதோ மருந்து எடுத்துக் கொண்டு வந்து விக்கிரமனுடைய நாவில் தடவினார். பின்னர் அவனைத் தூக்கிக் கொண்டு வந்து குந்தவியின் பல்லக்கில் போட்டார்கள். குந்தவி குதிரை மீது ஏறிக் கொண்டாள். மறுபடியும் பிரயாணம் ஆரம்பமாயிற்று.

பொன்னன், போன இடத்தில் வெகு கஷ்டப்பட்டு ஒரு வைத்தியனைத் தேடிப் பிடித்தான். வண்டியும் அமர்த்திக் கொண்டு மகேந்திர மண்டபத்துக்கு வந்து, "மகாராஜாவுக்கு எப்படியிருக்கிறதோ?" என்று திக்திக்கென்று நெஞ்சு அடித்துக் கொள்ள உள்ளே வந்து பார்த்த போது மண்டபம் சூனியமாயிருக்கக் கண்டான். அவன் தலையில் திடீரென்று இடி விழுந்தது போல் இருந்தது.

(தொடரும்)



"அமைச்ச 'ஜெ ஷேப் புல' பா[illegible] வச்சாத்தான் தண்ணீர்ப் பந்தல் திறக்க வருவேன்னு சொன்னாராம்!"

- மௌலஷ்மி



(ஒரு பெண்மணி பிளாட்பாரக் கடையில்)

"நாலு நாளைக்கு முன்ன, இதே டப்பாவை இருபத்தி நாலு ரூபாய்க்கு வாங்கிட்டுப் போனேன். இன்னிக்கு அதே டப்பாவை இருபத்தி அஞ்சு ரூபாய்க்குக் குறைய மாட்டேங்கறீங்க."

"அப்போ நிலைமை வேறங்கம்மா, இப்போ தண்ணிப் பந்தல் வெச்சி, வசூல் நடக்குதில்லை! அப்புறம் எப்படிக் கட்டுப்படியாகும்?".

தண்ணீர்ப் பஞ்சமா? கவலை வேண்டாம்!

தண்ணீர்ப் பற்றாக்குறை நேரத்தில் வீட்டில் இருக்கிற செடி-கொடி மரங்களுக்கு என்ன செய்வது?

"கவலைப்பட வேண்டாம்!" என்கிறார் டாக்டர் எஸ். நடராஜன்; அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர்.

"செடியில் ஒரு கிளையில், ஒரு சிறிய பிளாஸ்டிக் உறையைக் கட்டித் தொங்க விடுங்கள். (ஆவின் பால் பாக்கெட் மாதிரி). அதில் தண்ணீர் விட்டு, ஒரு சிறிய துணியை பாக்கெட் தண்ணீரில் நன்றாக நனைந்திருக்கிற அளவு நுழையுங்கள். துணியின் இன்னொரு நுனியைச் செடியின் கிளையில் நன்றாகச் சுற்றிவிடுங்கள். வாரத்துக்கு ஒரு முறை, தண்ணீர் குறைகிற அளவுக்கு, பாக்கெட்டில் தண்ணீர் விட்டால் போதும். அந்தக் கிளையிலிருந்து இன்னும் கிளைகள் வேறு வெளிப்பட்டு, செடி வளரும். வாடவே வாடாது!"

- நம்பி

ஜனியம்







சுருண்டு படுத்திருந்தாள் நந்திதா. தலையணையை அணைத்துக் கொண்டு, இடது கையை பாதுகாப்பாக அதன் மேல் போட்டுக் கொண்டு, அருகே அம்மா இருக்கிற நினைப்பில் தூங்கினாள். மஞ்சுளா அவளருகில் வந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். ஜுரம் குறைந்திருந்தது. ஸ்டூல் மேல் ப்ளாஸ்கும் பிரித்த மாத்திரைக் காகிதமும் விக்ஸ் டப்பாவும் இருந்தது. சுவற்றில் காலண்டரில் மாதுரி தீட்சித். அதனருகே நந்திதாவும் ரவியும் மஞ்சுளாவின் இருபுறமும். தேக்கடி போன போது எடுத்தது. ஓரத்தில் உபயோகமில்லாத பாட்மின்டன் ராக்கெட்.

மஞ்சுளா யோசித்தாள்.

லீவு போட்டு விடலாமா பேசாமல்? வேண்டாம். இன்று அவசியம் ஆபீசில் தலையைக் கொடுத்தாக வேண்டும். எப்படியும் இன்றைக்குள் அந்த விஷயத்திற்கு ஒரு தீர்வு கண்டாக வேண்டும்.

தியாகராஜன் சுகமாக தூங்கிக் கொண்டிருந்தான். கணவன்! முதன் முதலில் அவள் எம்பிராய்டரி செய்திருந்ததை, புதிதாய் பண்ணின 'எக்பெனடிக்ட்'டை, அவளது சர்ரியலிச பெயின்ட்டிங்கைப் பாராட்டினவன்.

இப்போது?

மெலிதாய்க் கணவனைப் பார்த்தாள். பக்கத்தில் படுத்திருந்த ரவியும் அதே போல ஒருக்களித்துப் படுத்திருந்தான். அதே திமிர்? அச்சு அசலாக அதே சாயல். இவனும் தியாகு மாதிரியே வருவானா?

தூங்கப் பிடிக்காமல் எழுந்து பின்கட்டிற்கு வந்தாள். பல் தேய்த்து முகம் அலம்பிக் கொண்டு, காலை நேர குளிர்காற்றின் ஜில்லிப்பை அனுபவிக்க இயலாத அபார்ட்மென்ட் சிறையின் ஆறாவது மாடியிலிருந்து வெளியே பார்த்தாள். தொலைவில் சாம்பல் வானம். 'U' வடிவ பறவைகள் கூட்டம். அப்போது மளுக்கென ஒரு கண்ணீர் முத்து மஞ்சுளாவின்

விஜயநிலா

விழியோரம் திரண்டது.

எத்தனை பெரிய வாய்ப்பு. அலுவலகத்தில் எத்தனை பேரின் பச்சைக் கண்களிடையே கிடைத்த பதவி உயர்வு. எத்தனை சடுதியில் இந்த வாய்ப்பு. அப்பாவின் ஞாபகம் வந்தது. அப்பா... நீங்கள் நினைத்த மாதிரியே ஆபீசர் போஸ்ட். ஆறே வருடத்தில் என் திறமைக்கான சன்மானம். பெரிய தாய் தனி வீடு, ஃபோன், கார் இத்யாதி...

"**தா**பாரு மஞ்சு. இப்ப எதுக்கு உனக்கு ப்ரமோஷன்? இதை ஒப்புத்துக்கிட்டியானா உன்னால வீட்டை கவனிக்க முடியாது. அப்புறம் ரவி, நந்திதாவை யார் பார்த்துக்குவா?"

மிக அழகான வார்த்தைகளை ஜாக்கிரதையாக அமைத்து சொன்னான். தொலைபேசியில் சந்தோஷத்தை தெரிவித்தவுடன். அலுவலகத்தில் அனைவரும் அவளது ரியாக்ஷனை கவனித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு.

"இல்லீங்க. சாதாரணமா எல்லாருக்கும் கிடைக்கிற வாய்ப்பு இல்லை. என் திறமை, தகுதியைப் பார்த்துட்டு..."

"சரி எதுவானா என்ன. லுக் மஞ்சளா. எனக்கு ஊர் ஊரா சுத்தற சேல்ஸ்மேன் வேலை. வீட்டை யார் கவனிக்கறது. குழந்தைங்களோட படிப்பு பாழாப் போயிரும். யாராவது கேட்டா ஒப்புத்துக்காதே. யோசிச்சு பதில் சொல்றேன்னு சொல்லு."

"சரிங்க"

வீட்டிற்கு வந்ததும் ஒரு கும்பல் அவளை உற்சாகமாய் மொய்த்தது. கசப்பாகச் சிரித்தாள்.

"என்ன சொல்றாரு உன் ஹஸ்பெண்ட்? எப்ப மஞ்சு எங்களுக்கெல்லாம் ட்ரீட் தரப் போறே?"

மறுபடி சிரித்தாள்.

இப்போது அந்தக் காட்சி மறைந்து நேற்றிரவு அவன் பேசியது நினைவிற்கு வந்தது. ஏன் இத்தனை உபதேசங்கள். பணிவான மிரட்டல்கள். எதற்காக தியாகு என்னை மூளைச் சலவை செய்கிறான்? வீட்டை கவனித்துக் கொள்ளத்தான் பெண்டாட்டி என்றால் அவளை எதற்காக வேலைக்கு அனுப்ப வேண்டும்?

சொல் என் கணவனே. உனக்கு எது வேண்டும்? நானா இல்லை என் பணமா?

புரிந்தது அவனுக்கு. நானும் வேண்டும். என் பணமும் வேண்டும். வா, நீ ஒரு பெண். உன்னை தெய்வமாய் பூஜிக்கிறேன். இந்த வீடும் நானும் என் குழந்தைகளையும் நீதான் பராமரிக்க வேண்டும். நீ இல்லையென்றால்

> "கையில காசு இல்லாம சைனீஸ் ஓட்டலுக்கும் போய் சாப்பிட்டது தப்பா போச்சு."
>
> "ஏன்?"
>
> "பத்து பாம்பைக் கையில கொடுத்துத் தோல் உரிக்கச் சொல்லிட்டாங்க!"
>
> — சீர்காழி வி. ரேவதி

எல்லாம் ஸ்தம்பித்து விடும் இங்கு. அதற்காக வீட்டில் வளைய வந்து கொண்டிரு. வேலைக்குப் போனால் என்னை விட அந்தஸ்தில் உயர்ந்து விடாதே. இதுதானே உன் விருப்பம். சிரிப்பு வந்தது அவளுக்கு.

அப்பா, நீங்கள் மட்டும் எப்படி தப்பிப் பிறந்தீர்கள் அப்பா? அம்மாவை எப் படி உங்களால் நேசிக்க முடிந்தது? மாங்கு மாங்கென்று அடுப்படியில் வேகிற அம்மாவை உங்களுக்கு சமமாய் எப்படி ஈகோ இல்லாமல் நடத்த முடிந்தது?

பால் பாக்கெட் எடுத்து வந்து பிரித்து டிகாஷன் இறக்கி காப்பி போட்டாள். இப்போது தியாகராஜன் எழுந்து வந்திருந்தான்.

"நந்திதாவுக்கு எப்படியிருக்கு இப்ப?"

"பரவாயில்லை. ஜுரம் விட்டிருக்கு."

"சரி விடு. என்ன முடிவு பண்ணிருக்கே?"

"எதைப் பத்தி?"

முறைத்தான். காலி டம்ளரை சமையல் மேடையில் வைத்து விட்டு கேட்டான்.

"என்ன நினைச்சுட்டு பேசற நீ. அதுக்குள்ள ஆபீசர் தோரணை வந்தாச்சா?"


"சே என்ன பேச்சு பேசறீங்கப்பா. சாதாரணமாத்தான் கேட்டேன். கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணிப் பாருங்க. லேசில வராத சான்ஸ். ரெண்டாயிரம் ரூபா மாசா மாசம் கூட வரும். இன்னும் நிறைய வசதிங்க."

"அதனால சில இழப்புகளும் வருதே" என்று லுங்கியை மடித்துக் கொண்டு இடுப்பில் கையூன்றியபடி சொன்னான்.

"அதனால என்னங்க. யாராவது நல்ல ஆளா போட்டுலாம்!"

"லோ வசதி வந்துட்டா எல்லாத்துக்கும் ஆள் போட்டுலாம். ஸப்போஸ் எனக்கு உடம்பு முடியாமப் போச்சுன்னா கூட....."

என்ன மனிதன் இவன். இவன் கண்களில் பொறாமை இருக்கிறது. இது என் கணவனே இல்லை. இதெல்லாமே கூட



நிஜத்தில் நடக்காமல் நான் யாருடைய கனவிலாவது இருக்கிறேனா. சட்டென்று என்னை எழுப்பப் போகிறார்களா?

"என்ன பதிலையே காணோம்?" பாத்ரூமிலிருந்து கேட்டான் வாயில் ப்ரஷ்ஷுடன்.

" த பாருங்க, உங்களை விட எனக்கு சீக்கிரம் ப்ரமோஷன் வந்திருச்சேன்னு ஏதோ ஒரு காம்ப்ளக்ஸ்தான் உங்களை அப்படிப் பேசச் சொல்லுது. கொஞ்சம் யோசிச்சுப். பாருங்க."

ஒரு செகண்ட் அத்தனை இரத்தமும் அவன் முகத்தை விட்டு வெளியேறி விட்ட மாதிரி இருந்தது. அவன் கண்களில் ஒரு விநோத ஜொலிப்பு தென்பட்டது. தொண்டையை செருமிக் கொண்டான்.

"யாருக்குடி காம்ப்ளக்ஸ்? உனக்குதான் ஸுப்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ் வந்திருச்சு. ஆறு வருஷத்துல யாருக்குமே லேசில கிடைக்காத ப்ரமோஷன் சான்ஸ்.... அதெப்படிய்யா சரியா என் பெண்டாட்டிக்கு மட்டும் கரெக்டா வந்துருது! ஒரு சந்தேகம் வருதா இல்லையா. நீதான் உன் ஆபீஸிலேயே ஜோன் ஆஃப் ஆர்க்கா?" என்றான்.

கையில் வைத்திருந்த காப்பியை சிங்கில் கொட்டினாள். சே, இவ்வளவுதானா உன் படிப்பு, அறிவு எல்லாம். இவனுக்கா... இவனுக்கா துணிந்து கழுத்தை கொடுத்தோம். இவனுக்கா இரவுகளில் உடம்பைக் கொடுத்தோம்! உடம்பு முழுவதும் புழு ஊர்வதாக உணர்ந்தாள் மஞ்சுளா.

பேசாமல் டிவோர்ஸ்?

சாத்தியமில்லை. ரவி, நந்திதாவின் மனதை என் எந்த ஒரு செயலும் பாதிக்கலாம். அன்று முழுக்க ஆபீசில் மௌனமாய் அழுதாள். உள்ளே எம்டியின் குஷன் பதித்த நாற்காலி, சன்னமான ஏசி, இண்டீரியர் டெகரேஷன் மனதை என்னவோ செய்தது. எனக்கும் இம்மாதிரி ஒரு பதவி, அதற்கான ஆளுமை பொருந்திய அறை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. என்ன செய்யப் போகிறேன் நான்? அன்றிரவு தீர்மானித்தாள் மஞ்சுளா.

"என்னங்க"

"என்ன?"

முகம் திருப்பாமல் குரல் மட்டும் கேட்டது. சொன்னாள்.

"நான் முடிவு பண்ணியாச்சுங்க!"

"................"

"நான் ப்ரமோஷன் வேணாம்னு எழுதிக் கொடுத்திட்டேன். நீங்க சொன்னது முழுக்க யோசிச்சு பார்த்தேன். குழந்தைங்க படிப்பு கெடும். நீங்களும் ஆபீஸ் வேலையா ஊர் ஊரா அலையணும். உங்களையும் கவனிச்சுக்க முடியாது."

"அதான் நான் சொன்னேன், நீ கேக்கலை. பணம் என்ன பணம். பின்னால சம்பாதிச்சுக்க முடியாதா?"

அந்த பெண் உருவம் மெல்ல மண்டியிட்டது. அதை ஆண் உருவம் பெருமையாய் தன் வெற்றியாய் எண்ணி எக்காளமிட்டது. தலையை குனிந்து கொண்டு சொன்னாள்.

"ஆனாலும் நீங்க என்ன அத்தனை மோசமா பேசியிருக்க வேணாம்."

"என்ன பண்றது. சேல்ஸ் டார்கெட்டை அடையணும்னு மனுஷன் இருக்கற எரிச்சல்ல நீ வேற வந்து முரண்டு பண்ணினா வெறுப்பு வருமா வராதா? சரி ஏதோ பேசிட்டேன். இப்ப என்ன, நந்திதாவை டாக்டர்கிட்ட காண்பிச்சு டானிக் வாங்கித் தரணும். நாளைக்கு சன்டேதானே... எங்கேயாவது வெளியே போவமா?"

"சரி."

எக்ஸிபிஷனில் நந்திதா முரண்டு பிடித்தாள். ரவி அவளை முதுகில் அடிக்க வர, அவள் மஞ்சுவின் பின்னால் வந்து ஒண்டிக் கொண்டு, "போடா ஸ்கெலிட்டன் பொம்மை. மூஞ்சைப் பாரு" என்றாள்.

"பாரும்மா" என்றான் ரவி. தியாகராஜன் சிரித்தான்.

"ஒரு ஆம்பிளைப் பையனை எதிர்த்துப் பேசலாமா? மன்னிப்பு கேளு நந்து" என்றாள் மஞ்சுளா.

நந்திதா தலையசைத்து மறுத்தாள்.

"எதுக்காக? நான் என்ன தப்பு பண்ணினேன்? அவன்தான் என்னை முதல்ல ரோபோக்குட்டின்னான். ஆம்பிளைப் பையன்னா பெரிய கொம்பா? நான் மாட்டேம்பா" என்று நந்திதா சொன்னதும்,

"எங்கே இன்னொரு தரம் சொல்லு?" என்றாள் மஞ்சுளா.

66

ரமணிக்கும் கங்காவுக்கும் அவர்கள் அடைக்கப்பட்ட வேலூர் சிறையில் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

மாட்டுக் கொட்டடி போல் இருந்த அந்தச் சிறையறைக்குள் தள்ளப்பட்ட கங்காவையும் ரமணியையும் பார்த்து அங்கிருந்த நரேந்திரநாத் பானர்ஜி வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்ந்தான்.

"துக்கத்திலும் ஒரு சந்தோஷம்" என்று நரேந்திரநாத் பானர்ஜி சிரித்தான்.

'பவித்ரா செத்துப் போய் விட்டது மிஸ்டர் நரேந்திரநாத் பானர்ஜிக்குத் தெரியுமா?'

கங்கா இயந்திர இயக்கத்துடன் நரேனின் நீட்டிய கைகளைப் பிடித்துக் குலுக்கினான்.

"அப்பா வீட்டில்தானே இருக்கிறார்?"

"ஆமாம். போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்று சொல்லி விட்டோம். அப்புறம் அத்தை தவித்துப் போவாள். வயதாகி விட்டது. பலவீனமாக இருக்கிறார். மகிழ்ச்சியாகவும் இல்லை. அதனால்தான்."

"மிஸ்டர் ராஜாராமன் வீட்டில் எல்லாரும் நலமா?"

"ஓ. இருக்கிறார்கள்."

"ஐஎன்.ஏ. ஆபீசர்களுக்கு ஆதரவு காட்ட நடந்த ஊர்வலத்தில்தானே கைதானீர்கள்?"

"ஆமாம்."

"தங்கள் நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ஒரு நாட்டுக்கு எதிராய்ப் போரிடுவது தேசத் துரோகமாம். எப்படி இருக்கிறது கதை!"

"வெள்ளைக்காரனிடம் கூலி வாங்கிக் கொண்டிருக்கிறார்களே. கூலி வாங்குகிற இடத்துக்குத் துரோகம் செய்யலாமா?" என்று ரமணி சிரித்தான்.

"அப்போது எசமானத் துரோகம் என்று சொல்லு. தேசத் துரோகம் என்று ஏன் சொல்லுகிறாய்?"

"என்னய்யா காரசாரமாப் பேசிட்டிருக்கீங்க?" என்று நடுத்தர வயதைக் கடந்த ஒருவர் அவர்களுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

நரேந்திரன், "இவர் பெயர் செபாஸ்டியன். சென்னைத் துறைமுகத்தில் இருந்தார். நம் ராஜாராமய்யருக்கு வெண்டனுக்குக் கடிதம் அனுப்ப ஒத்தாசை செய்வார்" என்றான்.

"ராஜாராமன் சொல்லி இருக்கார். நீங்க எப்படி இங்கே..."

"ஏந்தம்பி! எனக்கு மட்டும் தேச பக்தி வராதா? ரொம்ப நாளுக்கு முந்தி புரியாதவனா இருந்தேன். அப்புறம் புரிஞ்சுக்கிட்டேன். சிவப்பிரகாசம், ஞானப்பிரகாசம்னு ரெண்டு அண்ணந்தம்பிங்க. சி.ஐ.டி. உத்தியோகத்துல இருந்தவங்க. ஒருத்தன் ரகசியமாக் காங்கிரஸ்காரங்களுக்கு ஒத்தாசையா இருந்தான். தம்பிக்காரன் வேற மாதிரி..."

"தெரியும், தெரியும். ராஜாராமய்யர் சொல்லி இருக்கார். அண்ணன்னு தெரியாம, மாறுவேஷத்துல இருந்த சிவப்பிரகாசத்தைத் தம்பி ஞானப் பிரகாசம் சுட்டுட்டாரு. அதைத்தானே சொல்ல வர்றீங்க?" என்றான் கங்கா.

"ஆமா. அது விசயந் தெரிஞ்சதும் எனக்கு மனசே ஒரு மாதிரியாயிடிச்சு. அந்த ஞானப் பிரகாசத்தை எனக்குக் கொஞ்சம் தெரியும். அதுக்கு முந்தியே எனக்கு அவங்கூடப் பழக்கம் ஏற்பட்டிச்சு. அவனும் அண்ணனோட பாதையில போயிருந்தா வம்பே வந்திருக்காது.



ணிக்கொடி

ஜோதிர்லதா கிரிஜா

கடையில சுட்டுக்கிட்டுச் செத்துட்டான். அன்னையிலேருந்து எனக்கு மனசு மாறிடிச்சு."

"நீங்க ஆகஸ்டுப் புரட்சியில கைதானவரா?"

"ஆமாங்க."

பக்கவாட்டில் நரேந்திரநாத் பாணர்ஜி தன்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது தெரிய, கங்கா தலையைத் திருப்பி அவனைப் பார்த்தான். நரேந்திரநாத் தன் விழிகளை அகற்றிக் கொண்டான்.

'பாவம் இந்த இளைஞன். பவித்ராவுக்காகக் காத்துக் கொண்டிருப்பதில் திருமண வயதை நிறையத் தாண்டி விட்டவன். இவனிடம் உண்மையைச் சொல்லி விடலாமா?.... கூடாது. எப்படியும் இவன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவரை திருமணம் இல்லை என்று இருப்பவன். அதைச் சொல்லுவதால் எந்த லாபமும் இல்லை. வேண்டாம். இப்போது வேண்டாம்.... போராட்டம் முடிந்து இவன் திருமணத்துக்குத் தயாராகும் போது சொல்லி விடலாம்...'

பிப்ரவரி 1946-ல் நரேந்திரநாத், கங்கா, ரமணி, செபாஸ்டியன் ஆகியோர் இன்னும் பல கைதிகளுடன் விடுதலையடைந்தனர்.

கங்காவும் ரமணியும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த போது ராமசாமி கூடத்தில் ஊஞ்சலில் இருந்தபடி நாளிதழ் படித்துக் கொண்டிருந்தார். விசாலம் நூலாம்படை அடித்துக் கொண்டிருந்தாள். இருவரையும் பார்த்ததும், கையிலிருந்த கொம்பை அப்படியே போட்டு விட்டு, அவள் ஓடி வந்தாள்.

"கொஞ்சங் கூட ஈவிரக்கமே இல்லாத பிள்ளைகள்டா நீங்க ரெண்டு பேரும்... எப்படி இளைச்சுப் போயிட்டேள்! ஜெயில்ல சாப்பாடு நன்னாவே இருக்காதாமே? உக்காருங்கோ, காப்பி கொண்டு வரேன்" என்று உள்ளே விரைந்தாள்.

"பாவம்டா உங்க அத்தை. நீங்க ரெண்டு பேரும் இப்படி அடிக்கடி போராட்டத்துல கலந்துக்கக் கூடாதுன்னு எனக்கே தோணிப் போயிடுத்து. எல்லாம் போறும். நம்ம பங்குக்கு நிறைய ஜெயில் வாசம் பார்த்தாச்சு. அடி வாங்கியாச்சு..."

"அத்தையோட காப்பி அருமை தெரியறதுக்காகவே இன்னொரு தரம் ஜெயிலுக்குப் போகலாம்" என்றான் ரமணி.

இந்தியாவுக்கு சுதந்திரம் தருவது பற்றியும் பிரிவினை, அரசியல் அமைப்பு இவை பற்றியெல்லாம் பேசி முடிவு செய்யவும் மார்ச் மாதம் இங்கு வந்த காபினெட் மிஷன், கூட்டமைப்பு ஆட்சி முறையைச் சிபாரிசு செய்தது. அயல்நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, தகவல் தொடர்பு ஆகியவை மைய அரசிடமும், மற்ற அதிகாரங்கள் யாவும் மாநில அரசுகளிடமும் இருக்க வேண்டுமென்றும், இந்துக்களின் மாகாணங்கள் எனவும், முஸ்லிம்களின் மாகாணங்கள் எனவும் அவரவர் மக்கட்தொகைக்கு ஏற்ப மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும், இந்துக்களும் முஸ்லீம்களும் சம அளவு எண்ணிக்கையில் உள்ள மாகாணங்கள் மூன்றாவது பிரிவாக இருக்குமென்றும் அது பரிந்துரைத்தது. சமஸ்தானங்கள் பற்றிய பேச்சு வார்த்தையைப் பின்னர் நடத்தலாமென்றும் அது கூறியது. முஸ்லிம்களுக்குத் தனி நாடு என்பதை அது ஆதரிக்கவில்லை. வகுப்பு வாரியாகச் சட்டசபைகளில் அவர்களுக்கு இடங்கள் ஒதுக்கலாமென்றும் அது கூறியது. சீக்கியர், முஸ்லிம் லீக், காங்கிரஸ் ஆகிய மூன்று பிரிவினரையுமே இந்த யோசனை திருப்திப்படுத்தாத போதிலும் கூடுமானவரை ஆதாயம் தேடும் எண்ணத்துடன் இரண்டு பெருங்கட்சிகளும் அதை ஏற்றன. ஆனால் சீக்



''அரசியல்வாதியையெல்லாம் கோவில் டிரஸ்டியா போட்டா இப்படித் தான்.''

''ஏன், என்னாச்சு?''

''ஸ்ரீராமநவமியன்னிக்கு, 'இன்று பிறந்த நாள் காணும் அண்ணன், ராமன் அவர்களே, நீர் பல்லாண்டு வாழ்க'ன்னு நோட்டீஸ் அடிச்சு ஊர் பூரா ஒட்டிட் டாரு.''

- டி. என். பாலகிருஷ்ணன்

இரமே கருத்து வேற்றுமைகள் முளை விட முகமது அலி ஜின்னா காபினெட் மிஷனுக் குத் தான் அளித்திருந்த ஆதரவை விலக்கிக் கொண்டார்.

இடைக்கால அரசில் காங்கிரசின் பதவி யேற்புக்கு முன்னால், அதாவது ஆகஸ்டு 6 ஆம் நாள், வைசிராய் ஜவாஹர்லால் நேரு வுக்கு அழைப்பு விடுத்ததன் பின்னர், முஸ் லிம் லீகின் பொதுக் குழுவைக் கூட்டி ஜனாப் ஜின்னா ஆகஸ்டு 16 ஆம் நாளை 'நேரடிச் செயல் நாள்' என்று அறிவித்தார். அது மட்டுமின்றி, 'பாகிஸ்தானை அடைந்தே தீருவோம்' எனும் கோஷத்தையும் அறிமுகப் படுத்தினார்.

1946, ஆகஸ்டு 16 இல், வங்காளத்தில் இந்துக்களுக்கு எதிராக விவரிக்க முடியாத, கொடுமையான கலவரங்கள் நிகழ்ந்தன. கொலைகளும் கொள்ளைகளும் கொளுத்து தல்களும் கற்பழித்தல்களும் கட்டாய மத மாற்ற அசிங்கங்களும் வங்காளத்தில் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு நடை பெற்றன. மொத்தத்தில் இந்துக்களின் வாழ்க்கை நரகமாயிற்று.

வங்காளத்தில் தலைவிரித்தாடிய மத வெறிச் செயல்கள் நவகாளியில்தான் மிக மோசமான அளவில் நிகழ்ந்தன. மக்களுக்கு ஆறுதல் கூறவும் அவர்களை நல்வழிப்படுத்த வும் காந்தியடிகள் கல்கத்தாவுக்கு முதலில் விரைந்தார். இதற்குள் முஸ்லிம்கள் குறை வாக வாழ்ந்த பீகார் மாநிலத்தில் இந்துக்கள் வங்காள வெறிச் செயல்களுக்காக அங்கு வாழ்ந்த முஸ்லிம்களைப் பழிவாங்கலாயினர். பீகாரில் நடந்து கொண்டிருந்த பழிவாங்கும் வெறிச் செயல்களைக் கண்டித்துக் காந்தியடி கள் ஓர் அறிக்கை விட்டார்.

''இந்த நாடு உருப்படாது போலேருக் குப்பா'' என்றான் கங்கா.

''கால்ல செருப்புக் கூடப் போட்டுக்காம காந்திஜி நவகாளிக்குப் போயிருக்கார். வழி யில எல்லா இந்துக்கள்கிட்டயும், முஸ்லிம் களுடைய வெறிச் செயல்களுக்குப் பயந் துண்டு ஓடக் கூடாதுன்னும், அகிம்சையைக் கடைப்பிடிக்கணும்னும் சொல்லி இருக்கார்.''

''அன்புங்கிற உணர்ச்சியை மனுஷா மேல வலுக்கட்டாயமாத் திணிக்க முடியாது. இல்லியாப்பா? அது தானா மனசில வரண னும். இந்த மனத்தத்துவம் தெரிஞ்சவரா இருக்கிறதுனாலதான், ராஜாஜி பாகிஸ்தா னைப் பிரிச்சுத் தொலைச்சுடலாம்னு அன் னிக்கே முட்டிண்டார். யாரும் கேக்கல்லே. இப்ப பாருங்கோ. ரெண்டு பேரும் அடிச் சிண்டு சாகுறா. யார் ரத்தம் சிந்தினாலும் அது கொடுமைதான். இந்துக்களோட ரத் தமா இருந்தா என்ன, இல்லே, முஸ்லிம் களோட ரத்தமா இருந்தா என்ன? மொத்தத் துல மனுஷ ரத்தம்!'' என்று அங்கலாய்ப்பு டன் முகம் சுழித்தான் ரமணி.

''பீகாரைப் பொறுத்தவரைக்கும் காந்திஜி சாகிற வரையில உண்ணாவிரதம் இருக்கப் போறதாச் சொல்லி இருக்காரே.''

''சமயம் பார்த்து அந்தக் கெழவர் வேற மண்டையைப் போட்டு வைக்கப் போறார்...'' என்றான் விசாலம்.

''அப்படியெல்லாம் உன் வாயால சொல் லாதே. அந்தே. காந்தி ரொம்ப நாள் இருக் கணும்.''

அமராவதியும் அஞ்சனாவும் ரேடி யோவுக்கு முன்னால் அமர்ந்து சேதி கேட் டுக் கொண்டிருந்தார்கள். நரேந்திரநாத் பானர்ஜி கையில் ஒரு புத்தகத்தை வைத்துப் புரட்டிக் கொண்டே இரண்டிலும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். செப்டம்பர் 2-ஆம் நாள் இடைக்கால சர்க்கார் நேருவின் தலைமையில் அமையப் போவதாய் ரேடி யோச் செய்தி அறிவித்தது.

அப்போது வாசற்கதவு படபடவென்று தட்டப்பட்டது. அஞ்சனா எழுந்து சென் றாள். கதவுக்கு வெளியே தங்கம் நின்று கொண்டிருந்தாள்.

''அமராவதி! தங்கம் வந்திருக்காடி'' என்று அஞ்சனா பெருங்குரலில் வியப்புடன் கூவி னாள். அமராவதிக்கு முன்னால் நரேந்திர நாத் பானர்ஜி அவசரமாக எழுந்து சென் றான். அவளைத் தள்ளாத குறையாக முந்திக் கொண்டு சென்றான்.

67

நரேந்திரநாத் பானர்ஜி எதற்காக அவசரமாக எழுந்து போனானோ அது நடப்பதற்கு முன்னதாகவே, கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து விட்ட தங்கம் அப்படியே வழிநடையில் உட்கார்ந்து கொண்டு பெருங்குரலில் அழலானாள். 'பவித்ராவைப் பற்றி எதுவும் பேச வேண்டாம். வேறு ஏதாவது பொய்யைச் சொல்லி வை' என்று எச்சரிப்பதற்கு இயலாது போயிற்று.

அமராவதி ஓடி வந்தாள். தங்கம் என்ன சொல்லப் போகிறாளென்பது எல்லாருக்குமே விளங்கி விட்டது. ஒரு வகையில் எதிர்பார்த்தார்கள்தானெனினும், முகங்கள் இருண்டு விட்டன. கண்களில் நீர் சோர்ந்தது.

"பவித்ராவுக்கு என்ன ஆச்சு தங்கம்? எதுக்கு அழறே?" என்று ஒருவேளை இன்னும் சிறையில் இருக்கிறாளோ என்ற அசட்டு ஆசையுடன் - ஆனால் அதில் தனக்கே நம்பிக்கை இல்லாத குரலில் வினவிய அமராவதியின் கண்கள் நொடிக்குள் பொங்கி விட்டன.

"நான் என்னத்தைச் சொல்லுவேன், எப்பிடிச் சொல்லுவேன், அம்மா! பிரசவ அறையில எங்கையில ஏந்தின பொண்ணு. அதும் மேல நான் உசிரையே வெச்சிருந்தேன். அது இன்னைக்கி உசிரோட இல்லேம்மா, உசிரோட இல்லே. குண்டடி பட்டுச் செத்துடிச்சு... எம்புட்டு ஆசையா எனக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் குடுத்திச்சு? அது சொல்லிக் குடுத்த தமிழ்ல அதோட சாவைப் பத்தி எழுதும்படி ஆயிடிச்சு...."

பின்தொடர்ந்து வந்து அருகே நின்றிருந்த நரேந்திரனுக்கும் கண்கள் சிவந்தன.

"யாருக்கு எழுதினே, தங்கம்? ஒரு லெட்டரும் வரல்லியே?" என்றாள் அஞ்சனா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

"நரேனய்யாவுக்குத்தான் லெட்டர் எழுதி ஒரு ஆள்கிட்ட குடுத்தனுப்பிச்சேன்... இவரு டம்டம் ஜெயில்ல இருந்தாரு. நான் ப்ரெசிடென்சி ஜெயில்ல இருந்தேன்..." என்று தொடங்கி நடந்ததைத் தங்கம் சொன்னாள்.

நரேந்திரநாத் பானர்ஜி நிற்க முடியாமல் பொத்தென்று சோபாவில் சாய்ந்தான்.

"உன் லெட்டர் கிடைச்சுது. பதில் கூட அனுப்பினேனே? நாந்தான் இங்க யார்கிட்டயும் அதைப் பத்திச் சொல்லலே."

அமராவதி ஒரு நம்ப முடியாமையுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எவ்வளவு பெரிய விஷயத்தை எங்கிட்டேருந்து மறைச்சிருக்கே, நரேன்?"

"பவித்ரா வந்துடுவான்னு உனக்கு இருந்த அரைகுறை நம்பிக்கையைச் சிதைக்கிறதுல எனக்கு இஷ்டமில்லே, அமராவதி. என்னை மன்னிச்சுடு. என்னைப் புரிஞ்சுக்க, அமராவதி."

"புரியறது. ஆனா... என்னோட துக்கத்தைக் குறைக்கிறதுக்காக இத்தனை நாளும் நெஞ்சுல இவ்வளவு பெரிய சோகத்தைச் சுமந்துண்டு இருந்திருக்கேளே, நரேன்? உங்களால எப்படி முடிஞ்சுது? என்னைப் பார்க்கிற ஒவ்வொரு நிமிஷத்துலயும் 'இவகிட்ட சொல்லிடணும்'னு உங்களுக்கு மனசு அடிச்சுக்கல்லையா, நரேன்?" என்ற அமராவதி முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டு அழலானாள்.

அஞ்சனா அவள் தோளை அணைத்துக் கொண்டாள்.

"அப்பா எங்கேம்மா?" என்று தங்கம் கேட்டதும் இரண்டு பெண்களும் அழத் தொடங்கினார்கள்.

"அய்யா போயிட்டாருடி, தங்கம். இந்தக் கண்ராவியையெல்லாம் காது குடுத்துக் கேக்காம போய்ச் சேந்துட்டாரு. அதிருஷ்டக்காரர்டி தங்கம் உங்க எசமான்..." என்று விம்மினாள் அஞ்சனா.

"கங்காவுக்குத் தெரியுமா, நரேன்?"

"தெரியாது, அமராவதி."


மூடாமல் விட்டிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு அப்போது கங்கா உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு பெரிய உறை இருந்தது.

அழுது கொண்டிருந்த அனைவரையும் பார்த்ததும் ஏதோ விபரீதம் என்பதைப் புரிந்து கொண்ட கங்கா, எல்லாரையும் விட அதிகமாய்க் கண்ணீர் உகுத்துக் கொண்

"கேடி கண்ணப்பனை இன்ஸ்பெக்டர் ஏன் அடிக்கிறாரு?"

"அவன் ரஜினி ஸ்டைல்ல, 'நான் ஒரு தரம் மாமூல் தந்தா நூறு தடவை தந்த மாதிரி'ன்னு சொல்றானாம்!"

- ஏ. பாலசுப்பிரமணியன்





பம்பாயைச் சேர்ந்த கௌஷல் ஒரு டாக்ஸி டிரைவர். சமீபத்தில் இவர் டாக்ஸியில் இரண்டு பேர் ஏறினார்கள். டாக்ஸியை கௌஷல் வழக்கம் போல் வாயில் வந்த ஏதோ ஒரு பாட்டை மெல்ல முணு முணுத்தபடி ஓட்டினார். பாட்டைக் கேட்டு ரசித்த பயணிகளுக்கு மிகவும் மகிழ்ச்சி. அந்த இரண்டு பேரும் பிரபல மியூஸிக் கம்பெனி யான மேக்னா ஸவுண்ட்டைச் சேர்ந்த அதிகாரிகள். கௌஷலிடம் பேசி அவரை அப்படியே தங்களுடன் கூட்டிப் போய் அவர் பாடிய பாடல்கள் அடங்கிய 'டோனி டாக்ஸிவாலா' (டாக்ஸிகார புயல்) என்ற காஸெட்டை பதிவுசெய்து வெளியிட்டார்கள். காஸெட், மார்க் கெட்டில் புயலைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது!

ஆதாரம் : த வீக்
தகவல் : ஆலன்

டிருந்த தங்கத்தைக் கவனித்ததும் இன்ன விப ரீதம் என்பதை முழுவதுமாய்ப் புரிந்து கொண்டு விட்டான்.

"எது கங்காவுக்குத் தெரியுமான்னு கேட் டுண்டிருந்தேள்? ...பவித்ரா செத்துப் போயிட் டதுதானே?" என்று அவன் சிவந்த விழிகளு டன் பளிச்சென்று வினவ, அவனது கேள்வி அங்கிருந்த எல்லாரையுமே தூக்கிப் போட்டு விட்டது.

"அப்படின்னா... உனக்கு ஏற்கெனவே தெரியுமா, கங்கா?" என்று அமராவதி நரேந் திரநாத் பானர்ஜியைப் பார்த்தாள்.

"நான் சொல்லவே இல்லே, அமராவதி.... உங்களுக்கு எப்பிடித் தெரிஞ்சிச்சு, கங்கா?"

கங்கா உட்கார்ந்து கொண்டான். பிறகு எல்லாவற்றையும் தெரிவித்தான். ராஜா ராமன் தங்களுக்குத் தெரிவிக்காமல் மனத் துள்ளேயே அந்தத் துயரத்தைப் புதைத்துக் கொண்டு தன்னந்தனியாக நாளெல்லாம் உருகி வந்திருப்பதை நினைத்துப் பார்த்ததில் கிளம்பிய புதிய சோகம் பவித்ராவின் மறை வால் விளைந்து விட்ட சோகத்தைத் தூக்கி யடிப்பதாக இருந்தது.

கங்காதான் அருகில் வைத்திருந்த சதுர மான உறையைப் பிரித்து, பெரிதுபடுத்தப் பட்டிருந்த பவித்ராவின் புகைப்படத்தை வெளியே இழுத்தான். கண்ணாடிச் சட்டத் துக்குள் சிரித்துக் கொண்டிருந்த அவளை நோக்கித் தன்னையும் அறியாமல் பதிலுக்குப் புன்னகை செய்த பின் கங்கா அதை அமரா வதியிடம் கொடுத்தான். நரேந்திரநாத் ஆவ லுடன் எழுந்து வந்து அவளுக்குப் பின்னால் குனிந்து மகளின் படத்தை ஆர்வத்துடன் பார்த்தான்.

கண்களைத் துடைத்துக் கொண்டு அம ராவதி மெல்ல எழுந்தாள். சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ராஜாராமன், அருணின் படங்களுக்கு அருகே இருந்த ஆணியில் அந் தப் படத்தையும் மாட்டினாள்.

அந்தக் கணத்தில் அங்கு சூழ்ந்து கொண்ட மவுனத்தில் எல்லார் இதயங்களும் கனத்தன.

நேருவின் தலைமையில் அமைய இருந்த புதிய அரசாங்கத்தை ஜின்னா வர வேற்காததோடு, அது பதவி ஏற்க இருந்த செப்டம்பர் 2-ஆம் நாளைக் கரிநாளாகக் கொண்டாட வேண்டும் என்றும் அவர் அறிக்கை விட்டார். இதனால் மீண்டும் வகுப் புக் கலவரங்கள் தோன்றும் சூழ்நிலை உருவா யிற்று.

காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே உடன்பாட்டை ஏற்படுத்த இயலாதெனில் அது இந்தியாவை மேலும் மோசமான நிலைக்கு இழுத்துச் செல்லும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் பிரதமர் அட்லி தமது கவலையை வெளிப்படுத்தியதோடு 1948 ஜூனுக்குள் இந்தியாவிடம் சுயாட்சி அதிகா ரத்தை ஒப்படைத்து விடத் தீர்மானித்து விட் டதாகவும் அறிவித்தார்.

வைசிராய் வேவல் திருப்பியழைத்துக் கொள்ளப்படுவதாகவும் அவரிடத்தில் மவுண்ட் பேட்டன் 1947 இல் பதவி ஏற்பார் என்றும் அட்லி அறிவித்தார்.

(தொடரும்)

"மது சூதாட்டம் இரண்டிலும் பெரும் கேடு உள்ளது. அவற்றால் மக்களுக்கு சில பலன்கள் இருந்தாலும் அத னால் ஏற்படும் பாவமே அதிகம்" (குர்ஆன் 2 : 219)

எனவே "ரம்ஜான் சிறப்புக் குலுக்கல், மொத்தப் பரிசு ரூ. 1.15 கோடி" என்னும் விளம்பரத்தை – பரி சுச் சீட்டுத் திட்டத்தை, இஸ்லாம் மதம் கண்டிக்கிறது.

ஆதாரம் : சமரசம் (31.3.95)
தகவல் : வி. என். ராஜகோபால்



லக்கிமேன்

எமனிடமிருந்து தாயை மீட்கிற கார்த்திக்கை லக்கிமேன் என்று கிளைமேக்ஸில் குறிப்பிடுகிறார்கள்.

ஆகவே, தாய்-மகன் பாசப் பிணைப்பு பற்றிய உருக்கமான திரைக்காவியம் என்று கருதுவீர்களானால், இல்லை.

எமன், சித்திரகுப்தன், பிரும்ம தேவன் உள்ளிட்ட பித்தளை நகை சுமந்த வேற்றுலக வாசிகள், சாமானியருடன் கலந்து நடிப்பதால் புராணப்படமா என்று கேட்பீர்களானால் அதுவும் தவறு.

கவுண்டமணி எமனாகவும் செந்தில் சி. குப்தனாகவும் வருவதால் குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கிற படமாயிருக்குமெனில் அது கூட வேறு.

இன்ன வகை என்று இனம் பிரிக்க முடியாத, கொளுத்தும் வெயிலுக்குப் போட்டியாக மண்டை காய வைக்கிறார்கள். போதாக் குறைக்கு fantasy படம் என்று கார்டு வேறு.

எமலோகத்தில் சித்திரகுப்தன் தவறவிடுகிற, பிறப்பு - இறப்பு கணக்குகள் அடங்கின பிரம்மச்சுவடி என்கிற ஜிகினா புத்தகம், பூலோகத்தில் மக்கு ஹீரோ வீட்டில் விழுகிறது.

அதை வைத்துக் கொண்டு லாட்டரியிலும் ரேஸிலும் ஜாக்பாட் அடித்து மில்லியனர் ஆகிறார் கார்த்திக்.

பிறப்பு - இறப்புச் சுவடியில் கிண்டி ரேஸ் டிப்ஸ் எப்படிக் கிடைக்கிறது என்று கேட்கலாகாது.

இன்னும் பல கேட்கக் கூடாத விஷயங்கள் ஏகத்துக்கு உள்ளன.

திறந்த ஜீப்பில், தோழியருடன் உல்லாசமாக வருகிற ஹீரோயின் கையில் சைக்கிள் செயின்.

அவர் எங்கிருந்து வந்தார், யார், பெற்றோர் உண்டா, ஆதி, அந்தம் அற்றவரா, அரைபிளேடு வில்லனுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம் - கேட்கக் கூடாது.

எமன் விடுகிற மரண அம்புகளை, உள்ளூர் வில்லன் ஆடிப்பாடி செயலிழக்கச் செய்து விடுகிறார், கிளைமேக்ஸில். எப்படி? கேட்கக் கூடாது.

கேட்டால் fantasy என்பார்கள்.

பிரும்மச்சுவடியைத் தேடி வரும் எமன், முதற்கண் ஐஸ்கிரீமிடமும் பின்னர் சில்க் ஸ்மிதாவிடமும் டோட்டல் சரணாகதி அடைந்து, தேடல் வேட்டையை டீலில் விட்டு விடுகிறார். உக்கிரமான வக்கிரக் கற்பனை.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, பல அபத்தக் காட்சிகளைத் தொடுத்துப் படமாகத் தந்திருப்பவர் பெயர் பிரதாப் போத்தன் என்கிறார்கள்.

இதே பெயரில் ஒரு நல்ல இயக்குநர் இங்கே இருப்பதாகவும் ஞாபகம்.

புது வருஷத்தில் இந்தப் படம் பார்க்கப் போகிறவர்கள் நிச்சயம் அன்லக்கிமேன்.

— ஆர்.பி.ஆர்.



பணம் பண்ணப் வாங்க!

பூ வைக்கும் இடத்தில் பொன்

கொஞ்ச நாட்களுக்கு முன் சிகாமணி ரொம்பக் கோபமாய் போன் செய்தார் :

''ஐம்பத்து இரண்டு கிலோ தங்கம் வீட்ல இருக்கிறது போதாதுன்னு (அவர் மனைவி பெயர் தங்கம்!) உன் பேச்சை நம்பி நேத்து இன்னும் நாலு கிராம் வாங்கினேன். கிராம் 443 ரூபாய். இன்னிக்கு விலை என்ன தெரியுமா? 438 ரூபாய்தான். விலை இன்னும் குறையும்னு வேற சொல்றாங்க....'' என்றார்.

''கொஞ்சம் பொறுங்க சிகாமணி.... இன்னும் பத்து நாளைக்குப் பேப்பர்ல பவுன் விலைய கவனிச்சுக்கிட்டே வாங்க'' என்று சமாதானப்படுத்தி போனை வைத்து விட்டேன்.

பன்னிரண்டாம் நாள் நேரிலேயே வந்து விட்டார் சிகாமணி. ''சாரி பாஸ்! கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணம் - அந்த கவலையிலதான் அன்னிக்கு போன்ல அவசரப்பட்டுக் கோபிச்சுக்கிட்டேன். இப்ப கிராம் 450 ரூபாய் ஆயிடுச்சு'' என்றார்.

''நீங்க சந்தோஷப்படறதைப் பார்த்தா 443 ரூபாய் பவுனை வித்துட்டு 450 ரூபாய் பவுனை வாங்கிடுவீங்க போலிருக்கே...!''

''இந்தக் கிண்டல்தானே வேணாங்கறது. என்னை டென்ஷனாக்குறதுக் குன்னே பவுன் விலை இப்படி ஒரு வாரம் போல இறங்கிட்டு இப்ப பழைய படிக்கு ஏறிடுச்சு...'' என்றார்.

''பவுன் விலை இறங்குறது உங்களை டென்ஷனாக்கவோ நகைக் கடைக் காரங்களைச் சந்தோஷப்படுத்தறதுக்கோ இல்லை...'' என்று சவரன் சாம்ராஜ்யத் துக்கே உரிய சில நெளிவு சுளிவுகளை விளக்கினேன் :

''சமீப காலம் வரைக்கும் வெளிநாட்டுலயிருந்து இந்தியாவுக்குத் தங்கம் கொண்டு வரக் கூடாதுன்னு கட்டுப்பாடு இருந்தது. இப்ப கட்டுப்பாட்டை அரசாங்கம் நீக்கியிருக்கு. வெளிநாட்டில் வசிக்கிற இந்தியர்கள் இங்க வரும் போது கணிசமா தங்கம் எடுத்து வர அனுமதி இருக்கு. இப்படி என்.ஆர்.ஐக்கள் மூலமா இந்தியாவுக்குள்ள வர தங்கத்தோட அளவு அதிகரிக்கும் போது நமது மார்க்கெட்டில் பவுன் விலை தற்காலிகமா கொஞ்சம் குறையுது. மத்திய பட்ஜெட்டை ஒட்டி விலை இலேசா குறைஞ்சது இந்தக் காரணத்தாலதான். ஆனா பட்ஜெட்டுக்கும் விலை குறைவுக்கும் சம்பந்தமிருக்கிறதாக நினைச்சு பவுன் விலை மேலும் குறையும்னு ஒரு சலசலப்பு ஏற்பட்டுப் போச்சு.

''நம்ம நாட்டுல தங்கத்துக்கு டிமாண்ட் அதிகமாயிட்டேயிருக்குன்றதுக்கு நகைக் கடைகள்ல இருக்கிற கூட்டம் மட்டுமே போதுமான அளவு சாட்சி. கடைகளின் எண்ணிக்கையும் அதிகரிச்சுக்கிட்டிருக்கு. 'பூ வைக்கிற இடத்துல பொன் வைச்சேன்'னு புதுமொழியே வர்ற அளவுக்குத் 'தங்கம்' ஒரு கௌரவச் சின்னமா இன்னமும் இருக்கு. இவ்வளவு காரணங்கள் இருக்க, தங்கம் விலை குறையும்னு எதிர்பார்க்கிறது வீரப்பனை பிடிச்சுடுவாங்கன்னு நினைக்கிற மாதிரி....''

''அப்போ ஒரு கிராம் தங்கம் ஐநூறு ரூபாய் கூட விற்கும்ங்கறியா...?''

''இன்னும் ஒரு வருஷத்துல அந்த அளவுக்கு விலை ஏறினா ஆச்சரியப் படுறதுக்கேயில்லை. அதுனால முடிஞ்ச அளவு வாங்கி வைச்சுக்கலாம். ஆனால்,

வி. கோபாலன்



நகையா வாங்கினா, அதை விற்கும் போது சேதாரமாகக்கூடிய தொகையை கழிச்சுட்டுதான் விலை போடுவாங்க. அதனால கூடிய வரையில அதிக நகாக வேலையில்லாத நகையா வாங்க லாம்; இல்லை காசுகளாகவே வாங்கி வைச்சுக்க லாம்.''

''நான் அப்படித்தான் பாஸ் வாங்கி வைச் சிருக்கேன்'' என்று முகம் பொன் போல ஒளி ரச் சொன்னவர், மேலும் ஒரு சந்தேகத்தை எழுப் பினார்.

''எங்க ஆபீஸ்ல அகவுண்டன்ட் கனகராஜ் இருக்காரே, அவர் ஒரு ஐடியா பண்ணியிருக் காரு. மாசா மாசம் ஆளுக்கு நூறு ரூபாய் போட றது. அந்த அமவுண்டுக்கு யாராவது ஒருத்தர் ஷேர் வாங்கறது. அப்புறம் அது நல்ல விலைக்கு வரும்போது வித்துடறது. லாபத்தைச் சமமா பங்கு போட்டுக்கிறது...''

''நீங்களும் அந்த குரூப்ல சேர்ந்திருக்கீங் களா?''

''அவ்வளவு கலபத்துல நான் சேர்ந்துடு வனா? நாலு மாசமாவது பார்ப்பேன். இந்தப் பசங்க ஒழுங்கா நடத்தறாங்களா; இல்லை நம் மள டீல்ல வுட்ருவாங்களான்னு பார்த்துக்கிட் டுத்தான் நான் பர்ஸைத் திறப்பேன்.''

இவ்வளவு நாட்களாகச் சிகாமணியுடன் பழ கியபின் இந்த பதிலை நான் எதிர்பார்த்திருக்க வேண்டும்!

சிகாமணியின் ஆபீசில் நடக்க ஆரம்பித் திருக்கும் கூட்டு - ஷேர் வியாபார முயற்சியின் 'புளோ-அப்'தான் மியூசுவல் ஃபண்டுகள். நமது பணத்தைப் பொறுப்பான ஒரு நபரிடம் கொடுத்து நமக்காக ஷேர்களில் முதலீடு செய்யச் சொல்லும் முறை. 'பொறுப்பான ஒரு நபர்' ஸ்தானத்தில் இருப்ப வைதான் அரசாங்கத்தின் அனும தியுடன் செயல்பட்டுக் கொண்டி ருக்கும் மியூசுவல் ஃபண்டுகள்.

மூன்று நான்கு வருடங்க ளுக்கு முன்பு வரை 'யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா' என்ற நிறுவனம் மட்டுமே இந்தப் பணி யைச் செய்தது. பொருளாதாரக் கொள்கையைத் தாராளமயமாக் கிய பிறகு, மியூசுவல் ஃபண்டு களை ஆரம்பிக்க தனியாரையும் அனுமதித்து, ஊக்குவித்து வரு கிறது அரசாங்கம்.

மியூச்சுவல் ஃபண்டுகளில் நம்மைப் போன்ற தனி நபர்கள் முதலீடு செய்யும் பணத்துக்கு ஈடாக யூனிட் பத்திரங்கள் தரப்படும். இந்தப் பத்திரங்களையும் ஷேர்கள் போல் மார்க்கெட் டில் விற்கலாம், வாங்கலாம். மியூசுவல் ஃபண்டு களில் நாம் முதலீடு செய்யும் பணம் பல நிறு வனங்களின் ஷேர்களை வாங்குவதற்குப் பயன் படுத்தப்பட்டு, ஒட்டுமொத்த லாபத்தின் பங்கு நமது முதலீட்டுத் தொகைக்கு ஏற்ப பிரித்துத் தரப்படுகிறது.

எஸ்.பி.ஐ. மியூசுவல் ஃபண்ட், இன்ட் பாங்க், கோதாரி பயனீர் போன்ற குறிப்பிடத் தக்க மியூசுவல் ஃபண்டுகள் இருந்தாலும் மார் கன் ஸ்டான்லி மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ. மியூசுவல் ஃபண்டுகளுக்குச் செய்யப்பட்ட விளம்பரத்தைக் கண்டு மக்கள் பிரமித்து கியூவில் நின்று முதலீடு செய்தார்கள்.

ஆனால் இந்த மியூசுவல் ஃபண்டுகளின் யூனிட் பத்திரங்கள் இன்று மிகக் குறைந்த மதிப் புக்குத்தான் மார்க்கெட்டில் விலை போகின்றன. பத்து ரூபாய்க்கு வாங்கிய பத்திரம் எட்டு அல் லது ஏழரை ரூபாய்க்குத் தான் விற்கிறது. இதற் குக் காரணம், இந்த மியூசுவல் ஃபண்டு நிறு வனங்கள் வாங்கிய ஷேர்களின் மார்க்கெட் விலை சரிந்து போயிருப்பதுதான்.

இருப்பினும் இத்தகைய மியூசுவல் ஃபண்டு களில் நாம் யூனிட் பத்திரங்கள் வாங்குவது பாது காப்பானதே. காரணம் என்ன...? இந்த விக்கிர மாதித்த கேள்விக்குப் பதிலை அடுத்த வாரம் வரை யோசிக்கலாமே...

(பணம் பெருகும்)

கலகல கோவை



● பேராசிரியர் திருமலையின் மகன் சிங்கப்பூரில் படித்துக் கொண்டிருந்தான். பெற்றோரைப் பார்க்க இந்தியா (சென்னை) வந்தவனை, அவன் சிங்கப்பூர் திரும்பும் தினத்தில் விமானம் ஏற்றிவிட்டார்கள். விமான நிலையத்திலிருந்து திருமலையும் அவர் மனைவியும் வீடு வருகையில் ஒரே 'டிராஃபிக் ஜாம்'. தமிழக முதல்வர் ஒரு சிலை திறப்பு விழாவுக்காக அதே பகுதிக்கு வந்திருந்ததுதான் காரணம். கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் போக்குவரத்து நெரிசலில் திண்டாடிவிட்டு அவர்கள் வீடு வந்தபோது டெலிபோன் மணி அடித்தது. எடுத்துப் பேசினார் திருமலை. ''அப்பா, நான் நலமா சிங்கப்பூர் வந்து சேர்ந்துட்டேன்'' என்று மறுமுனையில் பேசினான் மகன்! திருமலைக்கு மயக்கம் வராத குறைதான்!

(—இது முற்றிலும் கற்பனை!)

அவிநாசி, பூ. மாதேஸ்வரன் □

● முட்டுக்கல்லூர் – மேட்டுப்பாளையம் அருகே உள்ள கிராமம். இங்குள்ள சுமார் நூற்றைம்பது வீடுகளில் தலா (குறைந்த பட்சம்) ஒரு பட்டதாரி உண்டு.

மேட்டுப்பாளையம், பி.ஏ.வதூத்.

● கோவை வானொலியின் திரை இசை நிகழ்ச்சியில், ஒவ்வொரு நாள் காலையும் ஒலி பரப்பும் முதல் பாடல் எந்த ராகத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று அறிவித்துவிட்டு ஒலிபரப்புகிறார்கள்.

காட்டூர், ஆர்.முத்துசாமி.

● தமிழ்நாட்டில் மிக அதிக எண்ணிக்கையில் பொறியியல் கல்லூரிகள் அமைந்துள்ள ஊர் கோவை.

● '89ஆம் ஆண்டு தமிழகத் தேர்தல்கள் நடந்து கொண்டிருந்தன. அப்போது தேர்தல் அதிகாரியாக ஒரு நடுத்தர நகரின் வாக்குச் சாவடியில் பணியில் இருந்தேன். கைக்குழந்தையுடன் கியூவில் நின்ற பெண்கள் முதலில் வோட்டுப் போட்டுவிட்டுப் போவதற்கு வசதி செய்து கொடுத்தேன். வெயில் ஏற ஏற, வாக்குப் பதிவு சூடு பிடித்தது. பெண்கள் கூட்டமும் அதிகரித்தது. அதிலும் கைக்குழந்தைக்காரிகள் நிறையபேர் வந்த வண்ணம் இருந்தனர். சந்தேகம் ஏற்பட்டு விசாரிக்கப் போக, எல்லா பெண்களும் ஒரே குழந்தையைத்தான் தூக்கிக் கொண்டு வந்தார்கள் என்பது வெளிச்சத்துக்கு வந்தது!

கோவை, கலை.அரசு.




''எப்பங்க எனக்கு டீ.வி., ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், வெட் கிரைண்டரெல்லாம் வாங்கித் தருவீங்க...?''

''இப்படி பெரிய பெரிய சாமானா கேக்கிறயே! சின்ன பொருளா கேட்டா வாங்கித் தரேன்.''

''அப்படின்னா கம்மல், மூக்குத்தி, காப்பு, புல்லாக்கு... இதெல்லாம் வாங்கிடலாமா?''

கோவை-8, கே. துரைமுருகன்.



(இந்த வாரத்துடன் 'கலகல கோவை' பகுதி முடிகிறது. சிறப்புப் பரிசு ரூ.100/-ஐத் தமது 'முதல்வர் ஜோக்'கிற்காகப் பெறுபவர் அவிநாசி, பூ. மாதேஸ்வரன்.)

வித்யாச சங்கர்!

என்.ஸி.ஸி. என்றால், கஞ்சி போட்ட காக்கி சீருடை அணிந்து 'லெஃப்ட் ரைட்'., குடியரசு தினத்தன்று வியர்க்க வியர்க்க பரேட், கூடா ரம் அடித்து கொசுக்கடிக்கு மத்தியில் 'காம்ப்'- இப்படித்தான் நாம் நினைப்போம். சோதனைகள் இதோடு நின்று விடுவதில்லை...

"நீங்கள் ஆஸ்திரேலியா போகிறீர்கள்; அங்கே ஒரு பெண்ணுக்கும் (ஆஸ்திரேலிய பெண்தான்!) உங்களுக்கும் காதல் ஏற்படுகிறது. அவளால் இந்தியா வர முடியாது என்ற நிலை. நீங்கள் என்ன செய்வீர்கள்...?" இப் படியொரு கேள்வி கேட்டிருக்கிறார்கள் வித்யாசங்கரிடம்.

'ஆஸ்திரேலியாவில் செட்டிலாகிவிடுவேன்.', 'அவளை இந்தியாவுக்குக் கடத்திக் கொண்டு வந்து கல்யாணம் செய்து கொள்வேன்'; 'அவள் மனம் மாறும் வரை காத்திருப்பேன்...'- இப்படியெல்லாம் இருபது வயதுக்குரிய இளமை பதிலெதுவும் சொல்லவில்லை வித்யாசங்கர்.

"அவளுக்கு அவள் நாடு முக்கியம்; எனக்கு என் நாடு முக்கியம்- அதனால் அவளை மறந்து இந்தியா திரும்பி விடுவேன்!" என்று சொல்லி யிருக்கிறார்.

இந்த 'வித்யாச' சங்கருக்குத் தங்க மெடல் கிடைத்ததில் அதிசய மில்லை. ஆனால், அவரைப் பார்த்தால் நம்புவதற்கே கஷ்டமாயிருக்கிறது. மிடுக்கைத் தேடினாலும் கிடைக்காத சராசரி பஸ் ஸ்டாண்ட் முகம். எப்போதாவது கூச்சத்துடன் கொஞ்சம் புன்னகை. சிவப்பு இறகுகளு டனான அந்தத் தொப்பியைத் தலையில் வைக்கும்போதுதான் 'மாஜிக்' செய்த மாதிரியொரு கம்பீரம் வந்து உட்கார்ந்து கொள்கிறது.

இந்தியாவின் அனைத்துக் கல்லூரிகளிலுமுள்ள என்.ஸி.ஸி. காடெட் டுகளுள் தலை சிறந்தவராக வித்யாசங்கரைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அந்தத் தேர்வுக்கான ஒரு சோதனையாகத்தான் ஆஸ்திரேலியக் காதலி பற்றிய கேள்வி.

என்.ஸி.ஸி.யில் உடற்பயிற்சியுடன் மனதிடத்துக்கும் பயிற்சியும் சோதனையும் உண்டு. திரும்பத் திரும்ப ஒரே கேள்வியால் துளைத்தெடுத்துப் பொறுமையை சோதிப் பார்களாம். மனசுக்குள் பற்களை நறநறத்தால் கூட கண்டுபிடித்துவிடக் கூடிய மனோதத்துவ நிபுணர் களின் முன் நின்று முகம் கோணாமல் பதில் சொல்ல வேண்டும்.

தவிர, பதின்மூன்று கிலோ பளு மூட்டையை முதுகில் ஏற்றி, பத்து தடைகளை (hurdles) 90 வினாடிகளில் கடக்கச் சொல்வார்கள்; ட்ரில், பரேட் - இவற்றின்போது ராணுவ ஒழுக்கம் காக்க வேண்டும். அப்புறம் பத்து கேடட் டுகளை 'மேய்க்க'ச் சொல்லி தலைமைத் தகுதியைச் சோதிக்கிறார்கள். ஒரு குழுவினரை கோணல் மாணல் உடைகளுடன் கொண்டு நிறுத்தி ஒரு நிமிடத்தில் எவ்வளவு தவறுகள் கண் ணில் படுகின்றன என fault finding test!

எல்லா சோதனைகளிலும் வெளுத்து வாங் கிய வித்யா, "தமிழ்நாடு காடெட்டுகள்தான் இந்த வருடம் மெடல்களை அள்ளிக் கொண்டு வந் திருக்கிறோம். நான்கு தங்கம்; இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் நமது மாநிலத்துக்குக் கிடைத்துள் ளன..." என்கிறார்.

"இந்த சாதனைக்குக் காரணம் சிறந்த காடெட்டுகளுக்கான சிறப்புப் பயிற்சியளித்த லெஃப்டினன்ட் கர்னல் ராஜ்குமார். அவர்தான் எவ் ஹீரோ!" என்கிறார் வித்யாசங்கர்.

-எஸ்ஸார்

அட்டை வண்ணப்படம் :
கேமரா திருஞானம்.



39 நி·னை·வ·லை·க·ள்·

IT IS NOT THE EMPLOYER WHO PAYS WAGES; HE ONLY HANDLES THE MONEY; IT IS THE PRODUCT THAT PAYS WAGES.

திரைப்பட ரசிகர்கள் நமது வாடிக்கையாளர்களாக இருந்து நமக்கு ஆதரவு காட்டுகிறார்கள் என்பது உண்மைதான்; ஆனாலும் நமது படைப்புகள்தான் நமக்கு ஊதியம் கொடுக்கின்றன.

சில நல்ல காவியப் படைப்புக்கள் ரசிகர்களிடமிருந்து மிகச் சாதாரணமான அல்லது நேர் எதிரிடையான வரவேற்பைப் பெறும் போது உண்மையில் நமது எஜமான் யார் என்கிற கேள்வியைக் கேட்டுக் கொள்ளத் தோன்றுகிறது. ஒரு படைப்பு, வியாபாரத் தோல்வியைத் தழுவினாலும், அதே படைப்பு படைப்பாளிக்கு ஆத்மார்த்தமான மனநிறைவையும் ஒரு sense of achievementஐயும் கொடுக்கும்போது அந்தப் படைப்புத்தான் நமது முதலாளி என்று தோன்றுகிறது.

இப்படி என்னை நினைக்க வைத்த படம்தான் 'அக்னிசாட்சி'.

இந்தத் திரைப்படம் வெளியான போது அந்தப் படத்தின் நாயகியாக வருகின்ற 'கண்ணம்மா' என்கிற கதாபாத்திரம் ஏராளமான வாதப்பிரதிவாதங்களுக்கு இலக்காகி பெருவாரியான கருத்து வேற்றுமைகளுக்கு வழி வகுத்தது எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

Such a complex character is bound to create ripples.

அதுதான் எனது நோக்கமும் கூட.

கண்ணம்மாவின் கதாபாத்திரத்தை சற்று critical ஆக analyse செய்து பார்க்கலாமென்று எண்ணுகிறேன்.

புதுக்கவிதைகள் புனைகின்ற ஒரு பாத்திரமாக, பாரதியார் மீது அபார பக்தி கொண்ட புதுமைப் பெண்ணாக 'கண்ணம்மா'வை திரைப்படத்தின் முன்பகுதியில் சிருஷ்டித்து விட்டு பின்பகுதிகளில் அவளை ஒரு 'மனநோயாளி'யாகச் செய்து, அந்தக் கதாபாத்திரத்தின் போக்கையே மாற்றி விட்டேன் என்று என் மீது ஒரு பொதுவான குற்றச்சாட்டு. ஒரு சின்ன clipping.

தன் கணவனுடன் கண்ணம்மா ஒரு restaurant செல்கிறாள். அங்கே அடுத்த மேஜையிலிருக்கும் ஒரு ஆண் இவளை வக்கிரக் கண்களோடு பார்க்கிறான். தற்செயலாக அதைப் பார்க்கிற கண்ணம்மாவிற்குக் கோபம் வருகிறது. தன் கணவனிடம் அவனைப் பற்றி ரகசியமாகச் சொல்கிறாள். வீண் வம்பை வளர்க்க விரும்பாத கணவன் (சிவகுமார்) அவளைப் பொறுமையுடன் இருக்கச் சொல்லி அவன் இருக்கும் திசையையே பார்க்க வேண்டாம் என்று சொல்லி சமாதானப்படுத்துகிறான். அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அந்தப் பக்கம் பார்க்காமல் இருக்க எத்தனையோ முயற்சி செய்தும் அவன் மீதுள்ள ஆத்திரம் மீண்டும் ஒருமுறை அவனைப் பார்க்க வைக்கிறது. இவள் தன்னைப் பார்க்கிறாள் என்று தெரிந்து கொண்டு அந்த இளைஞன் அவளைப் பார்த்துக் கண்ணடிக்கிறான். சீறி எழும்பிய அவள், நேராக அவனிடம் சென்று கன்னத்தில் ஒரு அறை கொடுக்கிறாள். அங்கே பெரிய ரசாபாசம் நிகழ்ந்து விடுகிறது.

ஒரு அசாதாரணமான பெண்மையின் வெளிப்பாடுதான் இது. மற்ற பெண்களாக இருந்தால் 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கி விடுவார்கள். 'என்னைப் பார்த்து ஒருவன் கண்ணடித்தான்' என்று தன் கணவனிடம் கூட சொல்லாமல் இருந்து விடுவார்கள். ஆனால் கண்ணம்மா அப்படியல்ல. எங்கே தவறு நடந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு மனோநிலை கொண்ட பெண்மையின் குணசித்திரம்தான் அது.

தன்னைப் பார்த்து கண்ணடித்தவனைப் போய் கன்னத்தில் அறைந்து விட்டு வந்தாலென்ன என்று மனதிற்குள்ளே மட்டுமே 100க்கு 99 பெண்

கள் நினைத்துக் கொள்வார்கள். ஆனால் இந்தக் கண்ணம்மா அந்த எண்ணத்தை மன திலே மட்டும் அடக்கிக் கொள்வதில்லை. நேராகச் சென்று செயலில் காட்டுவதில்தான் அவள் மனம் ஆறுதல் அடைகிறது.

அடிப்படையான இந்தத் தன்மையை ஒப்புக் கொண்டால்தான் அந்த குணசித்திரம் கண்ணம்மாவின் பல்வேறு dimensionகளைப் புரிந்து கொள்ள முடியும்.

கண்ணம்மா சிறுமியாக இருக்கும் போது தன்னுடைய பக்கத்து வீட்டில், பெண்ணைக் கொடுமைப்படுத்தும், ஆண் அதிகார வெறியுள்ள ஒரு கொடியவனின் அக்கிரமச் செயல்களை அடிக்கடி நேரிலே பார்க்க வேண்டிய நிலையில் இருந்திருக்கிறாள்.

மனைவியைத் தினமும் துன்புறுத்தும் அந்தக் கொடுமைக்காரப் புருஷன் ஒருநாள் தனது குழந்தையையே ரயிலுக்கு முன்னால் தூக்கி எறிகின்ற ஒரு கோரமான விபத்தை அவள் பார்க்க நேரிடுகிறது. இந்த பாதிப்பு ஏற்பட்டது அவளுடைய எட்டாவது வய தில். நேருக்கு நேர் பார்த்த அந்தக் கொடுமையான சம்பவத்தை மனதிலிருந்து எப்படியாவது எடுத்து எறிந்து விட வேண்டுமென்று ஒரு பக்கம் அவளுடைய உள்ளுணர்வு உறுத்திக் கொண்டே வருகிறது. இன்னொரு பக்கம் ஒரு பெண் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதையும் கொடுமைப்படுத்தப்படுவதையும் பார்த்த கண்ணம்மாவின் பிஞ்சு மனதிலே ஆண் அதிகாரத்தை எதிர்த்து நிற்க வேண்டுமென்கிற ஒரு ஆவேசம் வெறியாக உருவெடுத்து இந்தக் 'கோபாவேசம்' அவளிடம் ஒரு obsession ஆக வளரத் தொடங்குகிறது. சின்னச் சின்னத் தவறுகளையும் கண்டிக்கிற அல்லது உடனுக்குடன் தண்டிக்கிற மனப்பான்மையை அவளிடம் விசுவரூபமாக்கிக் கொடுக்கிறது. ஆண் அதிகாரத்தை எதிர்த்து நிற்கும் எந்தப் பெண்ணும் ஆணும் இ வ ள ரு

நெஞ்சில் ஒரு உன்னத இடத்தைப் பிடிக்கிறார்கள்.

அந்த வரிசையிலேதான், பெண்களை எப்பொழுதும் உயர்வாகவும் உன்னதமாகவும் பராசக்தியின் உருவமாகவும் பாடிய பாரதியின் பாதிப்பு அவளைப் பெருமளவில் ஆட்கொள்கிறது. பாரதி மீது அபரிமிதமான பக்தியும் ஆர்வத்தையும் வளர்த்து விட்டது.

பாரதி பக்தையாக இருப்பவளை கடைசியில் ஒரு மனநோயாளியென்று காட்டியிருக்கின்றாரே என்று ஒருசிலர் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

பாரதி பக்தையாக இருந்த கண்ணம்மா திடீரென்று மனநோயாளியாகவில்லை. சிறு வயதிலே மிகவும் மன அதிர்ச்சிக்குள்ளான கண்ணம்மா, போகப் போக பாரதி பாடல்களினால், அவரது 'புதுமைப் பெண்' கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டாள் என்பதுதான் உண்மை.

கண்ணம்மா என்கிற இந்தக் கதாபாத்திரம் ஒரு 'மனநோயாளி' என்று சொல்லும் போதே அந்தப் பாத்திரத்தின் மகத்துவமும் புனிதமும் கெட்டுப் போகிறது எனவும் அந்த குணசித்திரத்திற்கு ஒரு அநீதி இழைப்பதாகவும் எனக்குப்பட்டது.

Extremity is not madness.

எந்தச் சம்பவத்தை மறக்க வேண்டும் என்று அவள் நினைக்கிறாளோ அந்தச் சம்பவத்தினாலேயே அவளுடைய உள்ளுணர்வு ஆண் ஆதிக்கத்தை எதிர்க்கிற யார் மீதும் ஒரு பற்றுதலை உண்டாக்கி விடுகிறது. அதனால்தானோ என்னமோ அவள் படிப்படியாக வெறிபிடித்த பாரதி பிரியை ஆகி விட்டிருக்கிறாள்.

இந்தக் கண்ணம்மா பாத்திரத்திற்கு வேறு யாரால் உயிர் கொடுத்திருக்க முடியும் என்று எண்ணிப் பார்க்கிறேன். சரிதாவைத் தவிர வேறு யாருமே அந்தக் கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருக்க முடியாது என்பதை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்!

இந்தக் கதையையும் இந்த குணசித்திரத்தையும் சரிதா அவர்களிடம் முதன் முதலில் விவரித்து நான் சொன்னபோதே அவரது முகபாவங்களின் மாற்றங்களையும் சம்பவங்களை விவரிக்கின்ற மாத்திரத்திலேயே அந்தக் கண்ணில் தோன்றி மறையும் மின்னல்களையும் நான் கவனித்ததுண்டு.



• அக்னிசாட்சி (படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)

இரண்டே வருடத்தில் பத்து பதிப்பு

ரூ.410க்குரிய 5 நூல்களை ரூ.250க்கே தருகிறோம்.

சலுகை 8.5.95 வரை

ரூ. 410/-க்குரிய 5 நூல்களை ரூ.250/-க்கே தருகிறோம். *இந்தச் சலுகை இன்னும் சில நாட்களுக்கே!*

ரூ. 250/- அனுப்பினால் தங்களுக்குக் கிடைக்கும் நூல்கள்.

1) Dictionary (Rs.135/-),
2) Checkupyour Englishinaweek (Rs.60/-),
3) Letter Writing for all occasions (Rs.60/-),
4) ஆங்கிலப் பேராசான் (Rs.95/-),
5) வர்த்தமானன் இங்கிலீஷ் ஸ்பீகிங் கோர்ஸ் (Rs.60/-)

"முன்னுள்ளுவோனைப் பின் உள்ளினேனே!"

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் புலவர் ஒருவர் தன் பசி நீங்க எங்கெங்கோ அலைந்து திரிந்தார்! இங்குமங்குமாக ஏதோ ஓர் அளவு கிடைத்தது! இறுதியாக ஒரு வள்ளலை அடைந்தார்; 'போதும்! போதும்' என்று சொல்லுமளவு வாரி வாரிக் கொடுத்தான் அவ்வள்ளல்! புலவரின் பசி நிரந்தரமாகத் தொலைந்தது! எங்கெங்கோ அலைந்தோமே, முதலிலேயே இந்த வள்ளலைச் சந்தித்திருக்கக்கூடாதா, என்னே அறியாமை! முன்னரே சந்தித்திருக்க வேண்டிய ஒருவனைப் பின்னர் சந்தித்தோமே! என வருந்தியது அவர்தம் நெஞ்சம்! அதுபோல, இன்று ஆங்கில ஆர்வம் கொண்டவர் எங்கெங்கோ அலைந்து திரிந்து இறுதியாக எங்கள் நூல்களை வாங்கி மன நிறைவு பெறுகின்றனர்! 'முன்னுள்ளுவோனைப் பின் உள்ளினேனே!' என நினைந்து ஏங்குகின்றனர்!

அப்படி என்னதான் இருக்கிறது இவற்றில்!



ஆங்கிலப் பேராசான்

ஆங்கிலம் கற்பிக்கும் யாராவது Participle verb பற்றி எமது ஆங்கிலப் பேராசான் போல் விரிவாக விளக்கியதுண்டா? எந்த ஓர் ஆங்கில நூலை எடுத்துக் கொண்டாலும் அதில் சரிபாதி வாக்கியங்களில் இந்த Participle verb-ஐ பார்க்கலாம். அதிலும் Past Participle இல்லையென்றால் ஆங்கில மொழியே இல்லை என்று கூறிவிடலாம். அப்படியானால் Participle verb-ஐ தெரிந்து கொள்ள வில்லையானால், ஆங்கிலத்தை முழுமையாகக் கற்க முடியாது என்பது புரிகிறதல்லவா? அப்படியானால், தள்ளிப் பாருங்கள் பக்கம் 331 முதல் 546 வரை Important Sentence Structure Part I; Part II (முக்கிய வாக்கிய அமைப்புப் பகுதி-I, பகுதி-II) என்னும் தலைப்பு களில் வாக்கிய அமைப்புப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள்!

ஆங்கிலம் கற்பிக்கும் யாராவது Idioms and Phrases மீது தனிக்கவனம் செலுத்தியிருக்கிறார்களா? எமது ஆங்கிலப் பேராசான் பக்கம் 547 முதல் 606 வரை காண்க!

ஆங்கிலம் கற்பிக்கும் யாராவது, இரண்டு சொல்லில் ஒரு வாக்கியத்தைத் தொடங்கிப் பதினாறு சொற்களை முன்னே முன்னே அமைத்து அவ்வாக்கியத்தை ஒரு ரப்பர் துண்டுபோல் இழுத்துக் காட்டியிருக்கிறார்களா? அப்படி ஓர் அழகைக் காண நினைத்தால் காணுங்கள், ஆங்கிலப் பேராசான் 478 முதல் 480 வரையில் உள்ள பக்கங்களில்! சிறு சிறு சொற்களை ஒன்று சேர்த்து எவ்வளவு பெரிய நீண்ட வாக்கியத்தையும் அமைக்க முடியும் என்ற நம்பிக்கையை இது ஊட்டும்.

ஆங்கிலம் கற்பிக்கும் யாராவது, Noun, Verb, Adjective, Adverb முதலான எண்வகை இலக்கணச் சொற்கள் வாக்கியத்தில் அமையும் பாங்கினை எடுத்துக்காட்டுடன் விளக்கி அவற்றின் அழகைப் புலப்படுத்தியதுண்டா? எமது ஆங்கிலப் பேராசான் பக்கம் 295 முதல் 323 வரை காண்க! அங்கே இரு கதைகளை எடுத்துக் காட்டி - அவற்றில் உள்ள வாக்கியங்களை எடுத்துக்காட்டி - அந்த வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு சொல்லின் இலக்கணத்தையும் எடுத்துக்காட்டி - எல்லா இலக்கணக் கூறுபாடுகளையும் அணு அணுவாக விளக்கியுள்ளோமே, அதன் அழகைக் காண நினைத்தால், காணுங்கள்!



வர்த்தமானன் இங்கிலீஷ் ஸ்பீகிங்கோர்ஸ்

ஆங்கிலம் கற்பிக்கும் யாராவது, எமது 'வர்த்தமானன் இங்கிலீஷ் ஸ்பீகிங் கோர்ஸ்'க்கு இணையாக வாய் திறந்து பேசியதுண்டா? இதில் ஒலி பெயர்ப்பும் உண்டு; மொழி பெயர்ப்பும் (Transliteration and Translation) உண்டு. 70 பாடங்களில் 606 பக்கங்களில் உரையாடற் கலையை உன்னதமாகத் தருகிறது இந்நூல்!



CHECK UP YOUR ENGLISH IN A WEEK

எந்தப்புத்தகமாவது இப்படி எண்ணிப் பார்த்ததுண்டா?


இதில் நேர்க்கூற்று அயற்கூற்று (Direct and Indirect) பற்றி 139 பக்கங்கள் (300 முதல் 439 வரை பயிற்சி விடைகளுடன்) தெளிவாக விளக்கியுள்ளோம். இந்தப் பகுதியை மட்டுமே கூட ஒரு தனிப் புத்தகமாக அமைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது!

ஏகநாதர், யாக்ஞவல்லி, காந்தியடிகள், விவேகானந்தர் முதலிய ஞானிகள், ஜான் கென்னடி, சேம்பர்லின் போன்ற அரசியல் மேதைகள், பல்கிவாலா போன்ற சட்ட நிபுணர்கள், இன்னும் ஏராளமான சான்றோர் கூற்றுகளை நேர்க் கூற்றாகவும், அயற் கூற்றாகவும் மாற்றும் முறை பற்றி அறிந்து கொள்ளலாம். இவற்றை இலக்கணமாக மட்டுமல்லாமல் தலை சிறந்த பொன் மொழிகளாகவும் கருதலாம்.

24 Special verbs பற்றித் தெளிவாக அறியலாம். ஆங்கில இலக்கணத்தின் ஆணி வேர்கள் இவை!


Should, Would, Could, Might ஆகியவற்றின் பல்வேறு பயன்பாடுகள், செய்தி வாக்கியங்கள், வினா வாக்கியங்கள், எதிர்மறை வாக்கியங்கள் (Affirmative, Interrogative, Negative sentences) அமைக்கும் முறை பற்றி அறிந்து கொள்ளலாம்.

Infinitive – வினையெச்சம் ஒரு விரிவான விளக்கம் பெற்றுள்ளது! If type நிபந்தனை வாக்கியங்கள் 6 வகைகளும் விளக்கப்பட்டுள்ளன.



LETTER WRITING FOR ALL OCCASIONS

ஆங்கிலம் கற்பிக்கும் யாராவது, கடிதம் எழுதுவது ஆங்கிலக் கல்வியின் முக்கியமான பகுதி என்பதனை உணர்த்தியதுண்டா? இதில் உள்ள 180 கடிதங்களைப் படித்துப் பாருங்கள்! வாய்ப்பைத் தருவது கடிதம்; வாணிபம் பெருக்குவது கடிதம்; பிறர் உதவியை நாடுவது கடிதம்; பிறர் கண்ணீர் துடைப்பது கடிதம்; விருந்துக்கு அழைப்பது கடிதம்; வருவேன் என்பது கடிதம்; வாரேன் என்பது கடிதம்; புத்தகம் அனுப்புக என்பது கடிதம்; இதோ அனுப்பி விட்டோம் என்பது கடிதம்; இதுவரை யாரும் காட்டாக் கலை, இக் கடிதம்; இப்போது காணுங்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன்.



VARTHAMANAN ENGLISH - ENGLISH - TAMIL DICTIONARY

ஓர் இலட்சத்திற்கும் அதிகமான சொற்கள்; 1718 பக்கங்கள்!

உச்சரிப்பில் இதுவரை யாரும் செய்யாத புதிய அணுகுமுறையை இதில் காணலாம்!

எடுத்துக்காட்டாக ஒரு சொல், Boomerang! இதனை எப்படி உச்சரிப்பது? பூமறாங்! இது போலவே எல்லாச் சொற்களுக்கும் எளிய முறையில் உச்சரிப்பு! குழப்பம் என்பது ஒரு துளியும் இல்லை!

Physics, Chemistry, Botany, Mathematics, Zoology ஆகியவற்றில் வழங்கும் சொற்களை அந்தந்தத் தலைப்புகளில் காணலாம்.

இலட்சக்கணக்கான சொற்கள் அடங்கிய ஒரு Dictionary–யில் காணப் படும் சொற்கள் அனைத்தும் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுவதில்லை! எனவே அன்றாட வாழ்க்கைக்கும் பயன்தரக்கூடிய சொற்களை இந்த Dictionary–யின் இறுதிப் பகுதியில் பக் 1473–லிருந்து தனித்தனிப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளோம்.

வீட்டுப் பொருள்கள் (Provisions) மரம், செடி, கொடிகள், காய்கறிகள் (Plants, Vegetables, Trees and Creepers), பூக்கள் (Flowers), வாசனைப் பொருள்கள் (Perfumes), உடலின் உறுப்புகள் (Parts of Body), உடற் குறைகள், நோய்கள் (Physical Defects and ailments), உறவு முறைகள் (Relations), பூச்சிகள், விலங்குகள் மற்றும் ஊர்வன (Insects, Animals and Reptiles), பறவைகள் (Birds), நீர் வாழ்வன (Aquatics), நவமணிகள் (Precious stones).

உடன்பாடு எதிர்மறையில் ஒத்த கருத்துடைய சொற்கள் (Synonyms and Antonyms).

பழமொழிகள் (Proverbs)

குழப்பம் தரும் சொற்கள் (Words often confused)

நாள்தோறும் புதிய புதிய சொற்களுடன் வளரும் பொலிவு மிக்கது ஆங்கில மொழி! எனவே புதிய சொற்கள் கடைசியில் இடம் பெற்றுள்ளன.

மூன்றும் வேண்டுவோர் ரூ.250/– மட்டுமே அனுப்பவும். உடனே புத்தகங்களை V.P.P. –யில் அனுப்புகிறோம். வழக்கம்போல் தபால் செலவினை மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

VARTHAMANAN PATHIPPAGAM
A.R.R. Complex, 141 Usman Road, T.Nagar, Madras - 17.
(Near Panagal Park)

நேரிலும் பணத்தினை செலுத்தி நூல்களை உடனே பெற்றுக் கொள்ளலாம்.

கதையைச் சொல்லி முடித்தேன்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு சரிதா சொன்னார் :

"இதைவிட மிகச் சிறந்த கதாபாத்திரம் என் திரை வாழ்க்கையில் எனக்குக் கிடைக்கப் போவதில்லை; 'கண்ணம்மா'வாக நடித்து முடித்து விட்டு நான் 'ரிடையர்' ஆகி விடலாம் என்று நினைக்கிறேன்."

சரிதா சில இடங்களில் மிகையாக நடித்திருக்கிறார் என்று ஒரு குற்றச்சாட்டும் ஒரு சிலரிடமிருந்து வந்தது. அந்த குணசித்திரத்தின் வெளிப்பாட்டை முழுவதும் புரிந்து கொள்ளாமல் சொன்னவர்களின் comment தான் அது.

எனக்கு வந்த ரசிகர் கடிதங்களில் பெரும் பகுதி பெண்கள் எழுதியவை. அவர்கள் இந்தக் கண்ணம்மாவின் கதாபாத்திரத்தை அற்புதமாகப் புரிந்து கொண்டு எழுதியிருந்தார்கள்.

"சரிதா உணர்ச்சிவசப்படும் கட்டங்களில் சினிமாத்தனமாக மென்மைப்படுத்தப்படாமல் இயல்பாக அந்த குணசித்திரம் எப்படி unrestrained ஆகக் கூச்சல் போட்டு பொங்கி வழியுமோ அப்படியே அதைச் சரிதா செய்திருப்பதும், செய்ய விட்டிருப்பதும் உங்களுக்கும் சரிதாவுக்கும் கிடைத்த முழுமையான வெற்றி" என்று எனக்கு ஒரு பெண் ரசிகை எழுதிய கடிதத்தை இந்த இடத்திலே நினைவுகூர்கிறேன்.

"ஹிஸ்டீரியா என்கிற மனநிலையை இதைவிட அழுத்தமாகவும் உணர்வுபூர்வமாகவும் dynamic ஆகவும் வேறு எந்த நடிகையாலும் வெளிப்படுத்தியிருக்க முடியாது" என்று இன்னொரு பெண் எழுதியிருந்தார்.

தமிழக அரசின் பரிசுக் குழுவும் சரியாகப் புரிந்து கொண்டது.

அந்த ஆண்டின் சிறந்த நடிகையாக கண்ணம்மா பாகத்தை ஏற்று நடித்த சரிதாவைத் தேர்ந்தெடுத்து கௌரவித்தது.

திரைப்படம் வெளியாவதற்கு முன் முழுப் படத்தையும் மேனா தியேட்டரில் நானும் எனது உதவியாளர்களும் சேர்ந்து பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. "Free ஆக இருந்தால் சிவகுமாரையும் சரிதாவையும் மட்டும் படம் பார்க்க வரச் சொல்" என்று புரொடக்ஷன் உதவியாளரிடம் சொல்லியிருந்தேன்.

ஏழெட்டு வரிசைகள் தள்ளி உட்கார்ந்து படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் சரிதா. நாலைந்து இருக்கைகள் தள்ளி சிவகுமார் அமர்ந்திருந்தார்.

முழுப் படமும் முடிந்தது. அரங்கத்தினுள் விளக்குகள் எரியத் தொடங்கின.

நான் எழுந்தேன். மூலைக்கொருவராக உட்கார்ந்து பார்க்கும் என் உதவியாளர்களையும் எடிட்டர்களையும் தேடினேன். எல்லோரும் எழுந்து என்னிடம் வந்தார்கள். சரிதா இருந்த இடத்தைப் பார்த்தேன். இருக்கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தார். எதிர்ப்பக்கம் சிவகுமாரைப் பார்த்தேன். அவர் சரிதாவை தோற்கடித்துக் கொண்டிருந்தார். கதறிக் கதறி அழுது கொண்டிருந்தார் சிவகுமார்.

அருகில் சென்று 'சரிதா'வைத் தட்டி எழுப்பினேன். திடீரென்று இருக்கையிலிருந்து எழுந்தவர், 'பட்'டென்று தரையில் விழுந்து என் கால்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது கொண்டேயிருந்தார்.

அவரைச் சமாதானம் செய்வதற்குள் போதும் போதுமென்று ஆகி விட்டது.

சாதாரணமாக படம் பார்க்கும் போது நெகிழ்ச்சி ஏற்படுகின்ற நேரங்களில் கண்களில் நம்மையறியாமலேயே கண்ணீர் வழிந்தோடும். அது மற்றவர்களுக்குத் தெரிந்து விடக் கூடாதே என்று ஆண்கள், விளக்குகள் போடப்படுவதற்கு முன்பே கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு பாதிப்பும் ஏற்படாதது போல் ஒரு அசட்டுச் சிரிப்புடன் எழுந்து நகரத் தொடங்குவார்கள்.

ஆனால் சிவகுமார் அதற்கெல்லாம் கவலைப்படவேயில்லை. எங்கள் மொத்த 'யூனிட்'டும் பார்த்துக் கொண்டே நிற்க... அவர் விக்கி விக்கி அழுது தீர்த்து விட்டுத் தான் இருக்கையை விட்டு எழுந்தார்.

சிவகுமார், சரிதா இருவருடைய ஈடுபாடுமே அந்தப் படத்தைப் பொறுத்தவரை அப்படி முழுமையாக, பூரணமாக இருந்ததால் தான் அந்த அளவிற்கு உணர்ச்சிவசப்பட்டு அழுது கொண்டிருந்தனர்.

எனக்கு அப்பொழுதுதான் தோன்றியது:


"The product has already paid me wages.
I am not worried about the employer."

(தொடரும்)

"ஏன்டீ! ஊரிலிருந்து எங்கம்மா வருவதாக லெட்டர் வந்ததா?"

"ஆமா, எதை வைச்சுக் கேட்டீங்க?"

"உன் மூஞ்சி பேய் அறைஞ்ச மாதிரியிருக்கவே கேட்டேன்!"



தி.மு.க.-காங்கி



• தனித்தமிழ் விஷயம்



• புலிகள் பிரச்னை



• காஷ்மீர் பிரச்னை



• ஜொல்லாட்டம்!



• கருத்துக் கேட்டால்...?



● **புளியரை கணேசன், சென்னை.**

? "விதிகளுக்குப் புறம்பாக கொடைக்கானல் ஓட்டலுக்கு அனுமதி வழங்கவில்லை" என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் கூறியிருக்கிறாரே?

! ஊழலுக்காக இவர்கள் உருவாக்கிய புதிய விதிகளைக் குறிப்பிடுகிறார் போலும். அதையும் உயர்நீதிமன்றம் பலமாகக் கண்டித்துள்ளது.

● **ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.**

? " 'ஜெ' ஆட்சியை வீழ்த்த வருபவர்களின் காலைத் துண்டிப்பேன்" என்கிறாரே கு.ப.கிருஷ்ணன்?

! இந்த லட்சணத்தில் சு.சுவாமி வன்முறையைத் தூண்டிவிடுவதாக அம்மையார் குறைபட்டுக் கொள்வதுதான் ஆச்சர்யம்!

● **இரா. சுப்பிரமணிய பாரதி, மேலூர்.**

? 'ஜெ' மீண்டும் முதல்வரானால்?

! ஊழல்கள் மீண்டும் தொடரும்; கட்-அவுட்கள் மீண்டும் உயரும்; எதிர்க் கட்சியினர் மீண்டும் எகிறி குதிப்பார்கள்; சு.சுவாமி மீண்டும் வழக்கு போடுவார்; 'ஜெ' மீண்டும் முதல்வரானால்?' என்ற கேள்வியை மீண்டும் மேலூர் சு.பாரதி பத்து தபால் கார்டுகளில் எழுதி அனுப்பவார், தராசு பதிலுக்கு!

● **வாசுதேவன், பம்பாய்.**

? புதுக்கோட்டை இடைத் தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடப் போகிறதாமே?

! பொதுத் தேர்தல் நெருங்குவதால், இடைத் தேர்தல் தற்போது வேண்டாம் என்ற பல கட்சிகளின் கருத்தை சேஷன் ஏற்றுக் கொள்வதே நல்லது.

● **சுந்தர் அழகேசன், திருச்சுழி.**

? "தமிழ்ப் பற்று மிக்க ஒரு சர்வாதிகாரத் தலைவன் கீழ் தமிழனுக்கென்று தனிநாடு அமைத்தாலொழிய தனித் தமிழ் என்ற விஷயம் சாத்தியமாகாது" என்ற வைரமுத்துவின் கூற்று...?

! "மொழி மாறலாம், இனம் ஒன்றுதான், நம் இந்தியா, அது ஒன்றுதான்" என்று பாடியவரும் வைரமுத்துதான். ஆகவே அவர் எந்த சந்தர்ப்பத்தில் எதை உணர்த்த இப்படிப் பேசினார் என்று கவனிக்க வேண்டும்.

● **பி. பார்த்திபன், குழித்தலை.**

? சந்திரிகா - புலிகள் பிரச்னை; பேனசிர்- காஷ்மீர் பிரச்னை - சிறந்த முறையில் சிக்கெடுப்பவர் யார்?

! சந்திரிகா சிக்கெடுக்க முயற்சி செய்கிறார்; பேனசிர் சிண்டு முடிந்து கொண்டிருக்கிறார்!

● **எம். இரத்தினவேல், பொன்மலை.** ❐

? காரைக்குடியில் பழ. கருப்பையாவின் உண்ணாவிரதம் குறித்து?

! அது அரசியல் நோக்கிலான உண்ணாவிரதம் அல்ல; மக்களின் அடிப்படைப் பிரச்னையான தண்ணீருக்கான போராட்டம். அதை அரசியலாக்கி ஆளும் கட்சியினர் சத்தியாகிரகிகள் மீது தாக்குதல் நடத்தியது அநாகரிகம். பிரச்னையைப் புரிந்து கொள்ளாமல் உண்ணாவிரதிகளைக் கைது செய்வதே இலக்காக அரசும், அதன் அங்கமான போலீஸூம் நடந்து

...கருணாநிதி

...ஸ் கூட்டணி பற்றி...

கொள்வது சர்வாதிகாரப் போக்கு. மக்களின் கருத்தறிந்து, பேச்சுவார்த்தைகள் நடத்தி, தீர்வு காண்பதுதான் ஜனநாயகம். திருப் பத்தூர்வாசிகளுக்கு தண்ணீர் கிடைக்க ப. சிதம்பரத்தின் யோசனை அரசின் கவனத் துக்குரியது.

● **மு. இரவிசந்திரன், சேலம்**

? "நீட்டிய மரத்தையே பதம் பார்ப்பவர் வைஜயந்திமாலா" என்கிறாரே அமைச்சர் கண்ணப்பன்?

! கண்ணப்பனின் கண்மூடித்தனமான தாக்கு தலுக்கு, வார்த்தைக்கு வார்த்தை வைஜயந்தி கொடுத்திருக்கும் பதிலடி, அமைச்சரை நன் றாகப் பதம் பார்த்துத்தான் இருக்கும்! ராகம் - பாவம் - தாளம் எதிலும் பிசிறு தட்டாத சொல்லாட்டம்!

● **இளங்கதிரவன், கோவை.**

? மன்னிக்கக் கூடாத மாபெரும் குற்றம் எது?

! இருபதுபேர், ஐம்பது பேர் என்று அப்பாவி தமிழக மீனவர்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றிக் கொண்டுபோவது குற்றம். இதில் உள்நோக்கம் நமக்குப் புரிகிறது. ஸ்ரீலங்கா அரசுதான் காரணத்தோடு கண்டுகொள் ளாமல் இருக்கிறது என்றால் இந்திய அரசும் பாதுகாப்பு தரவில்லை எனில் அது புலி களின் நடத்தையை விடப் பெரிய, மாபெரும் குற்றம்.

● **அ. பழநி, வெங்கிட்டம்பாளையம்**

? தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி பற்றி கருணாநிதி உம்பிடம் கருத்துக் கேட்டால் நீர் என்ன சொல்வீர்?

! அவர் கேட்கவும் மாட்டார்; நான் பதில் சொல்லவும் அவசியமிராது. அவர்தான் வாராவாரம் கல்கி படிக்கிறாரே. சில தலை வர்கள் போல் பத்திரிகை படிப்பதையே நேர விரயம் என்று எண்ணுபவரல்ல அவர். நமது சில கருத்துக்கள் அவருக்கு ஏற்புடையதாக இல்லாமல் போகலாம்; ஆனால் தெரிந்து கொள்ளாமல் இருக்க மாட்டார்.

● **வி. மோகன், நெல்லிக் குப்பம்.**

? ஜெ. மீது வழக்குப் போட்டதால் அ.தி.மு.க.வினர் கொதித்துப் போயிருக்கும் இந்த நேரத்தில் சு.சுவாமி பொதுக் கூட்டம் போட்டுப் பேசுவது சட்ட ஒழுங்கை சீர் குலைக்கத்தானே?

! கூட்டம் போட்டுப் பேசுவது அவருக்குள்ள ஜனநாயக உரிமை. அதைத் தடுக்க அவர்மீது அ.தி.மு.க.வினர் தாக்குதல் நடத்துவது மடமை. இந்த திட்டமிட்ட சதியைக் கண்டு கொள்ளாமல் இருப்பதோடு மறைமுகமாக ஊக்குவிப்பது ஜெ. அரசின் கொடுமை.

> ❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
> எம். ரத்னவேல்,
> பொன்மலைப்பட்டி,
> திருச்சி - 4.

● **எஸ். அருள்மொழி, காட்டூர்.**

? தமது பெருந்தன்மையைக் காங்கிரஸார் புரிந்து கொள்ளவில்லை என்கிறாரே ஜெ!

! உண்மைதான். குன்றக்குடி அடிகளார் மறைந்ததற்கு இரங்கல் தீர்மானம் சட்ட மன்றத்தில் நிறைவேறுவதைத் தாமதம் செய்த பெருந்தன்மை; அது மறுநாள் நிறைவேறிய சமயம் அவைக்கே வராமலிருந்த பெருந் தன்மை இதையெல்லாம் புரிந்து கொள்ள முடியாமல் காங்கிரஸ் தவிப்பது உண்மையே!

● **ச. பீர். அக்பர் அலி, திருச்சி - 8.**

? தமிழகத்தின் சுமைதாங்கி யார்?

! முன்னர் பீஷ்மநாராயண்சிங்கிடம் ஓர் ஊழல் பட்டியல்; சென்னாரெட்டியிடம் சு. சுவாமி தந்த ஊழல் பட்டியல், மறுபடி சென்னாரெட்டியிடம் மு.க. தந்துள்ள ஆயிரம் கோடி ஊழல் பட்டியல்; போதாக் குறைக்கு கிரானைட் விவகாரத்தில் மாபெ ரும் ஊழல் என்று பா.ம.க. தலைவர் தரப் போகிற ஊழல் பட்டியல்... இத்தனை ஊழல் பட்டியல்களைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கும் ஜெயை விட உறுதியான சுமைதாங்கி தமிழகத்தில் வேறு யார்?

கருத்துக் கேட்டால்?

வட்டமேஜை

சரிதன்னே குருவாயூரப்பா?

♦ முதல்வர் ஜெ. தனது பதவியை ராஜினாமா செய்தால் ஒருவேளை நீங்கள் அவரைப் பாராட்டி ஒரு பக்கத்திற்கு கல்கியில் தலையங்கம் எழுதலாம்! அதற்காகப் போய் அவர் தனது பதவியை ராஜினாமா செய்வாரா? மேலும் இன்று ஊழல் செய்யாத அமைச்சரே கிடையாது. ஊழல் செய்த அமைச்சர்களை எல்லாம் ராஜினாமா செய்யச் சொல்லும் சுப்ரமணிய சுவாமி உலக உத்தமரா? இல்லை கவர்னர் சென்னா ரெட்டிதான் காந்தியா? ஒரு கோடி லஞ்சம் வாங்கியதாகச் சொல்லப்படும் பிரதமர் ராவ் மீது சு. சுவாமி ஊழல் புகார் கூறவில்லையே, ஏன்?

எம். ராஜேந்திரன்.
லால்குடி.

1000000000000000000000000000000000....

♦ 1000000000000000000000000000 கல்கிகள் கத்தினாலும், பக்கம் பக்கமாய் எழுதினாலும், ஜெ நினைக்கும் வரை அவர் தான் முதல்வர்! "எழுத்தாசான் பாலகுமாரனு"க்காக, உங்கள் மட்டமான பத்திரிகைக் கொள்கையைச் சகித்துக் கொண்டு, கல்கியை வாங்குகிறேன்.

வி. பாலாஜி.
சென்னை - 11.

♦ அரஸின் கார்ட்டூன் பார்த்தேன். வலையில் சிக்கியிருப்பது சாதா மீன் அல்ல! விலாங்கு மீனாக்கும்! எப்படி நழுவ வேண்டும் என்று விலாங்குக்கு யாரும் சொல்லித் தர வேண்டியதில்லை!

சிவகாமி கணேஷ்.
சென்னை - 30.

♦ 'ஐஸ்'வர்யாவின் ஜில் விஜயத்தின்போது கூடவே ரவுண்ட்-அப் போன உங்களுக்கு ரொம்பத்தான் எகத்தாளம். பின்ன, கடைசில பெப்ஸிகாரங்களோட வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டீரே?!

ஏழுகிணறு எஸ். பாலாஜி.
சென்னை - 1.

♦ இனி நாட்டில் மாதம் மும்மாரி பொழியப் போகிறது. மன்னரும் மக்களும் சுபிக்ஷமடையப் போகிறார்கள். பாலும் தேனும் ஆறாகப் பாயப் போகின்றன! என்னங்க புரியலையா? ஐஸ்வர்யாவுடன் சென்ற உமது நிருபர் எழுத நினைத்து, மறந்த வரிகள் தான்!

புளியரை கணேசன்.
சென்னை - 30.

♦ லல்லுவையே தூக்கியடிக்கும் இந்தக் குல்லூ யாருங்க? மனிதர், வேதாளத்தோட வேடிக்கையாக விளையாடி, எங்களை விலா நோக வைத்து விட்டாரய்யா!

இரா. கல்யாணசுந்தரம்.
மதுரை - 9.

♦ எல்லாத் தரப்பினருக்கும் குளுமையாக இருக்கும்படியாக இவ்வார இதழை ஜில் ஸ்பெஷலாகத் தயாரித்துவிட்டு, தலையங்கத்தில் மட்டும் முதலமைச்சருக்கு ஜில்லென்று சூடேறும்படியாக எழுதியிருக்கிறீர்களே. கருத்துக்கள் நியாயமாக இருந்தாலும், உமக்கு இது நியாயமா அய்யா?

டி. கே. சுப்பிரமணியன்.
திருப்பரங்குன்றம்.

♦ குளிர்பானங்கள் (நீர் மோர், பானகம், பதனீர்) பற்றிய நா. வே. அருளின் கவிதையைப் படித்ததும் என் உடலெங்கும் உஷ்ணம் ஏறியது. அவ்வளவு சமுதாயத் தாக்கம்!

ஜெகவை பால்ராஜ்.
மதுரை - 9.

♦ பாவம், கருணாகரன். பதவிக்காக இப்படி நேரம், காலம், ஜோசியம் என்று அலைந்த காலத்தில் மக்களின் நன்மைக்காக சிறிதேனும் அலைந்திருந்தால் கூட மக்களின் நல்லெண்ணம் முதலில் முன்வந்து அவரது பதவியைக் காப்பாற்றியிருக்கும். ஏனெனில் அவர் வணங்கும் குருவாயூரப்பனே மக்கள் பக்கம்தான். எந்தா, சரிதன்னே, குருவாயூரப்பா?

பி. காந்திமதி.
மதுரை.

♦ தன் கணவனின் மனத்தைப் புரிந்து கொண்டு தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு - அவன் உள்மனது ஆசைப்பட்ட "பாரதி" என்ற பெயரை சூட்டிய சாந்தா, உண்மையிலேயே உயர்ந்த மனசு கொண்டவள்தான்! மழை நின்ற பின்பும்... வாசித்து முடித்த பின்பும்... மனத்தில் நின்ற கதை!

என். சண்முகம்.
திருவண்ணாமலை.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka